April - 2018 | Volume-4 | issue-43

# காட்டாறு

அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

ஏப்ரல் - 2018 பருவம் - 4 புனல் - 43 தனிச்சுற்று நன்கொடை ரூ 20

for private circulation only



## அரசியலில் பக்தி-தனிநபர் வழிபாடு, சீரழிவுக்கும் சர்வாதிகாரத்துக்கும் இட்டுச் செல்லும்!



அபிநய சக்தி
மனிதி அமைப்பு

# கிழித்தகோட்டைத் தாண்டாத கதாநாயகிகளும் வில்லிகளும்

வில்லியாகக் காட்டப்படுபவர் - பார்வதி உன் கண்ணு ரொம்ப அழகா இருக்கு

பார்வதி- நன்றிம்மா, நான்கேட்டா என்ன வேனுன்னாலும் செய்வியா,

பார்வதி- செய்வேன் மா நீங்க இந்த விட்டு முதலாளி அம்மா நீங்க கேட்ட உயிர கூட குடுப்பேன்.

வில்லியாக காட்டப்படும் பெண்- அப்ப உன் கண்ண கொடு....

நேராக சென்று சுவரில் மாட்டி இருந்த வாலை எடுத்து கண்களை குத்தப் போகிறாள்.....

பிறகு என்ன நடந்து இருக்கும் என தொடர் களுக்காக நம் கண்களைத் தாரை வார்த்திருக்கும் தொடர்களில் மூழ்கி முத்தெடுத்திருக்கும் நமக்கு சொல்ல வேண்டியது இல்லை....

ஜீ தமிழ் தொலைக்காட்சியில் வரும் செம்பருத்தி எனும் தொடரில் வரும் ஒரு காட்சியில் கதாநாயகியாக வரும் பெண்ணின் செயல் தான் இது. இது மட்டும் அல்ல 7 மணியின் இருந்து 10 மணி வரை தொடர்ச்சியாக எல்லா சேனல்களிலும் இதே குப்பைகள் தான். ஏற்கனவே நுகர்விலும், அடிமைத் தனத்திலும் அமிழ்ந்து இருக்கும் பெண்களை அவர்களின் எண்ணங்களை நம்பிக்கைகளைச் சொரிந்து விடுகிற வேலையை நன்றாக இந்தத் தொடர்கள் செய்கின்றன.

வீட்டு வேலை செய்து உழைத்து பொருள் ஈட்டும் நம் உழைக்கும் பெண்களை மிக கேவலப் படுத்துகிறார்கள். இது போன்ற தொடர்களில் வேலை செய்தால் அதற்கான ஊதியம் கொடுக்கப் போகிறார்கள். இதில் உப்பு சக்கரை, விசுவாசம் என மோசமான அடிமை மனோபாவத்தை வளர்க்கும் அதிகார வர்க்கத்தை உசுப்பி விடும் வசனங்கள் அதிகம் உள்ளன. சகிக்கவில்லை. வீட்டை விட்டுக் கொஞ்ச காலமாகத்தான் பெண்கள் வெளியே வர ஆரம்பித்து இருக்கிறார்கள். வரவேற்பு அறை யிலேயே முடக்கத் தந்திரமான ஒரு தொடர் நடவடிக்கைதான் இந்தத் தொடர்கள்.

பெண்கள் சமூகத்தில், குடும்பத்தில் தான் ஏற்படுத்த முடியாத, இல்லாத அதிகாரத்தை இந்தத் தொடர்களின் வழியே வந்துவிட்டதாகத் தன்னையே நம்பவைத்துக் கொண்டு திருப்தியடை கிறார்கள். இன்னும் சில பெண்கள் ஒரு படி மேலே போய் தன் சுய வாழ்வில் அப்ளை செய்கிறார்கள். இந்தத் தொடர்களில் வரும் கதாநாயகிகள் நல்ல பெண்களாக வந்து நமை அழவைத்து போவார்கள்.

அதாவது நல்ல பெண் என்று எதை சொல்ல வருகிறார்கள் என்றால், நிச்சயமாக தாவணியோ, புடவையோ அணிய வேண்டும். நீளமான முடி இருக்க வேண்டும். கண்டிப்பாகச் சில கன்ன அறைகளை, உதைகளை யாரிடமாவது வாங்க வெண்டும். வேலைக்காரியாக, சாதுவாக, அப்பா வியாக மொத்தத்தில் பெண்களுக்கான நான்காக ஆண்கள் பிடித்து தொங்கிக் கொண்டு இருக்கிறார்களே, அந்த நான்கைக் கொண்ட பெண்ணாய் இருக்க வேண்டும்.

குறிப்பாக, நிறைய அழ வேண்டும், பேச வேண்டுமா, இல்லையா என அன்றன்றைக்கான டி. ஆர்.பி. ஐ பார்த்து இயக்குனர் முடிவு செய்வார். பின்பு வில்லிகள் அவர்களும் பெண்களே. சத்தமாக பேச வேண்டும், நிறைய ஒப்பனை செய்ய வேண்டும், யாரையாவது கொடுமைப்படுத்த வேண்டும். கதாநாயகி காதல் செய்பவனைக் காதலிக்க வேண்டும். ஆனால் கதாநாயகன் யாரைக் காதலிப்பார் எனச் சொல்ல வேண்டியதில்லை. ஆனால் ஒரே ஒரு விசயத்தில் மட்டும் வில்லி களாகவும் கதாநாயகிகளாகவும் சித்தரிக்கும் கதாபாத்திரங்களில் மாற்றம் இருக்காது.

அதாவது அவர்கள் பார்வையில் பண்பாடு, கலாச்சாரம் தாண்டி நடந்து கொள்ள, பேச மாட்டார்கள். அதே போல தொடர்களில் வரும் பெண்களுக்கு பெரிய இலட்சியமோ, திட்டங்களோ ( நான் தொடர்களில் வரும் சதித்திட்டத்தைச் சொல்லவில்லை) கனவோ இருப்பதாய்க் காட்ட மாட்டார்கள். காட்டினால் ஆண்களுக்கு ஆபத்தாகுமே! படிப்பு, வேலை, சாதனை என எந்த நல்ல விசயங்களும் கதாநாயகிகளுக்காகவோ வில்லி களுக்காகவோ இவர்கள் எழுதிய ஸ்கிரிப்ட்டில் இல்லை, இருக்கவும் கூடாது என நினைக்கிறார்கள் போலும். ஆனால் அவர்களுக்கும் கனவு இருக்கிறது அது திருமணம், குழந்தை, நான்கு சுவர் என்கிற அந்த குடும்ப வட்டம்.

மேலும் இந்தத் தொடரில் வரும் எல்லா ஆண்களும் பாவப்பட்ட அப்பாவிகள். எல்லா வற்றிற்கும் காரணம் பெண் தான் என்பது போலவே எல்லாத் தொடர்களும் இருப்பதைப் பார்க்க முடியும். மானமும், அறிவும் மனிதற்கு அழகு என பெரியார் சொன்னது போல அறிவுள்ள யாரும் இதைப் பார்க்க மாட்டார்கள். இந்தத் தொடர்களின் உச்ச காமெடியாக எனக்கு கிச்சு கிச்சு மூட்டியவை வில்லியோ, கதாநாயகியோ திருமணம் ஆனவுடன் நடுவகிடு எடுத்து குங்கும் வைத்து, புடவை அணிந்து ஆண்களின் ஆதிக்கத்திமிரை நன்றாய்ச் சொரிந்து விடுவார்கள்.

என்ன ஒரு மோசமான மன நிலை? இப்போது நான் சொன்னவைகள் எல்லாம் தொடர்களின் காட்சிகள் எனக் கடந்து போய் விட முடியாது. தினமும் ஸ்லோ பாய்சன் சாப்பிடுவது போன்றது இந்தத் தொடர்கள். அடிப்பது வன்முறை. ஆனால் தினமும் அப்பாவியாகக் காட்டப்படும் ஆண் ஒரு பெண்ணை அடித்துக் கொண்டே இருப்பார். நமக்கும் அது நியாயம் தான் என்கிற எண்ணத்தையே அந்தப் பெண்ணின் கதாபாத்திரக் கட்டமைப்பை ஏற்படுத்தி இருப்பார்கள். “குடி போதை உடல் நலத்திற்கு கேடு” எனப் போடுவது போல அடிப்பது வன்முறை எனப் போட வேண்டும் என்கிற கோரிக்கையை நாம் காட்சி ஊடகங்களுக்கு வைக்க வேண்டும் காத்திரமாய்.

அதாவது அடிப்பதே வன்முறை. அதைத் தாண்டி ஒரு காட்சிக்கு அது அவசியம் எனில், அடிப்பது வன்முறை என போட வேண்டும் என்கிற கோரிக்கையை வைக்க வேண்டும். இந்த அடிகளை வன்முறை என நாம் நினைக்காமல் ரசித்துக் கடந்து போவதன் நீட்சிதான், நடுரோட்டில் பெண்ணை அடிப்பது, கொலை செய்வது, ஆசிட் அடிப்பது.

இரண்டிற்கும் பெரிய வேறுபாடு இல்லை. குடும்ப அமைப்பு முறையின் வழித்தோன்றலில் தாய் வழிச் சமூகத்தை வேரோடு பிடுங்கி எறிந்து விட்டு, தந்தை மையச் சமூகத்தை, குடும்பக் கட்டமைப்பை அவர்கள் வசதிக்கு ஏற்படுத்தி அரியணையில் உட் கார்ந்து இருக்கும் ஆண்கள் தொடர்களில் திட்ட மிட்டு உருவாக்க நினைப்பது பெண்ணே குடும்பத்தை ஆள்கிறாள் என.

நிதர்சனம் வேறு பெண்கள் கங்காணிகள், அடிமைகள் மட்டுமே. மேலும் கதாநாயகனை மட்டும் தான் கதாநாயகி காதலிக்க வேண்டுமா? அவள் ஒரு பெண்ணைக் காதலிப்பவர் போலவும், அல்லது திருநராக மாற நினைத்து அதற்கான தேடலில் செயலில் இருப்பவராகவோ ஏன் தொடர்கள் வரவில்லை? நம் நாட்டில் திருநர்கள் இல்லையா? ஓரினச்சேர்க்கையாளர்கள் இல்லையா? சாதனைப் பெண்கள் இல்லையா? அவர்கள் முற்போக்களர்களாக இல்லையா? குடும்பக் கட்டமைபை வளர்க்கவும் அதே நேரத்தில் பெண்ணிற்கு மாற்றைக் கொடுக்கவும் கூடாது.

ஆண்கள் தான் இப்படித் தொடர்கள் இயக்கவும், தயாரிக்கவும் செய்கிறார்கள் என்றால் பெண்கள் எடுக்கும், தயாரிக்கும் தொடர்களின் காட்சிகளும் ஆண்களின் மறு பிம்பமாகவே இருக்கிறது. சன் சேனலில் வரும் ஒரு ‘வாணி ராணி’ என்கிற இரட்டை வேடத் தொடரில் அதில் அப்பாவியாய் ஒருவர் அறிவாய் ஒருவர். ஆனால் எல்லா மக்களுக்கும் அந்த அப்பாவிப் பெண் தான் பிடிக்கிறது. இது தான் நுண் அரசியல்.


அவரின் நிஜ வாழ்வில் இதுபோல அப்பாவி யான, அறிவில்லாத, சுயமறியாதை இல்லாத பெண்ணாய் அவர் இருக்க ஆசைப் படுவாரா? திரையில் காசுக்காகத் தான் காட்டும் பிம்பம் அதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். மேலும் தொடர்களில் வரும் அத்தனை ஆண்களும், பெண்களும் நிஜ வாழ்வில் இதேபோல வாழ் வார்களா? வாழத்தான் முடியுமா? அதே போல இவர்கள் இப்படியான குடும்ப, கலாச்சார, பண்பாட்டுக் கட்டமைப்புகளைக் கட்டிக்காக்கச் சொல்வது, ஃபாலோ செய்யச் சொல்வதும் உழைக்கும் மக்களைத்தான். அவர்களுக்கான வாழ்க்கை முறையாக நிஜத்தில் அது நிச்சயமாக இல்லை. பின்பு யார் ஏமாறுகிறோம் என்பதை யோசிக்க வேண்டும் நாம்.

மேலும் எல்லா சேனல்களும் சமீபகாலமாகக் காவியாகிவிட்ட தன்மையை நாம் கண் முன்னே பார்க்கிறோம் அந்தந்த சேனல்களின் லோகோக்கள் கோவில் உச்சியில் இருந்து வருவது போல காட்டப்பட்டு காவி நிறத்தில் மாறி இருக்கிறது. மிக நுணுக்கமாகக் கவனிக்க வேண்டிய அரசியல் மாற்றம் இது. இப்போது வரை எந்தப் படங்களும், தொடர்களும் பெண்களின் கண்கள் வழியாக அவர்களின் அக உலகை சரியாகச் சொல்லவோ, காட்டப்படவோ இல்லை.

பெண் வாழ்வு, அவள் குறித்த பிம்பம், அவளின் பேச்சு எல்லாம் ஆண்கள் உருவாக்கி அவர்களின் உருவகமாகக் காட்டப்படுவதுதான்; அல்லது பெண் இப்படித்தான் இருக்க வேண்டும், இப்படி இருந்தால் தான் நீங்கள் பிழைப்பீர்கள் என்கிற எச்சரிக்கையாகக்கூட இருக்கலாம். ஆனால் அதற்கும் வழி இல்லை இல்லை இந்த புணரிக் கொள்ளும் காவி தேசத்தில்...



டாக்டர் காஞ்சா அய்லயா
தமிழில்: பெரியகுளம் குமரேசன்



# தலித் வசந்தம்

ஒரு நாள் நானும் என் நண்பரும் பேசிக் கொண்டிருந்தோம், அப்போது அவர் இந்த உலகத்தில் பல்வேறு முனையங்களிலிருந்து எழும், கிருஸ்தவ, முஸ்லீம், புத்த மதத்தீவிர வாதத்தைப் போலவே இந்தியாவும் தன்னை ஒரு இந்துத் தீவிரவாதத்தின் சாட்சியாக இந்த உலகிற்குக் காட்டிக்கொண்டு இருக்கிறது என்றார். உலகில் எந்த ஒரு மதத்தீவிரவாதக் கட்சியோ அல்லது அமைப்போ நடத்தும் ஜனநாயக ஆட்சி என்பது நிலைக்காத ஒன்றாகும். இது சம்பந்தமாக மதத் தீவிரவாதம் ஆளும் மாநிலங்களில், அந்த அரசுக்கும் ஜனநாயக அமைப்புகளுக்கும் உள்ள உறவுமுறை பற்றிய என்னுடைய ஆராய்ச்சியில் நான் கண்டதும் என்னுடைய நண்பரின் ஒன்றாகவே இருந்தது.

ஐரோப்பாவில் கிறிஸ்தவ மதத்தீவிரவாதம் ஜனநாயக நிறுவனங்கள் இயங்க அனுமதிப்ப தில்லை. அங்குள்ள போப் மற்றும் பிசப், பைபிளின் சட்டப்படிதான் நாடு இருக்கவேண்டும். மதச்சார் பற்றதாக இருக்கக் கூடாது என்று நினைத்தார்கள். இதன் காரணமாக மாக்கியவெல்லி உருவாக்கிய உடோப்பிய இளவரசர் மற்றும் ஜேம்ஸ் ஹோப்ஸ் இணைந்து மதத்தீவிரவாதத்தை ஒழிக்கத் தொடங் கினர். இருவரும் சேர்ந்து மத அதிகாரத்தை மறுத் தனர். இதனால் போப்புக்கும் பிசப்புக்கும் அரசு அதிகாரத்தைக் கைப்பற்றுவதில் பல போர்கள் நடந்தன. இப்படிப் போர்கள் நடைபெற்ற காலத்தில் தான் ஜான் லோக்கே, வால்டையர் மற்றும் தத்துவ வாதி ஜாக்கு ரெவ்சோ இணைந்து ஜனநாயகக் கட்டமைப்புகளுக்கான கோட்பாடுகளை உருவாக்கி னார்கள். இதில் மதமல்லாத அல்லது மதத்தை எதிர்க்கின்ற அரசியலமைப்புக் கோட்பாடுகளை உருவாக்கினார்கள். இதன் தொடர்ச்சியாக பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் ‘கடவுள்’ என்ற சொல்லைப் பயன்படுத்தத் தடை போடப்பட்டது.

பின்னர் கத்தோலிக்க மத அடிப்படை வாதிகளில் பிரிவு ஏற்பட்டு பிராட்டஸ்டண்டுகள் உருவாகினர். இவர்கள் அதிக சுதந்திரமாகவும். ஏழைகள் மற்றும் அடிமைகளின் ஆதரவாளராகவும் இருந்தனர். உழைக்கும் வர்க்கத்திற்கும் எதிராகவும் இருந்தனர். இந்தச் செயல்கள் ஒரு நவீன ஜன நாயகம், தனிமனித உரிமை மற்றும் சுதந்திரத்தை உறுதிப் படுத்த ஒரு இணைப்பாகப் பயன்பட்டது.

புத்தமதம் இருக்கும் நாட்டில் உதாரணமாக, சீனா, ஜப்பான், வியட்நாம், கொரியா மற்றும் மியான்மர் போன்ற நாடுகளில், மதமும், மதச்சார் பற்றவைகளும் எப்போதும் மோதிக்கொண்டே இருக்கும். இதன் மூலம் ஒன்று கம்யூனிஸ்ட்கள் ஆள்வதிலும் அல்லது சர்வாதிகாரிகள் ஆள்வதிலும் தான் போகும். புத்த பிக்குகளின் நாட்டை ஆள்வதின் மூலம் ஒரு நிலையான ஜனநாயக அமைப்பை ஒரு போதும் உருவாக்க முடியாது. அதற்கு ஒரு நல்ல உதாரணம் மியான்மர்.

இஸ்லாமிய நாடுகளில் இன்னும் இஸ்லாமிய மதக் கோட்பாடுகளிலிருந்து அவர்கள் வெளியே வரவில்லை. நாடு எப்போதும் குரானில் சொன்ன சட்டப்படிதான் நடக்கவேண்டும் என்கிறார்கள். ஒருபோதும் மதச்சார்பற்ற தன்மைப்படி நாட்டை வைத்துக்கொள்ளக் கூடாது என்று நினைக் கிறார்கள். ஒவ்வொரு இஸ்லாமிய நாடும் ஒவ்வொரு விதப் பிரச்சனையில் இருக்கின்றன. இந்தச்

சூழலினால் தான் "அரபு வசந்தம்" என்ற புரட்சி 2010 இல் ஏற்பட்டது. அதன் பிறகும் அவர்கள் அந்த மதத்தை விட்டு வெளியே வரவில்லை. மனிதனின் ஒவ்வொரு பகுதியும் குரான்படி தான் இயங்க வேண்டும் என்று வாதிட்டுக் கொண்டேதான் இருக்கிறார்கள். இஸ்லாமியர்களின் உலகத்தின் மனித உரிமையின் மகத்துவம் இன்னும் உறுதிப்படுத்தப் படாமலே இருக்கிறது.

பிஜேபி ஒன்றும் சுயமாக வளரவில்லை. தீவிர இந்துத்துவ அமைப்பான ஆர்.எஸ்.எஸ். மூலம் தான் அதன் வளர்ச்சி ஏற்பட்டது. ஆர்.எஸ்.எஸூம் மற்ற மத அமைப்புகளான கிருஸ்தவ, இஸ்லாமிய, மற்றும் புத்தமதம் போல், வேதத்தின் படிதான் அரசிய லமைப்பு இருக்கவேண்டும், மதச்சார்பற்ற அரசியல மைப்பு தேவையில்லை என்கிறது. பிஜேபி ஆர்.எஸ்.எஸ்-ன் உதவியுடன் இந்த நாட்டை 10 ஆண்டுகள் ஆண்டிருக்கிறது. இந்த பத்தாண்டில் ஜனநாயக அரசியலமைப்புகளில் அதிகமான பதற்றத்தைத்தான் உருவாக்கி இருக்கிறது. இந்த நாட்டில் மனுதர்ம மற்றும் வர்ணாசிரம கொள்கைகளை புகுத்த முயற்சி செய்து கொண்டு தான் இருக்கிறது. இது இந்து நாடு என்று வரையறுப்பதில் தான் அவர்கள் தீவிரமாக இருக்கிறார்கள். தேவையற்ற சாதி அமைப்புகளும், தேவையற்ற ஆன்மீக உரிமைகள் கொண்ட மதமும் இங்கு தான் உள்ளது.

தலித், இதர வகுப்பினர், மற்றும் பழங்குடி யினர்களுக்கு அரசியலமைப்புச் சட்டம் வழங்கிய அடிப்படை உரிமைகளைக்கூட இந்து மனுதர்மம் மறுக்கிறது. இந்த நாட்டில் மூன்றே மூன்று சாதிகள் தான் அரசியலமைப்பு, தங்களை மிகவும் பலவீனமானவர்களாக மாற்றியதாக உணர் கிறார்கள். அவர்கள், பார்ப்பனர், பனியா, மற்றும் சத்திரியர்கள். இவர்கள் இடஒதுக்கீடு, வன்கொடுமைத் தடுப்புச்சட்டம், ஆண், பெண், சட்டங்களுக்கு எதிரானவர்கள். மதச்சார்பற்ற சட்டம் மற்றும் அமைப்புகள் மூலம் தான் நாட்டில் பல சட்டங்கள் எஸ்.சி. எஸ்.டி, ஓ.பி.சி வகுப்பினரை சென்றடைந்திருக்கிறது.

தீவிர இந்துத்துவவாதிகள், அரசியலமைப் புக்கு எதிரானவர்கள் அதிகமாக காங்கிரஸில் இருந்தார்கள், இப்போதும் இருக்கிறார்கள். ஆனால் நேரு அவர்கள் ஒரு பார்ப்பனராக இருந்த போதிலும், தனது கொள்கைகளில் முதன்மையாக இந்துத்துவத்தை எதிர்த்தார். அது மட்டுமில்லாமல் காங்கிரஸ் தன்னிச்சையாகச் செயல்படும் அரசியல் கட்சியாக இருந்தது. ஆர்.எஸ்.எஸ் போன்ற இந்துத் தீவிரவாத அமைப்புகளின் கட்டுப்பாட்டில் இயங்க வில்லை. இடையில் இந்து மகா சபா, காங்கிரசைத் தன்னுடைய கட்டுப்பாட்டில் கொண்டுவர முயற்சித்தது. அதனை காந்தியும், நேருவும் புரிந்து கொண்டு, அதன் தொடர்பைத் துண்டித்தார்கள்.

ஆர்.எஸ்.எஸ். அமைப்பானது முஸ்லீம் மற்றும் கிறிஸ்தவ இனத்தை மட்டும் தான் கட்டுப் படுத்துகிறது என்று பல பேர் நினைத்தார்கள். ஆனால் தலித், பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களும் தங்களுடைய நலனுக்கு எதிராக ஆர்.எஸ்.எஸ். அமைப்பு செயல்படுவதை உணர ஆரம்பித்தார்கள். முஸ்லீம், மற்றும் கிறிஸ்தவ இன மக்கள் உலகம் முழுவதும் இருக்கிறார்கள். அந்த மக்கள் தங்களுக்கான ஆதரவை உலகில் பல்வேறு நாடுகளில் வாழும் தன் சக இன மக்களிடமிருந்து பெற்றுக்கொள்கிறார்கள். ஆனால் இந்தியாவில் வாழும் தாழ்த்தப்பட்ட, இதர பிற்ப்படுத்தபட்ட மற்றும் பழங்குடியின மக்கள், தங்களுக்கான ஆதரவையோ, அழுத்தத்தையோ வெளி உலகிலிருந்து பெறமுடியாது.

2014 தேர்தலுக்குப் பிறகு, இந்த மக்கள் (எஸ்.சி, ஓ.பி.சி, எஸ்.டி) மோடியை மிகவும் நம்பினார்கள், மோடி இதர பிற்ப்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர், அதனால் நமது மக்களின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் பாடுபடுவார் என்று நம்பினார்கள். பாவம் அவர்களுக்குத் தெரியாது, மோடி ஒன்றும் நேரு, மற்றும் இந்திரா காந்தி அல்ல, நேரடியாக எவ்வித மத அமைப்புகளின் கட்டுப்பாடு இல்லாமல் ஆட்சி செய்வதற்கு. பிஜேபி ஒன்றும் காங்கிரஸ் அல்ல, ஒரு தனி நபர் வழிகாட்டுதலின் படி செல்ல, பிஜேபி முழுக்க தீவிர இந்துத்துவ வாதிகளால் நடத்தப்படும் ஒரு கட்சி, குறிப்பாக சத்திரியர்கள் ஆதிக்கம் நிறைந்தது.

சத்திரியர்களில், முன்னாள் பிரதமர் வி.பி.சிங் மட்டுமே, தாழ்த்தப்பட்ட, இதரபிற்படுத்தப்பட்ட, மற்றும் பழங்குடி மக்களின் பக்கம் இருந்தவர். சமூகநீதிக்காகப் பாடுபட்டவர். மண்டல் கமிசன் உருவாகவும், அதனால் தன் ஆட்சியையும் இழந்தவர்.

பிஜேபி முழுக்க ஆர்.எஸ்.எஸ் ஆல் இயக்கப் படுகிறது. மோகன் பகவத் என்கிற பார்ப்பனரால் தலைமையேற்று வழி நடத்தப்படுகிறது. மோகன் பகவத்துக்கு ஜனநாயக அமைப்புகளின் மீது எப்போதும் நம்பிக்கை இருந்ததில்லை. அருண் ஷோரி போன்ற இந்துத்துவவாதிகள் மோடியுடன் இணக்கமாக இல்லாவிட்டாலும், தீவிர இந்துத்துவம் என்ற கொள்கையில் உடன் படுகிறார்கள். இந்த மாதிரியான சிந்தனை ஜனநாயக அமைப்புகளுக்கு எதிர்ப்பாகத்தான் இருக்கும்.

உண்மையில், எஸ்.சி, எஸ்.டி வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தைப் பயன்படுத்தி, இதரப் பிற்படுத்தப்பட்ட மக்களை, தலித் மக்களுக்கு எதிரானவர்களாக மாற்றும் முயற்சியில் இந்துத்துவ வாதிகள் செயல்படுகிறார்கள். பிற்படுத்தப்பட்ட மக்களைப் பயன்படுத்தி, மீண்டும் ஒரு முறை இந்துத்துவவாதிகள் ஆட்சியைப் பிடித்துவிட்டால், ஜனநாயக அமைப்புகளைக் கொஞ்சம், கொஞ்ச மாகப் பிரித்து, சிதைத்து, ஒரு இந்து சர்வாதிகார நாடாக மாற்றிவிடுவார்கள். அனைத்து இடஒதுக் கீட்டுப் பாதுகாப்புச் சட்டங்கள், முழுவதையும் அழித்துவிடுவார்கள். எடுத்துவிடுவார்கள்,

இதர பிற்படுத்தப்பட்ட மக்களின் பாரம் பரியம், பொருளாதாரம் அனைத்தும் சிதைந்து போகும். இந்துத்துவவாதிகள் இதைப்பற்றி கவலைப்

பட மாட்டார்கள். ஏனென்றால் அவர்களுக்கு தான் இன்னொரு உலகமான சொர்க்கம் இருக்கிறது. அது அவர்களை அப்படியே வைத்திருக்கும். முஸ்லீம் சர்வாதிகாரிகளைப் போல் இந்துத்துவவாதிகளும் சொத்துக்களைக் குவிப்பார்கள், லிபியாவின் கடாபி, பாகிஸ்தானின் சர்வாதிரிகள், ஜியா உல் கஹ், பர்வேஸ் முஸ்ரப் போல இவர்களும் சொத்துக்களை குவிப்பார்கள்.

சாதாரணமாக மதவெறி ஆட்சியாளர்கள், உற்பத்தி முறை, விநியோக முறை, மக்கள் நலன், இதைப் பற்றிச் சிறிதும் கவலைப்படமாட்டார்கள். இந்தியாவில் அசோக மன்னரைத் தவிர வேறு யாரும் மேற்கண்ட விசயங்களில் அக்கறை இல்லாதவர் களாகத்தான் இருந்திருக்கிறார்கள். இந்துத்துவ வாதிகளுக்கு அசோக மன்னரின் மீது ஒருபோதும் மரியாதை இருந்தது கிடையாது. அந்த ஒரு காரணத்திற்காகத் தான் நேரு அவர்கள், அசோகரின் அடையாளங்களைத் திரும்பக் கொண்டுவந்தார். தேசியக் கொடியில் உள்ள சக்கரம், ரூபாயில் உள்ள மூன்று சிங்கங்களின் தலைகள் போன்ற சின்னங் களை கொண்டுவந்த போது இந்துத்துவவாதிகள் கடுமை யாக எதிர்த்தனர்.

ஒருவேளை தற்போதுள்ள அரசியலமைப்பு தொலைந்தால் மீண்டும் சுதந்திரத்திற்கு முந்தைய காலத்துக்குத் தான் செல்லவேண்டும் என்பதை தலித் அறிவுஜீவிகளும், இடஒதுக்கீட்டிலிருந்து உருவான மத்தியதர வர்க்கமும் புரிந்துள்ளார்கள். அந்த நெடிய பயத்தின் காரணமாக நடந்தது தான், ஏப்ரல் 2, 2018 அன்று நடைபெற்ற வேலை நிறுத்தமும் ‘தலித் வசந்தம்’ என்கிற அணி திரட்டலும்.. வன்கொடுமைத் தடுப்புச் சட்ட வழக்குகள் தங்கள் மீது அதிகமாக இருப்பதால் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் இந்துத்துவவாதிகளை ஆதரிக்கத் தயாராக இருக்கிறார்கள். எதிர்காலத்தைப் பற்றி முன்னறிந்து செயல்படக்கூடிய, நல்ல வளர்ச்சியடைந்த, சூத்திரத் திறன் இந்த நாட்டிலில்லை. ஆனால் இந்த அரசிய லமைப்பு தொலைந்தால் சூத்திரர்களின் நிலையும் சுதந்திரத்திற்கு முந்தைய காலத்திற்கு சென்றுவிடும்.

அரசாங்க அமைப்புகளில் இந்துத்துவத்தின் வளர்ச்சிக்கான சமிக்ஞைகள் வந்து கொண்டே இருக்கின்றன. அரசும், அதிகாரிகளும் முழுவதும் இந்துத்துவவாதிகளின் கட்டுப்பாட்டில் வந்து விட்டார்கள். நீதித்துறையும் மெதுவாக அந்த திசையில் பயணிக்க ஆரம்பிக்கிறது. எப்படி காப்பாற்றப் போகிறோம்? விவரிப்பது என் சக்திக்கு அப்பாற்பட்டது

## M.Tech., Cow Urine Technology

சூரப்பா ஒரு கன்னடர் என்பதைவிட, அவர் ஒரு ஆர்.எஸ்.எஸ்காரர் என்ற அடிப்படை முக்கியமானது. கடந்த ஆண்டு நீட்டை நுழைத்து தமிழ்நாட்டு மாணவர்களின் மருத்துவக் கல்வி உரிமை பறிக்கப்பட்டது. இந்த ஆண்டு துணை வேந்தர்களை நுழைத்து நமது சட்டம், பொறியியல் கல்வி உரிமைகளும் பறிக்கப்பட்டு விட்டன. முதற்கட்டமாக, டாக்டர் அம்பேத்கர், அண்ணா பல்கலைக் கழகங்களில் 69% இடஒதுக்கீடு பறிபோக உள்ளது. தொடர்ந்து B.Tech, M.Tech Cow Urine technology, B.Tech வாஸ்து சாஸ்திரம், மனையடி சாஸ்திரம் கோர்ஸ்களும் அறிவிக்கப்படலாம். பதஞ்சலி, ஈஷா, ஸ்ரீஸ்ரீ Products போன்ற காவி கார்ப்பரேட் ஃப்ராடுகளோடு சேர்ந்து Industrial collaborative MOU க்கள் போடப்படலாம். இன்னும் மிச்சம் மீதி இருப்பது கலை, அறிவியல் கல்வியை வழங்கும் பாரதிதாசன், பாரதியார், காமராசர், மனோன்மணியம், திருவள்ளுவர் பல்கலைக் கழகங்கள் தான். அவை ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு ஆர்.எஸ்.எஸ். காரர் தயாராகிக் கொண்டிருப்பார்.

## தமிழ்நாட்டில் மண்ணின் மைந்தர்களுக்கே 80ரூ கல்வி, வேலைவாய்ப்பு

பல்கலைக்கழகங்களுக்கு ஆளுநர் தான் தலைவர், அவருக்குத்தான் முழு அதிகாரம் என்றால், இன்று முதல், தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் 97 சதவீத இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்தி அறிவிப்பு வெளியிட முடியுமா? மருத்துவம், பொறியியல், சட்டம், விவசாயம், கலை, அறிவியல், வணிகவியல் போன்ற அனைத்துப் படிப்புகளிலும், பேராசிரியர் பணியிடங்களிலும் 97 சதவீதம் இடஒதுக்கீட்டை உறுதிப்படுத்தி அறிவிப்பு வெளியிட முடியுமா?

பல்கலைக்கழகக் கல்வி, வேலைவாய்ப்புகளில் தமிழ்நாட்டு மக்களுக்கு - மண்ணின்மைந்தர்களுக்கு 80 சதம் இடஒதுக்கீடு வழங்கி உத்தரவு பிறப்பிக்க முடியுமா?

கீற்று நந்தன்



# இந்துத்துவ அமைப்புகளும் காமச் சாமியார்களும்,

உலகிலேயே மிகப் பெரிய வன்முறை எது தெரியுமா? திருப்பித் தாக்க முடியாதவனின் மீது செலுத்தப்படும் வன்முறை தான். பெரும்பான்மையினரால் சிறுபான்மையினர் மீது நடத்தப்படும் வன்முறை அத்தகையது. 10 பேர் சேர்ந்து ஒருவனைத் தாக்குவது கும்பல் மனப் பான்மை தரும் துணிச்சல் தானே தவிர, உண்மையில் அது மிகப்பெரும் கோழைத்தனம், வன்முறையின் உச்சம். அதைவிடக் கொடுமையான வன்முறை, பல ஆண்கள் சேர்ந்து ஒரு பெண்ணை கூட்டுப் பாலியல் வன்புணர்வு செய்வது. இதையே நாம் கொடுமை என்றால், துள்ளி விளையாடும் சிறுமிகளைப் பாலியல் வன்புணர்வு செய்பவர்களை மனிதர்களாகவேனும் கருத முடியுமா? ஆனால், அத்தகைய மனித மிருகங்களாகத்தான் இந்துத்துவ சக்திகள் இந்த மண்ணில் நடமாடுகின்றன.

*சிறுமி ஆசிஃபாவைக் கூட்டுப் பாலியல் வன்புணர்வு செய்து, கொடூரமாகக் கொன்ற கொலையாளிகளைப் பாதுகாக்க ஆர்ப்பாட்டங்கள் செய்த இந்துத்துவ - பாஜக சக்திகள் வாழும் இந்த நாட்டில், இனி சிறுபான்மையினரும், பெண்களும் பாதுகாப்பாக வாழ முடியுமா?*

## பாஜக கும்பலின் பாலியல் குற்றங்கள் – ஒரு தொகுப்பு

*2012 பிப்ரவரி 7 ஆம் நாள் அன்று, கர்நாடக சட்டப் பேரவையில் பாஜக அமைச்சர்கள் லக்ஷ்மண் சாவடி, சி.சி.பாடீல் மற்றும் பாஜக சட்டப்பேரவை உறுப்பினர் கிருஷ்ணா பாலேமர் ஆகியோர் ஆபாசப் படம் பார்த்ததை நிருபர்கள் படம் பிடித்து தொலைக்காட்சியில் ஒளிபரப்பினர். இதனால் எழுந்த கடும் எதிர்ப்பினை அடுத்து, மூவரும் பதவி விலகினர்.*

*2012 மார்ச் 20 ஆம் தேதி குஜராத் பாஜக சட்டப்பேரவை உறுப்பினர்கள் சங்கர் சவுத்ரி, ஜீத்தாபாய் பர்வத் இருவரும் சட்டபேரவையில் ஆபாசப் படம் பார்த்ததைச் செய்தியாளர்கள் கண்டு, அது ஊடகங்களில் வெளியாகி, பெரும் அமளியானது.*

*அஸ்ஸாம் மாநில பாஜக சட்டப்பேரவை உறுப்பினர் ராமகந்த தேவ்ரி, விடுதி ஒன்றில் ஒரு பெண்ணுடன் அந்தரங்கமாக இருந்த காணொளி 18, பிப்ரவரி 2017 அன்று தொலைக்காட்சிகளிலும், சமூக வலைத்தளங்களிலும் வெளியானது. ஏற்கனவே அவர் மீது 34 வழக்குகள் நிலுவையில் இருந்த போதிலும், அவர் பதவி விலகவில்லை. பாஜக அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.*

*மே 19, 2017 ஆம் நாள் அன்று, மத்தியப் பிரதேசத்தில் பாஜக தலித் அணியின் செய்தித் தொடர்பாளர் நீரஜ் சாக்யா, விபச்சாரத் தொழில் செய்து வந்தது கண்டுபிடிக்கப்பட்டு, கைது*

செய்யப்பட்டார். இதனையடுத்து அவரைக் கட்சியிலிருந்து நீக்குவதாக மாநிலத் தலைமை அறிவித்தது.

இமாச்சலப் பிரதேசத்தில் நட்சத்திர விடுதி ஒன்றில் பெண் ஒருவருடன் விபச்சாரத்தில் ஈடுபட்டதாக பாஜக மூத்த தலைவர் ராஜிந்தர் ராணாவின் பெயர் அடிபட்டது, எதிர்க்கட்சிகளின் போராட்டத்திற்குப் பிறகு செப்டம்பர் 09, 2009 ஆம் தேதி, தான் வகித்து வந்த ஊடக அறிவுரைக் குழுமத்தின் தலைவர் பொறுப்பிலிருந்து விலகினார்.

மத்தியப் பிரதேச நிதி அமைச்சரும், பாஜக மூத்த தலைவருமான ராகவ்ஜி மீது, வீட்டு வேலைக் காரியைப் பாலியல் துன்புறுத்தல் செய்ததாக 2013 ஜூலை 5 ஆம் தேதி காவல் நிலையத்தில் புகார் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து அவர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டதோடு, பின்னர் கைதும் செய்யப்பட்டார்.

குஜராத் மாநில பாஜக செயலாளராக இருந்த சஞ்சய் ஜோஷி ஒரு பெண்ணுடன் ஆபாசமாக இருந்ததாக ஆபாசக் காணொளி 2005 ஆம் தேதி வெளியானது. இதனையடுத்து கட்சியின் அனைத்துப் பொறுப்புகளிலிருந்தும் அவர் நீக்கப் பட்டார். பின்னர் அந்தக் காணொளி போலியானது என்று நிரூபிக்கப்பட்டது. இந்தக் காணொளியின் பின்புலமாக மோடியின் குழு இருந்ததாக ஜோஷியின் ஆதரவாளர்கள் குற்றம் சாட்டினர்.

மகாராஷ்டிராவில் ஓடும் பேருந்தில் ஒரு பெண்ணுடன் பாஜக மாவட்டச் செயலாளர் ரவீந்தர பவந்தாதே பாலியல் சில்மிஷங்களில் ஈடுபட்ட காணொளி வெளியானதை அடுத்து, அந்தப் பெண் காவல் நிலையத்தில் பாலியல் வன்புணர்வுப் புகார் அளித்தார். வேலை வாங்கித் தருவதாகவும், திருமணம் செய்து கொள்வதாகவும் கூறி, தன்னை ஏமாற்றி விட்டார் என்று அந்தப் புகாரில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து 2017 ஜூலை 4 ஆம் தேதி அவர் கைது செய்யப் பட்டார். ஆனால், அவர் கட்சியில் எந்தப் பொறுப் பிலும் இல்லை என பாஜக மறுத்தது.

ஜார்க்கண்ட் மாநில பாஜக மகளிர் பிரிவுத் தலைவர் கீதா சிங் என்பவரின் ஆபாசக் காணொளி 2016 டிசம்பர் 27 ஆம் தேதி வெளியாகி, பெரும் பரபரப்பு கிளம்பியது. முதலில் அதனை மறுத்த கீதா சிங், பின்பு பதவி விலகினார்.

பாஜகவின் திருப்பூர் வடக்கு மாவட்ட துணைத் தலைவராக இருந்த முத்து என்கின்ற மாரிமுத்து, 2017, ஜனவரி 27 ஆம் தேதி தற்கொலை செய்து கொண்டார். அவரது தற்கொலையை முஸ்லிம்கள் செய்த கொலையாகச் சித்தரித்து, பாஜக கலவரம் ஏற்படுத்த முயன்றது.இறுதியில், கள்ளக்காதல் விவகாரம் காரணமாக அவர் தற்கொலை செய்து கொண்டது காவல்துறை விசாரணையில் தெரிய வந்தது.

இந்து முன்னணியின் செந்துறை கிழக்கு ஒன்றியச் செயலாளர் மணிகண்டன், நந்தினி என்ற தலித் பெண்ணை காதலித்து கர்ப்பமாக்கினார். நந்தினி தன்னைத் திருமணம் செய்து கொள்ளுமாறு வற்புறுத்தியபோது, நண்பர்களுடன் சேர்ந்து மணிகண்டன் நந்தினியைக் கூட்டு பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கி, கொடூரமாகக் கொலை செய்து பாழுங்கிணற்றில் வீசினார். 2017 ஜனவரி 14 ஆம் தேதி மணிகண்டனும், அவனது கூட்டாளி களும் கைது செய்யப்பட்டனர்.

ஆர்.ஆர்.எஸ். மூத்த தலைவரும், மேகாலயா ஆளுநராக பாஜக வால் நியமனம் செய்யப் பட்டவருமான தமிழகத்தைச் சேர்ந்த சண்முக நாதன், 2016 டிசம்பர் 7 ஆம் தேதி நேர்முகத் தேர்விற்காக வந்த பெண்ணிடம் தகாத முறையில் நடந்து கொண்டதாக பிரச்சினை வெடித்தது. இதனையடுத்து, ஆளுநர் மாளிகையில் பணியாற்றிய 100க்கும் மேற்பட்டோர், ஆளுநர் மாளிகையை இளம்பெண்கள் கிளப்பாகவே மாற்றி விட்டார் சண்முகநாதன் என பிரதமர், குடியரசுத் தலைவருக்குப் புகார் அனுப்பியதோடு, அவருக்கு எதிராகப் போராட்டமும் நடத்தினர். இறுதியில் அவர் பதவி விலகினார்.

2016 ஆம் ஆண்டு, வெளிநாட்டுப் பாலியல் தொழிலாளிகளுடன் விபச்சாரம் செய்து மாட்டிக் கொண்டு, அந்தப் புகைப்படங்கள் வெளிவராமல் இருப்பதற்காக இந்திய இராணுவ ரகசியங்களைக் கசிய விட்டதாக பாஜக இளம் தலைவர் வருண் காந்தி மீது குற்றம் சாட்டப்பட்டது.

2017, ஜூலை 21 ஆம் தேதி சிறுமியைக் கடத்தி, பாலியல் வல்லுறவு கொண்டதாக திருவனந்தபுரம் ஆர்.எஸ்.எஸ். அமைப்பைச் சேர்ந்த ஜெயதேவ் 2017 ஆகஸ்ட் 17 இல் கைது செய்யப்பட்டான்.

2017 பிப்ரவரி 27 ஆம் தேதி மேற்கு வங்காள பாஜக மகளிர் அணித் தலைவர் ஜூஹி சவுத்ரி, 17க்கும் மேற்பட்ட சிறுமிகளைக் கடத்தி பாலியல் தொழிலுக்கு விற்றதாக கைது செய்யப்பட்டார்.

மோடி முதல்வராக இருந்தபோது, 2002 ஆம் நடந்த குஜராத் கலவரத்தில் 250க்கும் மேற்பட்ட முஸ்லிம் பெண்கள் பாஜக, சங் பரிவார் அமைப்பு களால் கொடூரமான பாலியல் வன்புணர்வுக்கு ஆளாயினர்.

உத்தரப் பிரதேசம், உன்னா மாவட்டம் பங்கர்மாவ் தொகுதி பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர் குல்தீப் சிங்கும், அவரின் சகோதரரும் 17 வயது இளம் பெண்ணை 2017 ஜூன் மாதம் பாலியல் வன்புணர்வு செய்தனர். அதை வெளியே சொன்ன குற்றத்திற்காக அவரின் தந்தையைக் காவல் நிலையத்தில் வைத்து 2018 ஏப்ரல் 3 ஆம் தேதி கொலை செய்தனர். குல்தீப் சிங்கின் சாதி செல்வாக்கிற்கு அஞ்சி, மாநில முதல்வர் நடவடிக்கை எடுக்காமல் இருந்த நிலையில், 2018 ஏப்ரல் 14 இல் மத்திய புலனாய்வுப் பிரிவு போலிசார் குல்தீப் சிங்கை கைது செய்தனர்.

இதன் உச்சகட்டமாக, காஷ்மீர் மாநிலத்தில் 2018 ஜனவரி 10 ஆம் தேதி, குதிரை மேய்த்துக் கொண்டிருந்த 8 வயது சிறுமி ஆசிஃபாவை 8 பேர்

கொண்ட இந்துத்துவ கும்பல் கடத்தி, மூன்று நாட்கள் தொடர்ச்சியாகப் பாலியல் வன்புணர்வு செய்து கொடூரமாக கொலை செய்திருக்கிறது. குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்கக் கூடாது என ஆர்.எஸ்.எஸ்.யைச் சார்ந்த 'இந்து ஏக்தா மஞ்சு' என்ற அமைப்பு போராட்டமும் நடத்தியுள்ளது.

இந்தப் போராட்டத்தில் பாஜகவைச் சேர்ந்த வனத்துறை அமைச்சர் லால்சிங் மற்றும் தொழிற்துறை அமைச்சர் சந்தர் பர்கஷ் கங்கா போன்றோரும் பங்கெடுத்திருக்கின்றார்கள். இருப்பினும் காவல் துறை அந்த 8 பேரையும் கைது செய்திருக்கிறது. பிரச்சினை பெரிதாகவே, குற்றவாளிகளுக்கு ஆதரவாகப் போராட்டம் செய்த பாஜக அமைச்சர்கள் பதவி விலகியுள்ளனர்.

இவை எல்லாம் ஊடகங்களில் வெளிவந்த, இந்துத்துவக் கும்பலின் பாலியல் குற்றங்கள். வெளிவராத செய்திகள் எவ்வளவு இருக்கின்றனவோ..!

## காமச் சாமியார்களும், இந்துத்துவ அமைப்புகளும்

இந்துத்துவ அமைப்புகளுக்கும், காமச் சாமியார்களுக்குமான தொடர்பு, தொப்புள் கொடி உறவு போன்றது. இவர்கள் அரசியல் ரவுடிகள் என்றால், அவர்கள் ஆன்மீக ரவுடிகள்; இருவரையும் பிரித்துப் பார்க்க முடியாது.

கேரளாவில் 'புல்லட் சாமியார்' என்ற பிரபலமாக அறியப்பட்டவர் சாமியார்?? ரீஹரி. இவர் தொடர்ச்சியாக ஒரு பெண்ணுடன் பாலியல் வல்லுறவு கொண்டிருந்தார். ஒரு கட்டத்தில் வெடித்துக் கிளம்பிய அந்தப் பெண் சாமியாரின் ஆணுறுப்பைத் துண்டித்து எறிந்தார். இந்த சாமியாருக்கும், பாஜக மாநிலச் செயலாளர் கும்மனம் இராஜசேகரனுக்கும் நெருங்கிய தொடர்பிருந்தது. ஆனால், ஆணுறுப்பு துண்டிக்கப் பட்டபோது, தனக்கும் சாமியாருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று இராஜசேகரன் நழுவிக் கொண்டார்.

மறைந்த காஞ்சி சங்கர மடச் சாமியார் ஜெயேந்திரன், தன்னை பாலியல் உறவுக்கு வற்புறுத் தியதாக எழுத்தாளர் அனுராதா ரமணன் எழுதியதும், காஞ்சி சங்கர மடத்தில் இருந்து ஏராளமான ஆபாச குறுந்தகடுகள் கைப்பற்றப் பட்டதும், ஒரு பிரபல நடிகையுடன் ஜெயேந்திரன் தொடர்புபடுத்திப் பேசப்பட்டதும் தமிழகம் அறிந்ததே. ஆனாலும், கடைசி வரை ஜெயேந்தி ரனுக்கு ஆதரவாக பாஜக, இந்து முன்னணி, இந்து மக்கள் கட்சி உள்ளிட்ட இந்துத்துவ அமைப்புகள் செயல்பட்டன.

நடிகை இரஞ்சிதாவுடன் நித்தியானந்தா பாலியல் உறவு கொள்ளும் காணொளி வெளிவந்து, தமிழகம் முழுவதும் அவரது பெயர் நாறிய பின்னும், அவர் அண்மையில் நடத்திய நிகழ்ச்சியில் பாஜக தேசியச் செயலாளர் ஹெச்.ராஜா கலந்து கொண்டு சிறப்பித்தார்.

ஜோத்பூர் ஆசிரமத்தில் 16 வயது பள்ளிச் சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட சாமியார் ஆஷ்ரம் பாபு, பின்னர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். அவருடன் பாஜக மூத்த தலைவர்கள் வாஜ்பாய், அத்வானி, மோடி, முரளி மனோகர் ஜோஷி, சிவ்ராஜ் சவுகான், ராமன் சிங் உள்ளிட்டோருக்கு நட்பு இருந்தது.

பாலியல் வல்லுறவு மற்றும் கொலை வழக்கில் 20 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட பிரபல சாமியார் ராம் ரஹிம் சிங்கிற்கும், பாஜகவுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது. 2014 அரியானா தேர்தல் பிரச்சாரத்தின்போது ராம் ரஹிம் சிங்கை பிரதமர் மோடி புகழ்ந்து பேசினார்.1995 ஆம் ஆண்டு அரியானா பாஜக பொறுப்பாளராக நியமிக்கப் பட்டபோதே, தான் சாமியாரைச் சந்தித்து வணங்கியதாகத் தெரிவித்தார். மோடியின் இந்தப் பேச்சிற்குப் பின்னர், அரியானா தேர்தலில் ராம் ரஹிம் சிங், பாஜகவுக்கு ஆதரவு அளித்தார். பின்னர் டெல்லி, பிஹார் சட்டமன்றத் தேர்தல்களின் போதும் ராம் ரஹிம் சிங்கின் ஆசிரம பக்தர்கள், பாஜகவுடன் இணைந்து பிரச்சாரம் செய்தார்கள். ராம் ரஹிம் சிங் மீது பாலியல் வல்லுறவுக் குற்றச்சாட்டு வழக்கு விசாரணையில் இருந்த காலத்தில்தான் அவருடன் பாஜக நட்பு பாராட்டியது என்பது கவனிக்கத்தக்கது.

மறைந்த புட்டபர்த்தி சாய்பாபா மீது ஓரினச் சேர்க்கை வல்லுறவு புகார்கள் தொடர்ச்சியாக வந்த வண்ணம் இருந்தன. ஏறக்குறைய 40 க்கும் மேற்பட்டோர் அவர் மீது புகார் தெரிவித்தனர். ஆனாலும், அவருடன் வாஜ்பாய், அத்வானி, மோடி, முரளி மனோகர் ஜோஷி உள்ளிட்ட பாஜக தலைவர்களின் சந்திப்பு தொடர்ந்த வண்ணமாகத் தான் இருந்தது.

## இந்து மதமும், பாலியல் முறைகேடுகளும்

பாஜக, ஆர்.எஸ்.எஸ், இந்து முன்னணி போன்ற இந்துத்துவ அமைப்புகளின் பாலியல் குற்றங்கள் தான்தோன்றித்தனமானவை அல்ல. அதற்கு ஒரு தத்துவார்த்த அடிப்படை, கலாச்சார வேர் இருக்கிறது. அதுதான் இந்து மதம்.

இந்து மதத்தின் கடவுளர் கதைகள் எல்லாமே ஆபாசக் களஞ்சியங்கள் தான். அடுத்தவன் மனைவியை கள்ளத்தனமாக அனுபவித்த இந்திரன், சிவனுக்கும், விஷ்ணுவுக்குமான காமக் களியாட் டத்தில் பிறந்த அய்யப்பன், பெண்கள் குளிப்பதை மறைந்திருந்து பார்ப்பதையே வேலையாகக் கொண்டிருந்த கிருஷ்ணன், ஆண்டுக்கணக்கில் பார்வதியுடன் சுகித்திருந்த சிவன் என எல்லாமே ஆபாசத்தின் உச்சம். வரைமுறையற்ற பாலியல் புணர்ச்சிதான் இந்துக் கடவுள்களின் பொதுவான அம்சம். மேலும் விரிவாகத் தெரிந்து கொள்ள விரும்புவர்கள், பெரியார் வெளியிட்ட 'கடவுளர் கதைகள்' புத்தகத்தைப் படிக்கவும்.

கடவுளர்களின் யோக்கியதை இப்படி என்றால், அடியார்களின் யோக்கியதை அதற்குக் கொஞ்சமும் குறைந்ததல்ல. சிவனடியாருக்கு தன் மனைவியைக் கூட்டிக் கொடுத்த இயற்பகை நாயனார், பாலியல் கவிதைகளை எழுதிக் குவித்த ஆண்டாள், சமணர்களின் வீட்டுப் பெண்களை கற்பழிக்க உதவுமாறு இறைவனிடம் வேண்டிய திருஞான சம்பந்தர் ("பெண்ணகத் தெழிற் சாக்கியப் பேயமண் தெண்ணற் கற்பழிக்கத் திருவுளமே") இவர்களின் வரலாறுகளைத் தோண்டிப் படித்தால், இன்றைய இந்துத்துவக் கும்பல்களின் பாலியல் குற்றங்களுக்கான வேர் எங்கிருக்கிறது என்பதை உணர முடியும்.

## நாம் என்ன செய்ய வேண்டும்?

கெடுவாய்ப்பாக, இந்த பாலியல் குற்றக் கும்பல் தான் தற்போது ஆட்சியில் இருக்கிறது. இந்தக் கும்பலுக்கு சிறுமி, பருவம் வந்த பெண், வயதான பெண் என்ற எந்த வேறுபாடும் இல்லை. நாம்தான் நமது குழந்தைகளை, பெண்களை உரிய பாதுகாப்புடன் வளர்க்க வேண்டும்.

ஆசிஃபா படுகொலைக்குப்பின், கேரள மாநிலத்தில் சேட்டன்மார்கள் **"எங்கள் வீட்டில் பெண்கள் இருக்கிறார்கள். பாஜகவினர் யாரும் ஓட்டு கேட்டு உள்ளே வர வேண்டாம்"** என்று வீட்டு வாசலில் எழுதி வைத்திருக்கிறார்கள். நாமும் அதுபோல் எழுதி வைக்க வேண்டும்.

நமது பெண் குழந்தைகளுக்கு அந்தந்தப் பகுதியில் இருக்கும் பாஜக, இந்து முன்னணி உள்ளிட்ட இந்துத்துவ அமைப்பினரை அடையாளம் காட்டி, அவர்களிடம் எச்சரிக்கையாக இருக்கச் சொல்ல வேண்டும்.

எவ்வளவுதான் நட்பு, உறவு இருந்தாலும் இந்துத்துவக் கும்பலை வெளியில் சந்திப்பதோடு நிறுத்திக் கொள்ள வேண்டும்; வீடு வரை அனுமதிக்கக் கூடாது.

இந்து மதச் சாமியார்களின் வண்டவாளங் களைப் பெண்களுக்கு எடுத்துச் சொல்லி, யோகா, தியானம் என்று அவர்கள் பின்னே போகாமல் இருக்க அறிவுறுத்த வேண்டும்.

இந்துத்துவக் கும்பல் மோசமான பொறுக்கிக் கும்பல் என்பதை விடாமல் மக்களிடம் பிரச்சாரம் செய்ய வேண்டும்.

இத்தனை அட்டூழியங்கள் செய்த பின்னும், கலாச்சாரத்தைக் காக்கவே அவதரித்தவர்கள் போல் அவர்கள் பேசுகிறார்களா? இந்தக் கட்டுரையை அவர்களிடம் படிக்கக் கொடுங்கள். பாஜக என்றால் 'பாலியல் ஜல்சா கட்சி' என்றுதான் அர்த்தம் என அழுத்தமாகச் சொல்லுங்கள்.

ஆசிஃபாக்களை இந்தக் குற்றக் கும்பலிடம் இருந்து காக்கும் பொறுப்பு நம்மிடம்தான் இருக்கிறது.

## விஜி பழனிச்சாமி

என் வரிகளில் உள்ள பிழைகளைக் கிளறாதீர்கள்...
அவைகளெல்லாம் என் உணர்வுகளைத்தான்
கக்கிக்கொண்டு இருக்கின்றன...
எனது வரிகளில் வழியும் காதல் உங்களை
சிலிர்க்க வைக்ககலாம்...
கசியும் காமம் உங்களை ரசிக்கவோ
கிளர்ச்சியடையவோ செய்யலாம்...
வன்மமும் குரூரமும்
உங்களை உலுக்கி கூட விடலாம்..
வலி நிரம்பி வழியும்
வரிகள் உங்களை குலையச்செய்யலாம்...

ஆயினும்...
உங்களின் எந்த யூகத்திலும் சற்றும்
பொருந்தாதவள்தான் இவள்...
உற்று நோக்காது கடத்தலே
உங்களுக்கு சிறப்பு

இடரும் கல் ஒன்றில் மரித்து விழுகிறது
வண்ணத்துப்பூச்சி
அணில் விளையாடும் மரமொன்றில் தத்திவந்த
சிறு பறவை அது...
தன் தூரக்கணக்கைக் காலநொடிக்குள்
தவற விட்ட ரகசியத்தை அறியாமல்...
சிதற விட்ட வண்ணங்களைச் சேகரிக்கமாலும்..
மலரொன்றின் மகரந்தத்தைச் சுவைக்கமாலும்
மரித்து போனது துயரமில்லை தான் எனக்கு..

உருமாற்றம் நிகழ்ந்த பின்னும் எந்த ஒரு குருதியிலும்
மிதக்காமலும் காய்ந்த இலைகளில்
ஒட்டிக்கொண்டு வாடும் அது..
பறக்க நினைத்தது துயரம் என்பது என் நியதி..

வட்ட இடுக்கையில் பொன்வண்டு இசைக்கும்
குறிப்புகளை ரசிக்காமல் தவற விட்ட நாள் கணக்கை
எண்ணிக்கொண்டு என் பால்கனியில் அமர்ந்திருந்த
அக்கணத்தில் என் தோட்டத்தில்
ஒற்றை இலை உதிர்ந்ததை
காணச் சகிக்கவில்லை என்பது என் நிர்மாணம்.

உயிரட்ட பொருள் நான் என்பது என்
சுற்றும்- நட்பு கருத்து..
நான் என்பதே நான் இல்லை என்பது என்
உருவாக்கம்.
ஒரு மரணத்தை நிகழவைக்கும் சாத்தியம் மட்டும் எனக்கு
உண்டு என்பதைத் தவிற சொல்ல எதுவுமே இல்லை..
பட்டாபூச்சியாகட்டும்,
புழுவாகட்டும்
பின் நானாகட்டும்...



# அரசியலில் பக்தி அல்லது தனிநபர் வழிபாடு, சீரழிவுக்கும் சர்வாதிகாரத்துக்கும் இட்டுச் செல்லும்!

**மாண்புமிகு டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கர் அவர்கள் 25.11.1949 அன்று இந்திய அரசியல் சட்ட வரைவைச் சமர்ப்பித்து ஆற்றிய உரை:**

*அரசியல் நிர்ணய சபையின் பணிகளை ஒரு முறை திரும்பிப் பார்க்கும் போது 1946 ஆம் ஆண்டு டிசம்பர் 9-இல் முதலில் கூடியதிலிருந்து இரண்டு ஆண்டுகள் பதினோரு மாதங்கள் பதினேழு நாட்கள் கழிந்துள்ளன.*

*...வரைவுக் குழுவைப் பொறுத்தவரையில் அது அரசியல் நிர்ணயசபையால் 1947 ஆம் ஆகஸ்டு 29 இல் தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆகஸ்டு மாதம் 30 ஆம் நாளில் அது தன் முதல் கூட்டத்தை நடத்தியது. ஆகஸ்டு 30 ஆம் நாளிலிருந்து 141 நாள்கள். அது அமர்வில் இருந்தது. இந்தச் சமயத்தில் அது அரசியல் சாசன வரைவைத் தயாரித்தது. வரைவுக்குழுவின் பணிக்கு அடிப்படையாக அரசியல் சாசனத் தயாரிப்பு ஆலோசகர் தயாரித்து, வரைவுக் குழுவின் பணிக்கு அடிப்படையாகக் கொடுக்கப்பட்ட, அரசியல் சாசனம் 243 விதிகளும் 13 அட்டவணைகளும் கொண்டிருந்தது. வரைவுக்குழு அரசியல் நிர்ணயசபைக்கு அளித்த முதலாவது அரசியல் சாசன வரைவில் 315 விதிகளும் 8 அட்டவணைகளும் இருந்தன. பரிசீலனைக் கட்டத்திற்குப் பிறகு அரசியல்சாசன வரைவில் அடங்கியிருந்த விதிகளின் எண்ணிக்கை 386 ஆக அதிகரித்தது. அதன் இறுதி வடிவத்தில் அரசியல் சாசன வரைவு 395 விதிகளையும் 8 அட்டவணைகளையும் கொண்டுள்ளது. சுமார் 7635 திருத்தங்கள் அரசியல் சாசன வரைவுக்கு முன் வைக்கப்பட்ட திருத்தங்கள் 2475 ஆகும்.*

*இந்தத் தகவல்களையெல்லாம் நான் ஏன் கூறுகிறேன் என்றால் ஒரு கூட்டத்தில் இந்தப் பணியை முடிப்பதற்கு அரசியல்நிர்ணயசபை அதிகநேரம் எடுத்துக் கொள்கிறது என்று கூறப்பட்டது. அது பொதுமக்கள் பணத்தை விரயம் செய்து ஆமை வேகத்தில் பணியாற்றுவதாகக் குறை கூறப்பட்டது. ரோமாபுரி எரியும்போது நீரோ மன்னன் பிடில் இசைத்ததைப் போன்றுள்ளது என்று பழி சுமத்தப்பட்டது. இந்தக் குற்றச் சாட்டுகளுக்கு ஏதாவது நியாயம் உள்ளதா?*

*அரசியல் சாசனங்களை உருவாக்க மற்ற நாடுகளிலுள்ள அரசியல் நிர்ணய சபைகள் எடுத்துக் காட்டுகள். 1787 மே மாதம் 25 ஆம் தேதியில் கூடிய அமெரிக்க கன்வென்ஷன் தன் பணியை 1787 செப்டம்பர் 17 இல் அதாவது நான்கு மாதத்தில் முடிந்தது. கனடா நாட்டு அரசியல் சாசன அமைப்புக் கன்வென்ஷன் 1864 அக்டோபர் 10 இல் கூடியது 1867 மார்ச்சில் அரசியல் சாசனம் ஏற்கப் பட்டது. இரண்டு வருடங்களும் ஐந்து மாதங்களும் எடுத்துக் கொண்டது. ஆஸ்திரேலியாவின் அரசியல் சாசனத் தயாரிப்பு அவை 1891 மார்ச்சில் கூடியது.1900 ஜூலை 9 இல் அரசியல் சாசனத்தை உருவாக்கியது. 9 ஆண்டுகள் எடுத்துக் கொண்டது. தென்ஆப்பிரிக்க கன்வென்ஷன் 1908 அக்டோபரில் கூடியது. 1909 செப்டம்பர் 20 இல் அரசியல் சாசனம் நிறைவேற்றியது. இதற்கு ஓராண்டுக்கால உழைப்பு தேவைப்பட்டது.*

அமெரிக்கா மற்றும் தென் ஆப்பிரிக்க அரசியல் சாசனத் தயாரிப்பு அமைப்புகளை விட நாம் அதிக காலம் எடுத்துக் கொண்டது. உண்மைதான். ஆனால் கனடா கன்வென்ஷனை விட அதிகக் காலம் எடுத்துக் கொள்ளவில்லை. ஆஸ்திரேலியா கன்வென்ஷனை விட அதிகக் காலம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். நாம் காலஅளவை ஒப்பிடும்போது இரண்டு விஷயங்களைக் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். அமெரிக்கா, கனடா, தென் ஆப்பிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளின் அரசியல் சாசனங்கள் இந்திய அரசியல் சாசனத்தை விட மிகச்சிறியவை. நான் ஏற்கெனவே கூறியபடி நமது அரசியல் சாசனத்தில் 395 விதிகள் உள்ளன. அமெரிக்க அரசியல் சாசனத்தில் 7 விதிகள் மட்டுமே உள்ளன. முதல் நான்கு விதிகள் 21 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. கனடா நாட்டு அரசியல் சாசனத்தில் 147 ம் ஆஸ்திரேலிய அரசியல் சாசனத்தில் 128 ம், தென்ஆப்பிரிக்கா அரசியல் சாசனத்தில் 153 பிரிவுகளும் உள்ளன.

இரண்டாவது விஷயம் என்னவென்றால் அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா மற்றும் தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளின் அரசியல் அமைப்புச் சாசனங்களை உருவாக்கியவர்கள், திருத்தங்கள் சம்பந்தமான பிரச்சனையச் சந்திக்க வேண்டியிருக்கவில்லை. முன்மொழியப்பட்ட வடிவத்திலேயே அவை ஏற்றுக் கொள்ளப்பட்டன. ஆனால் அதே நேரத்தில் நமது அரசியல் நிர்ணயசபை 2473 திருத்தங்கள்வரை சந்திக்க வேண்டியிருந்தது. இந்த உண்மைகளையெல்லாம் கணக்கிலெடுத்துக் கொண்டு பார்த்தால், நாம் தாமதமாகச். செயல்பட்டோம் என்ற குற்றச்சாட்டு முற்றிலும் ஆதாரமற்றது என்று எனக்குத் தோன்றுகிறது. இவ்வளவு கடினமான பணியை இவ்வளவு விரைவில் நிறைவேற்றியதற்காக அரசியல் நிர்ணயசபை நிச்சயமாக தன்னைப்பாராட்டிக் கொள்ளலாம்.

வரைவுக்குழு நிறைவேற்றிய பணியின் தரத்தைப்பற்றி திரு.நசிருத்தீன் அகமது ஒரே அடியாகக் குறை கூறுவது, அவர் அதைத் தமது கடமை என்று கருதுவதாகத் தெரிகிறது. அவருடையக் கருத்துப்படி வரைவுக்குழுவின் பணி பாராட்டுக்குரியதல்ல என்பதோடு, அது நிச்சயமாக சாதாரணத் தரத்திற்கும் கீழானது என்பதுதான். வரைவுக்குழு நிறைவேற்றிய பணிகள் பற்றித் தங்கள் சொந்தக் கருத்துகளை வைத்துக் கொள்ள எல்லோருக்கும் உரிமை உண்டு. திரு.நசிருதீனும் தம் கருத்தை வைத்துக் கொள்வதை வரவேற்கிறோம். திரு.நசிருத்தீன் அகமது வரைவுக்குழுவிலுள்ள எந்த உறுப்பினரைக் காட்டிலும் அதிகத் திறமையுள்ள மனிதராக தம்மை நினைத்துக் கொள்கிறார். அவருக்குச் சவால்விட வரைவுக்குழு நினைக்க வில்லை. மாறாக அரசியல் நிர்ணயசபை அவரைத் தகுதியானவர் என்று கருதி வரைவுக்குழுவுக்கு அவரை நியமித்திருந்தால் நாங்கள் வரவேற்றிருப் போம். அரசியல் சாசனத்தை உருவாக்குவதில் அவருக்கு பங்கு ஏதும் இல்லையென்றால் அதற்கு வரைவுக்குழு பொறுப்பாகாது.

வரைவுக்குழுவின் மீதான தம் வெறுப்பைக் காட்ட திரு.நசிருத்தீன் அகமது அதற்கு ஒரு புதிய பெயர் கொடுத்துள்ளார். அதை எத்தகைய நோக்கமுமற்ற, காற்றடிக்கும் திசையில் செல்லும் குழு என்று அழைக்கிறார். இந்தத் தாக்குதல் மூலம் அவர் நிச்சயமாக மகிழ்ச்சி அடைகிறார். நிபுணத்துவம் அற்ற இந்தப் போக்குக்கும், நிபுணத் துவத்துடன் கூடிய போக்குக்கும் உள்ள வேறு பாட்டை அவர் புரிந்து கொள்ளவில்லை என்பது தெரிகிறது. நிலைமையைச் சமாளிக்க முடியாமல் இந்தக்குழு காற்றடித்த திசையில் செல்லவில்லை. தற்செயலாகக் கிடைக்கும் மீனுக்காக வீசப்பட்ட வலையல்ல அது. நன்கு பழக்கமான தண்ணீரி லேதான் வழக்கமாகப் பிடிக்கும் மீனுக்காகத்தான் வலைவீசப்பட்டுள்ளது. வரைவுக்குழுவுக்கு அது ஒரு பாராட்டல்ல என்ற முறையில் திரு.நசிருத்தீன் அகமது கருதினாலும், நான் அதை வரைவுக் குழுவுக்குப் பாராட்டாகவே கருதுகிறேன்.

> **நான் கூறுவதெல்லாம் இந்த அரசியல் சாசனத்தின் கோட்பாடுகள் தற்கால தலைமுறையினரின் கருத்துகளே. ஒருவேளை நான் மிகைப்படக் கூறுவதாகக் கருதினால் அரசியல் நிர்ணயசபை உறுப்பினர்களின் கருத்துகள் அவை என்று கூறுகிறேன். அரசியல் சாசனத்தில் அவைகள் சேர்க்கப்பட்டதற்கு வரைவுக்குழுவின் மீது ஏன் குறைகூறுகிறீர்கள்?**

தவறு என்று கருதும் திருத்தங்களைத் திரும்பப் பெறும் தைரியத்தையும் நேர்மையையும் வரைவுக்குழு காட்டாவிட்டால் அது ஒருபோலி கௌரவத்தைக் கொண்டுள்ளது என்றாகிவிடும். தனது கடமையில் தவறிவிட்டது என்ற குற்றச்சாட்டிற்கும் இது இலக்காகும். தவறான திருத்தங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு மாறாக, சரியான திருத்தங்களை ஏற்றுக் கொள்ளும் தைரியமும் நேர்மையும் வரைவுக்குழுக்கு இருந்தது. இது ஒரு குறையென்றால் வரைவுக்குழு இந்தக் குறையைச் செய்ய வெட்கப்படாததுடன், அந்தத் தவறுகளை நீக்கவும் முன்வந்தது.

ஒரே ஒரு தனிப்பட்ட உறுப்பினரைத் தவிர வரைவுக்குழுவின் பணிகளைக் குறித்து, அரசியல் நிர்ணயசபை உறுப்பினர்களின் பாராட்டுதல்களில் பொதுவான உடன்பாடு காணப்படுகிறது. தனது பணிகளை அங்கீகரித்து தன்னிச்சையாக தாராள மாக வழங்கப்பட்ட பாராட்டுதல்களினால், மகிழ்ச்சி அடைந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்த வரைவுக்குழு சபையின் உறுப்பினர்களும், வரைவுக் குழுவில் என்னுடன் பணியாற்றிய நண்பர்களும் என்மீது பொழிந்த புகழாரங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளச் சொற்கள் கிடைக்காமல் திக்குமுக்காடுகிறேன்.

ஷெட்யூல்டு சாதியினர்களின் நலன்களைப் பாதுகாக்க வேண்டுமென்பதைத் தவிர வேறு எந்தவித நோக்கங்களுமின்றித்தான் நான் அரசியல் நிர்ணய சபையில் சேர்ந்தேன். அதிக பொறுப்பான பணிகளை ஏற்க நான் அழைக்கப்படுவேன் என்று நான் சிறிதளவுகூடச் சிந்திக்கவில்லை என்னை வரைவுக்குழுக்கு சட்டமன்றம் தேர்ந்தெடுத்த போது நான் பெரிதும், ஆச்சரியம் அடைந்தேன். வரைவுக் குழு என்னை அதன் தலைவராகத் தேர்ந்தெடுத்த போது நான் அதைவிட ஆச்சரியம் அடைந்தேன். எனது நண்பர் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் போன்ற என்னைவிட மிகவும் தகுதிபெற்ற சிறந்த பெரிய மனிதர்கள் வரைவுக்குழுவில் இருந்தனர் என்மீது இவ்வளவு நம்பிக்கை கொண்டு பொறுப்பை என்னிடம் ஒப்படைத்து அவர்களுடைய கருவியாக என்னைப் பயன்படுத்தி நாட்டிற்கு சேவை செய்ய எனக்கு அளித்துள்ள வாய்ப்புக்கு அரசியல் நிர்ணய சபைக்கும், வரைவுக் குழுவிற்கும் நன்றியுடைய வனாகயிருப்பேன். (கைதட்டல்)

இந்தப் பாராட்டுதல்கள் உண்மையிலேயே எனக்கு உரித்ததல்ல, வரைவுக்குழுவின் பரிசீலனைக்காக அரசியல் நிர்ணய சபையின் அரசியல் அமைப்புச் சட்ட ஆலோசகர் திரு.பி.என்.ராவ் தயாரித்தளித்த திருத்தம் செய்யப்படாத மூல ஆவணத்தைத் தயாரித்தளித் ததற்கு அவருக்குப் பகுதிப் பாராட்டுதல்கள் உரித்தாகும். பகுதிப் பாராட்டுதல்கள் வரைவுக்குழு உறுப்பினர்களுக்குச் சேரும். நான் கூறியபடி அவர்கள் 141 நாட்கள் அமர்வில் இருந்தனர். பலவேறு கருத்தோட்டங்களைப் புரிந்துகொண்டு. அவற்றில் சரியானவற்றை ஏற்றுக்கொள்ளும் வரைவுக்குழுவின் தன்மையும் மற்றும் புதிய வழிமுறைகளை உருவாக்கும் அதன் திறமையுமே அரசியல் சாசனத்தை இவ்வளவு வெற்றிகரமாக உருவாக்க உதவியது.

அரசியல் சாசனத்தின் தலைமை வரைவாளரான திரு.எஸ்.என்.முகர்ஜிக்கு அதிகமாகப் பாராட்டுதல்கள் அளிக்கப்பட வேண்டும். மிகவும் நுணுக்கமான ஆலோசனைகளை எளிய, தெளிவான சட்டவடிவில் கொடுப்பதில் அவருக்கு இணை யாருமில்லை. அவருடைய கடுமையான உழைப்பிற்கும் ஆற்றலுக்கும் யாரையும் ஒப்பிடமுடியாது. இந்தச் சட்டமன்றத்துக்கு அவர் ஒரு சிறந்த சொத்து எனலாம். அவருடைய உதவி கிடைக்கவில்லையென்றால் இந்த அரசியல் சாசனத்தைத் தயாரித்து முடிவு செய்ய இந்தச் சபைக்கு மேலும் பல ஆண்டுகள் தேவைப்பட்டிருக்கும். திரு.முகர்ஜியின் கீழ் பணிசெய்யும் ஊழியர்களைக் குறிப்பிட நாம் மறந்துவிடக்கூடாது. நடுநிசிக்கு அப்பாலும் கூட, சிலசமயங்களில், மிக அதிக நேரம் அவர்கள் பணிபுரிந்தனர், அதிலும் அவர்கள் எவ்வளவு கடுமையாகப் பணி புரிந்தனர் என்பதை நான் அறிவேன்.அவர்கள் உழைப்புக்கும் ஒத்துழைப்புக்கும் அவர்கள் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த அரசியல் நிர்ணயசபை ஒரு கதம்பக்கும்பலாக இருந்திருந்தால். அது சிமெண்ட் போடப்படாத நடைபாதையாக இங்கே ஒரு கருங்கல்லும் அங்கே ஒரு வெள்ளைக் கல்லுமாக உள்ள பாதையாக இருந்திருக்கும். ஒவ்வொரு உறுப்பினரும் அல்லது ஒவ்வொரு குழுவும் தாங்களே சட்டத்தின் மொத்த உருவமாகக் கருதிக் கொண்டிருந்தால் வரைவுக்குழுவின் பணி மிகக் கடினமானதாக இருந்திருக்கும். குழப்பத்தைத் தவிர வேறு எதுவும் மிஞ்சியிருக்காது சபையில் காங்கிரஸ் கட்சி இருந்ததால் குழப்பத்தின் சாத்தியப்பாடுகள் அறவே இல்லாமலாகிவிட்டது. அது அவை நடவடிக்கைகளில் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் அளித்தது. காங்கிரஸ் கட்சி கட்டுப்பாடாக நடந்துகொண்டதால் வரைவுக்குழு அரசியல் சாசன உருவாக்கத்தை முறையாக வழிநடத்திச் செல்லமுடிந்தது. ஒவ்வொரு விதி மற்றும் திருத்தத்தின் முடிவைப் பற்றிய தீர்மானமான முடிவுடன் செயல்படமுடிந்தது. சபையில் சாசனவரைவு சிக்கல்களில்லாமல் பரிசீலிக்கப் பட்டதிற்கான பாராட்டுகள் காங்கிரஸ் கட்சியையே சேரும்.

> **ஒவ்வொரு தலைமுறையும், பெரும்பான்மையின் விருப்பப்படி தாங்கள் ஒருங்கிணைத்துக் கொண்டு வாழும் உரிமையுடைய ஒரு தனிப்பட்ட தேசிய இனமாகக் கருத வேண்டும். மற்ற நாட்டுக் குடிமக்களுடன் தங்களைப் பிணைத்துக் கொள்ளும் உரிமையில்லாதது போலவே அடுத்த தலைமுறையையும் பிணைத்துக் கொள்ள முடியாது.**

எல்லா உறுப்பினர்களும் கட்சிக் கட்டுப்பாட்டிற்கு அடங்கி நடந்திருந்தால் அரசியல் நிர்ணய சபையின் நடவடிக்கைகள் சுவையற்றதாக இருந்திருக்கும். கட்சிக்கட்டுப்பாடு அதன் கண்டிப்பான தன்மையால் சட்டமன்றத்தை ஆமாம் ஆமாம் சாமிகளின் கூட்டமாக மாறியிருக்கும். நல்ல காலமாக சில புரட்சியாளர்கள் இருந்தனர். திரு.காமத், டாக்டர்பி.எஸ். தேஷ்முக், திரு.சித்வா, பேராசிரியர் சாக்னோ, பண்டிட் தாகூர்தாஷ் பார்கவா ஆகியவர்களைக் குறிப்பிடவேண்டும்.

அவர்கள் எழுப்பிய பிரச்சனைகளெல்லாம் பெரும்பாலும் சித்தார்த்தம் பற்றியவையே. அவர்களுடைய ஆலோசனைகளை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லாதிருந்தது அவர்களுடைய ஆலோசனைகளின் மதிப்பைக் குறைத்துவிடவில்லை. சட்டமன்ற நடவடிக்கைகளுக்கு உயிரோட்டம் அளிக்க அவர்கள் செய்த சேவையைக் குறைத்து மதிப்பிட முடியாது. நான் அவர்களுக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளேன். அவர்கள் இல்லையென்றால், அரசியல்சாசனத்தை இயந்திர கதியில் நிறைவேற்றுவதைவிட இது முக்கியமானது.

இறுதியாக, இந்தச்சபை நடவடிக்கைகளை நடத்திய முறைக்குத் தலைவர் அவர்களே, உங்களுக்கு நான் என் நன்றியைக் கூறக்கடமைப்பட்டுள்ளேன். இந்தசபையின் நடவடிக்கைகளில் பங்கு கொண்டவர்களுக்குத் தாங்கள் காட்டிய பரிவும் மரியாதையும் அவர்களால் மறந்துவிட முடியாது. வரைவுக்குழுவின் திருத்தங்கள் சிலசமயங்களில் தொழில்ரீதியான சில காரணங்களினால் ரத்து செய்யப்பட வேண்டிவந்தது. அவை எனக்கு மிகவும் நெருக்கடியான தருணங்களாக இருந்தன. அரசியல் சாசனத் தயாரிப்புப்பணி; சட்டப் படிப்பில் சிக்கிக் கொள்ள அனுமதிக்காததற்கு நான் முக்கியமாக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது நண்பர்கள் திரு. அல்லாடி கிருணைசாமி அய்யரும், திரு.டி.டி.கிருஷ்ணமாச்சாரியும் அரசியல் சாசனத்திற்கு எவ்வளவு ஆதரவு அளிக்க முடியுமோ அவ்வளவு ஆதரவு அளித்துள்ளனர். எனவே அரசியல்சாசனத்தின் சிறப்புத்தகுதிகளைப் பற்றி இப்பொழுது நான் பேசப்போவதில்லை. ஏனெனில் ஓர் அரசியல் சாசனம் எவ்வளவு சிறப்பாக இருந்தாலும் அதைச் செயல்படுத்துவர்களின் தன்மையைப் பொருத்து, அதுமோசமானதாக மாறலாம். ஓர் அரசியல் சாசனமாகச் செயல்படுத்துபவர்கள் நல்லவர்களாக இருப்பின் அது ஒரு சிறந்த சாசனமாகச் செயல்படும். ஓர் அரசியல் சாசனத்தின் செயல்பாடு அதன் தன்மையை மட்டும் முற்றிலும் சார்ந்ததன்று. அரசின் உறுப்புகளான சட்டமன்றம் ஆட்சித்துறை, நீதித் துறை ஆகியவைகளை உருவாக்க மட்டும் அரசியல் சாசனம் வழிவகை செய்யும்.

ஆனால் அரசின் இந்த அமைப்புகளின் செயல்பாடுகளுக்கு ஆதாரமான காரணிகள் மக்களும், அவர்கள் தங்கள் நோக்கங்களை அரசியல் அபிலாஷைகளையும் நிறைவேற்றக் கருவிகளாக உபயோகிக்கும் அரசியல்கட்சிகளுமேயாகும். இவற்றின் செயல்பாடுகளைப் பொருத்தே அதன் வெற்றியுள்ளது. இந்திய மக்களும் அவர்களுடைய அரசியல் கட்சிகளும் எம்முறையில் நடந்து கொள்வார்கள் என்பதை யார் கூறமுடியும்? தங்கள் நோக்கங்களை அடைய அவர்கள் அரசியல்சாசன ரீதியிலான நடவடிக்கைகளை எடுப்பார்களா அல்லது புரட்சிகரமுறைகளைப் பின்பற்றப் போகிறார்களா? புரட்சிகரமுறைகளைப் பின்பற்றப் போகிறார்கள் என்றால், அரசியால்சாசனம் எவ்வளவு சிறப்புள்ளதாக இருந்தாலும் அதுதோற்று விடும் என்றுகூற எந்ததீர்க்கதரிசியும் தேவையில்லை. எனவே, மக்களும் அவர்களது கட்சிகளும் என்ன பாத்திரம் வகிக்கப்போகிறார்கள் என்பதைக் கணக்கிலெடுத்துக் கொள்ளாமல், அரசியல் சாசனத்தைக் குறித்துத் தீர்ப்பளிப்பது பயனற்றது.

கம்யூனிஸ்ட்கட்சி மற்றும் சோஷலிஸ்ட்கட்சி ஆகிய இரண்டு தரப்பினரிடமிருந்து பெருமளவில் அரசியல்சாசனத்துக்கு எதிரான கண்டனக்குரலைக் கேட்கமுடிகிறது. அரசியல்சாசனத்துக்கு எதிராக அவர்கள் ஏன் கண்டனக்குரல் எழுப்புகிறார்கள்? ஏனெனில் அது உண்மையிலேயே அரசியல் சாசனமா? இல்லை, என்று நிச்சயமாகக் கூறுகிறேன். தொழிலாளர்களின் சர்வாதிகாரம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் அரசியல்சாசனம் இருக்க வேண்டுமென்று கம்யூனிஸ்ட்கட்சி விரும்புகிறது. நாடாளுமன்ற ஜனநாயகக் கோட்பாட்டின் அடிப்படையில் இந்த அரசியல் சாசனம் அமைத்து இருப்பதால் அவர்கள் கண்டனம் செய்கிறார்கள்.

> **“அரசியல் நிர்ணய சபையின் அரசியல் அமைப்புச் சட்ட ஆலோசகர் திரு.பி.என்.ராவ் தயாரித்தளித்த திருத்தம் செய்யப்படாத மூல ஆவணத்தைத் தயாரித்தளித் ததற்கு அவருக்குப் பகுதிப் பாராட்டுதல்கள் உரித்தாகும்....அரசியல் சாசனத்தின் தலைமை வரைவாளரான திரு.எஸ்.என்.முகர்ஜிக்கு அதிகமாகப் பாராட்டுதல்கள் அளிக்கப்பட வேண்டும்.**

சோஷலிஸ்டுகள் இரண்டு விஷயங்களை விரும்புகிறார்கள். அவர்கள் விரும்பும் முதல் விஷயம் இதுதான். நஷ்டஈடு எதுவும் அளிக்காமல் எல்லாத் தனியார் சொத்துக்களையும் தேசியமயமாக்க, அரசியல் சாசனம் அவர்களுக்குச் சுதந்திரம் அளிக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். இரண்டாவதாக, சோஷயிஸ்டுகள் விரும்புவது, அரசியல் சாசனம் குறிப்பிட்டுள்ள அடிப்படை உரிமைகள் பூரணமானதாக வரம்பற்றதாக இருக்க வேண்டுமென்கிறார்கள். அப்பொழுதுதான் அவர்கள் கட்சி ஆட்சிக்கு வரமுடியாவிட்டால், விமர்சிப்பதற்கு அவர்களுக்கு கட்டுப்பாடற்ற சுதந்திரம் இருப்பதுடன் அரசைக் கவிழ்ப்பதற்கும்கூட உரிமை இருக்கும்.

இந்த முக்கியமான அடிப்படைகளில்தான் அரசியல் சாசனம் குற்றம் சாட்டப்படுகிறது. நாடாளுமன்ற ஜனநாயகக் கோட்பாடு மட்டுமே அரசியல் ஜனநாயக முறையில் சிறந்தது என்று நான்

கூறவில்லை. நஷ்டஈடு அளிக்காமல் தனியார் சொத்துக்களை எடுத்துக் கொள்ளக்கூடாது என்ற கோட்பாடு புனிதமானதென்றோ, அதிலிருந்து விலகிச் செல்வதுகூடாது என்றோ நான் கூறவில்லை. அடிப்படை உரிமைகள் பூரணமாக இருக்கக் கூடாதென்றோ நான் கூறவில்லை. நான் கூறுவதெல்லாம் இந்த அரசியல் சாசனத்தின் கோட்பாடுகள் தற்கால தலைமுறையினரின் கருத்துகளே. ஒருவேளை நான் மிகைப்படக் கூறுவதாகக் கருதினால் அரசியல் நிர்ணயசபை உறுப்பினர்களின் கருத்துகள் அவை என்று கூறுகிறேன். அரசியல் சாசனத்தில் அவைகள் சேர்க்கப்பட்டதற்கு வரைவுக் குழுவின் மீது ஏன் குறைகூறுகிறீர்கள்? அரசியல் நிர்ணய உறுப்பினர்கள்கூட ஏன் குறைகூறப்பட வேண்டும் என்று கேட்கிறேன்?

**அமெரிக்க அரசியல் சாசனத்தை உருவாக்குவதில் பெரும் பங்குவகித்த அமெரிக்காவின் புகழ்பெற்ற அரசியல் நிபுணரான ஜெபர்சன் சில அழுத்தமான கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளார்.** அரசியல் சாசனத்தை உருவாக்குபவர்கள் எவரும் இதைத் தவிர்க்க முடியாது. ஓர் இடத்தில் அவர் பின்வருமாறு கூறியுள்ளார்.

> **ஒவ்வொரு தலைமுறையும், பெரும்பான்மையின் விருப்பப்படி தாங்கள் ஒருங்கிணைத்துக் கொண்டு வாழும் உரிமையுடைய ஒரு தனிப்பட்ட தேசிய இனமாகக் கருத வேண்டும். மற்ற நாட்டுக் குடிமக்களுடன் தங்களைப் பிணைத்துக் கொள்ளும் உரிமையில்லாதது போலவே அடுத்த தலைமுறையையும் பிணைத்துக் கொள்ள முடியாது.**

மற்றொரு இடத்தில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்:

> **ஒரு தேசத்தின் பயன்பாட்டிற்காக உருவாக்கப்பட்டுள்ள அமைப்புகள் தங்களுடைய நலனுக்காகக்கூடத் தொடக்கூடியதல்ல, மாற்றக் கூடியதல்ல என்ற கருத்து பொது மக்களுக்காக, அவைகளை நிர்வகிக்க நியமிக்கப்பட்டவர்களுக்கு, தாராளமாக வழங்கப்பட்டுள்ள உரிமைகளை மன்னர் தவறாகப் பயன்படுத்தாமல் இருக்க ஒரு சட்டவழிமுறையாக இருக்கலாம். ஆனால் அந்தத்தேசத்துக்கு எதிரான முட்டாள்தனமான கருத்தாகும். இது நமது சட்ட வல்லுனர்களும் மதகுருமார்களும் பொதுவாக இந்தக் கோட்பாடுகளைப் புகுத்துகிறார்கள். ஒரு வேளை முந்தைய சந்ததியினர்கள் “இந்த உலகை அதிக சுதந்திரத்துடன் கையாண்டிருக்கலாம். நம்மால் மாற்ற முடியாத சட்டங்களை நம்மீது திணிக்க உரிமை யுள்ளவர்களாக எண்ணியிருக்கலாம். அதேபோன்று நாமும் சட்டங்களை உருவாக்க எதிர்காலத் தலைமுறை யினர்களின் மீது திணிக்கலாம். அவர்களுக்கு அதை மாற்றுவதற்கு எந்த உரிமையும் இருக்காது. மொத்தத்தில் உலகம் உயிருடன் வாழும் மனிதர்களுக்கல்ல மடிந்தவர்களுக்கே சொந்தம்.**

ஜெபர்சன் கூறியது முழுக்க உண்மை என்பதை ஏற்றுக் கொள்கிறேன். ஜெபர்சன் எடுத்துரைத்துள்ள இந்தக் கோட்பாட்டிலிருந்து அரசியல் நிர்ணயசபை விலகிச் சென்றிருந்தால் அதைக் குறைகூறுவது, ஏன் கண்டனம் செய்வதுகூட நியாயமானது தான். ஆனால் அது அப்படி நடந்து கொண்டுள்ளதா என்ற கேட்கிறேன்? அவ்வாறு நடந்து கொள்ளாமல் முற்றிலும் மாறாக அது செயல்பட்டுள்ளது. அரசியல் சாசனத்தைத் திருத்துவது சம்பந்தமான வழிமுறைகளை ஆழ்ந்த நோக்க வேண்டும். இந்த அரசியல் சாசனம் தவறற்றது என்றோ, இறுதியானது என்றோ இந்தச்சபை முத்திரை குத்தவில்லை கனடா நாட்டிலுள்ளது போல மக்களுக்கு அரசியல் சாசனத்தைத் திருத்தும் உரிமை வழங்கப் படாமலிருக்கவில்லை. மாறாக அரசியல் சாசனத்தைத் திருத்துவதற்கு மிகவும் எளிதாக நடைமுறைகள் அளிக்கப்பட்டுள்ளன.

> **“ ஓர்அரசியல் சாசனம் எவ்வளவு சிறப்பாக இருந்தாலும் அதைச் செயல்படுத்துவர்களின் தன்மையைப் பொருத்து, அதுமோசமானதாக மாறலாம். ஓர் அரசியல் சாசனமாகச் செயல்படுத்துபவர்கள் நல்லவர்களாக இருப்பின் அது ஒரு சிறந்த சாசனமாகச் செயல்படும்.**

நாடு இன்றுள்ள நிலையில் அரசியல் சாசனத்தைத் திருத்த நாம் உருவாக்கியுள்ள எளிதான நடைமுறையை இந்த உலகிலுள்ள வேறு எந்த அரசியல் நிர்ணய சபையாவது கொண்டு வந்துள்ளது என்று நிரூபிக்க முடியுமா? அரசியல் சாசனத்தை விமர்சிக்கும் எந்த நபருக்கும் நான் சவால் விடுகிறேன். அரசியல் சாசனத்தின் மீது அதிருப்தி கொண்டுள்ளவர்களுக்குத் தேவைப்படுவதெல்லாம் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைதான். அவர்களுக்கு ஆதரவாக வயதுவந்தோர் ஓட்டுரிமை மூலம் தேர்ந்தேடுக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும் பான்மை பெற முடியவில்லை என்றால் அரசியல் சாசனத்தைப் பற்றிய அவர்களது அதிருப்தி பொதுமக்கள் பகிர்ந்துக் கொள்ளப் படவில்லை என்றுதான் கூறவேண்டும்.

அரசியல் சட்ட முக்கியத்துவம் பெற்ற ஒரே ஒரு விஷயத்தைப் பற்றி மட்டும் தான் குறிப்பிடு கிறேன். மத்திய அரசில் அதிகாரம் குவிக்கப்பட்டு மாநிலங்கள் நகரசபைகள் அளவுக்கு அதிகாரம் இழந்துள்ளன என்ற கடுமையான குற்றச் சாட்டுள்ளது. இது ஒரு மிகைப்படுத்தப்பட்ட குற்றச் சாட்டு என்பது தெளிவாகத் தெரிவதுடன் அரசியல் சாசனம் எதை நடைமுறைப்படுத்த உள்ளது என்பதைப் பற்றிய தவறான அடிப்படையிலிருந்து இது எழுந்துள்ளது எனலாம். மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இடையிலான உறவுகளைப் பொறுத்தவரையில் அது அமைத்துள்ள அடிப் படைக் கோட்பாடுகளைக் கணக்கில் எடுத்துக் கொள்வது அவசியம்.

மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளின் சட்டமன்ற மற்றும் நிர்வாகப் பிரிவினை மத்திய அரசு இயற்றும் சட்டத்தினால் அல்லாமல் அரசியல் சாசனத்தின் மூலமே நிர்ணயிக்கப் படுகிறது என்பதுதான் கூட்டாட்சி முறையின் அடிப் படையான கோட்பாடு. அதைத்தான் அரசியல் சாசனம் செயல்படுத்துகிறது. நமது அரசியல் சாசனத்தின்படி மாநிலங்கள் தங்கள் சட்டமன்ற மற்றும் நிர்வாக அதிகாரத்திற்கு மத்தியஅரசைச் சார்ந்து இருக்கவில்லை. இந்த விஷயத்தில் மத்திய அரசும், மாநில அரசுகளும் சமநிலையில் உள்ளன. இப்படிப்பட்ட ஓர் அரசியல் சாசனத்தை மத்திய அரசுக்குச் சாதகமானது என்று கூறப்படுவதைப் புரிந்து கொள்வது கடினமாக உள்ளது.

வேறு எந்தக் கூட்டாட்சி அரசியல் சாசனத்தில் உள்ளதைக் காட்டிலும் அதிக அளவிலான களத்தை அதனுடைய சட்டமன்ற மற்றும் நிர்வாக அதிகாரத்தை நடைமுறைப்படுத்த மத்திய அரசுக்கு இந்த அரசியல் சாசனம் ஒதுக்கியிருக்கலாம். எஞ்சிய அதிகாரங்கள் மத்திய அரசுக்கு அளிக்கப் பட்டிருக்கலாம். இந்த அம்சங்கள் கூட்டாட்சியின் சாரமாக அமைவ தில்லை. மத்திய அரசுக்கும் அதன் மாநிலங்களுக்கும் இடையே சட்டமன்ற மற்றும் நிருவாக அதிகாரத்தை அரசியல் சாசனம் பகுத்தளிப்பதுதான் கூட்டாட்சி முறையின் முக்கிய அம்சம் எனலாம்.

இந்தக் கோட்பாட்டைத்தான் நமது அரசியல் சாசனம் கொண்டுள்ளது. அதைப்பற்றி எந்தவித ஐயப்பாடும் இருக்க முடியாது. எனவே மாநிலங்கள் மத்திய அரசின் கீழ் வைக்கப்பட்டுள்ளன என்று கூறுவது தவறாகும். இந்த அதிகாரப் பிரிவின் எல்லையை மத்திய அரசு தன் விருப்பப்படி மாற்ற முடியாது. நீதித்துறைகூட ஒன்றும் செய்ய முடியாது. இது மிகவும் தெளிவாகக்கூறப்பட்டுள்ளது.

நீதிமன்றங்கள் திருத்தம் செய்யலாம் ஆனால் எதை ஒன்றையும் அதற்குப் பதிலாகப் புகுத்த முடியாது. முன்பு கூறிய விளக்கங்களுக்குப் புதிய வாதங்களை, புதிய கருத்துக்களை அளிக்கலாம். ஒருசில விசேஷ சந்தர்ப்பங்களில் இந்த எல்லைக்கோட்டைத் தாண்டலாம். ஆனால் சில வரையறைகளை அவை தாண்ட முடியாது. குறிப்பிட்டு ஒதுக்கப்பட்டுள்ள சில அதிகாரங்களை அவை மாற்றி ஒதுக்க முடியாது. ஏற்கெனவே உள்ள அதிகாரத்தின் கூட்டுக் கோப்பை அவை விரிவு படுத்த முடியும். வெளிப்படையாக ஒரு அமைப் புக்குக் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தை வேறு ஒரு அதிகார அமைப்புக்குக் கொடுக்க முடியாது. ஆகவே கூட்டாட்சி முறைக்கு மாறாக மத்திய அரசியல் அதிகாரக் குவிப்பு என்ற முதல் குற்றச் சாட்டு தோற்றுவிடுகிறது.

மாநில அரசுகளைப் புறக்கணித்து செயல்பட மத்திய அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்பது இரண்டாவது குற்றச்சாட்டு இந்தக் குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான் இந்த மாதிரி அதிகப்படியான அதிகாரங்களை அரசியல் சாசனம் அளிப்பதற்கு அதைக் கண்டனம் செய்வதற்கு முன் சில நோக்கங்களை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

> **கட்சிகள் நாட்டைவிடத் தங்கள் மதக்கோட்பாடு களுக்கே முக்கியத்துவம் கொடுத்தால், நமது சுதந்திரத்துக்கு இரண்டாவது தடவையாக ஆபத்து என்பதுடன் என்றென்றைக்குமாக நமது சுதந்திரத்தை இழப்பது என்பது நிச்சயம்.**

இந்த அதிகப்படியான அதிகாரம் என்பது அரசியல் சாசனத்தின் பொதுவான அம்சமாக இல்லை. அது உபயோகப்படுவதும், செயல்படுத்தப் படுவதும், நெருக்கடி கால நிலைகளில் மட்டுமே. இரண்டாவதாகச் சிந்திக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், ஒரு நெருக்கடிநிலை தோன்றும் போது மத்தியஅரசுக்கு அதிகப்படியான அதிகாரம் கொடுப்பதைத் தவிர்க்க முடியுமா? ஒரு நெருக்கடி யான காலகட்டத்தில் மத்தியஅரசுக்கு இப்படிப் பட்ட அதிகப்படியான அதிகாரம் கொடுப்பதின் நியாயத்தை மறுப்பவர்கள், பிரச்சினையின் அடிப் படையில் உள்ள விஷயத்தைத் தெளிவாகக் காண வில்லை என்று தெரிகிறது. வட்டமேஜை என்ற இதழின் 1935 ஆம் ஆண்டு டிசம்பர் மாத வெளியீட்டில் இந்தப் பிரச்சினை மிகத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. அதிலிருந்து பின்வரும் பகுதியைக் கொடுப்பதில் மகிழ்ச்சியடைகிறேன் என்றுஆசிரியர் கூறகிறார்.

அரசியல் அமைப்பு முறைகள் என்பவை உரிமைகளும், கடமைகளும் அடங்கிய தொகுதியாக உள்ளன. இறுதியில் யாருக்கு அல்லது எந்த அதிகார அமைப்புக்கு ஒரு குடிமகன் தன் விசுவாசத்தைச் செலுத்துகிறான் என்பதில் இது அடங்கியிருக்கிறது. சாதாரண நடைமுறைகளில் இந்தக்கேள்வி எழுவ தில்லை. ஏனெனில் சட்டம் அதைக் கவனித்துக்

கொள்கிறது. இந்த மாதிரி பல்வேறு நடவடிக்கைகளில் ஒருகுறிப்பிட்ட செயல்பாடுகளில் ஓர் அதிகார அமைப்பிற்கும், மற்ற நடவடிக்கைகளில் வேறு ஒரு அதிகார அமைப்பிற்கும் பணிந்து குடிமகன் தன் அலுவல்களைக் கவனித்து வருகிறான். ஆனால் ஒரு நெருக்கடி உருவாகும்போது விசுவாசத்தை கோரும் உரிமை யாருக்கு என்பதில் முரண்பாடுகள் தோன்றுகின்றன. இறுதியான விசுவாசத்தைப் பிரிப்பது சாத்தியமில்லை என்பது அப்போது தெளிவாகிறது. இறுதியாக வட்ட விளக்கத்தின் மூலம் விசுவாசப் பிரச்சினையை தீர்மானிக்க முடியாது. எல்லா யதார்த்த நிலைமைகளுக்கும் ஒத்து சட்டம் இருக்க வேண்டும். எல்லா சம்பிரதாய முறைகளையும் களைத்துவிட்டுப் பார்த்தால் கேள்வி இதுதான், குடிமகனின் எஞ்சிய விசுவாசம் எந்த அதிகார அமைப்பிற்கு உள்ளது? அது மத்திய அரசுக்காக அல்லது உறுப்பினராக உள்ள மாநிலத்திற்கா?

பிரச்சினையின் காரணமான இந்தக் கேள்வியின் பதிலைப் பொறுத்துத்தான் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு உள்ளது. பெரும்பான்மையான மக்களின் கருத்துப்படி நெருக்கடி காலத்தில் குடிமகனின் எஞ்சிய விசுவாசம் மத்திய அரசின் மீதுதான், உறுப்பினராகவுள்ள மாநிலங்களின் மீதல்ல என்பதில் ஐயப்பாடு இல்லை. நாடு முழுவதற்குமான பொதுநலனுக்காக பொதுவான முடிவுக்கு மத்திய அரசே செயலாற்ற முடியும். ஒரு நெருக்கடி காலத்தில் மத்திய அரசுக்கு அதிகப்படியான அதிகாரங்கள் வழங்கப்பட்டதற்கான நியாயம் இதில்தான் இருக்கிறது. இந்த நெருக்கடி கால அதிகாரங்களினால் உறுப்பு மாநிலங்களுக்கு என்ன கடமைகள் தான் சுமத்தப்பட்டுள்ளன? இதைத் தவிர வேறு ஒன்றுமில்லை ஒரு நெருக்கடி நிலையின் போது தங்களுடைய பிராந்திய நலன்களுடன் மொத்தமாக தேசத்தின் நலன்களையும் கருத்துகளையும் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும். இந்தப் பிரச்சினையைப் புரிந்து கொள்ளாதவர்கள் மட்டும் அதை எதிர்த்துக் குறை கூற முடியும்.

இத்துடன் நான் என் உரையை முடித்திருப்பேன், நமது நாட்டின் எதிர்காலம் என் உள்ளம் முழுவதையும் ஆட்கொண்டுள்ளது. அதுகுறித்து என்னுடைய கருத்துகள் சிலவற்றை வெளிப்படுத்த இந்த வாய்ப்பை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நினைக்கிறேன். 1950 ஜனவரி 26 இல் இந்திய ஒரு சுதந்திர நாடாக மலர்ந்து விடும். (கரவொலி) பிறகு அதனுடைய சுதந்திரம் என்னவாகும்? தன் சுதந்திரத்தை அது காப்பாற்றிக் கொள்ளுமா அல்லது மீண்டும் அதை இழந்துவிடுமா? இந்தச் சிந்தனையே முதலில் என் மனதில் தோன்றுகிறது.

இந்தியா ஒரு பொழுதும் சுதந்திர நாடாக இருக்கவில்லை என்று கூறமுடியாது? ஒரு காலத்தில் தான் பெற்றிருந்த சுதந்திரத்தை அது இழந்தது. இரண்டாவது தடவையாக இந்தியா தன் சுதந்திரத்தை இழந்துவிடுமா? இந்தச் சிந்தனைதான் எதிர்காலத்தைப்பற்றி எனக்கு மிகுந்த அச்சத்தை அளிக்கிறது. இதற்கு முன்பு இந்தியா தன் சுதந்திரத்தை இழந்துவிட்டது என்ற உண்மை மட்டுமல்ல என் மனதில் சஞ்சலத்தை தோற்றுவிக்கிறது. நமது மக்கள் சிலரின் துரோகமும் வஞ்சகத் தன்மையுமே அதற்குக் காரணம் என்பதை எண்ணும் போதுதான் மனம் கவலை அடைகிறது.

> **இந்தியாவில்தான் இறைவழிபாடு என்றழைக்கப்படும் பக்தி அல்லது தனிநபர் வழிபாடு, இந்த உலகின் வேறு எந்த நாட்டின் அரசியலிலுள்ளதையும்விட அரசியலில் பெரும் பங்கு வகிக்கிறது. மதச் சம்பிரதாயங் களில் ஆத்மாவின் விடுதலைக்கு பக்தி ஒரு மார்க்கமாக இருக்கலாம். ஆனால் அரசியலில் பக்தி அல்லது தனிநபர் வழிபாடு சீரழிவுக்கு ஒரு நிச்சயமான பாதையாகும். அத்துடன் அது இறுதியில் சர்வாதிகாரத்துக்கே இட்டுச் செல்லும்.**

சிந்து மாகாணத்தின் மீது முகமது பின் காசிம் படையெடுத்தபோது தாகர் மன்னனின் ராணுவப் படைத்தலைவர்களே தமது மன்னரின் பக்கம் போரிட மறுத்ததுடன் முகமது பின் காசிமின் முகவர்களிடமிருந்தே கையூட்டும் பெற்றுள்ளனர். முகமது கோரியை இந்தியாவின் மீது படையெடுக்க அழைத்தவர் ஜெய் சந்த் ஆவார். பிரிதிவி ராஜ் அரசனுடன் போர் செய்ய அவர் உதவி செய்ய முன்வந்ததுடன் சோலாங்கி அரசர்களின் உதவியையும் பெற்றுத்தருவதாகக் கூறினார். இந்துக்களின் விடுதலைக்காக சிவாஜி போரிட்டுக் கொணடிருந்த போது, மற்ற மராத்திய பிரபுக்களும், ராஜபுத்திர மன்னர்களும் முகலாய மன்னர்களின் தரப்பில் போரில் ஈடுபட்டிருந்தனர். சீக்கிய ஆட்சியாளர்களைப் பிரிட்டிஷ் அரசு அழிக்க முயன்றுபோது சீக்கியர்களின் முக்கிய தளபதி கலாப்சிங் சீக்கிய அரசைக் காப்பாற்ற உதவிக்கு வராததுடன், செயலற்று இருந்துவிட்டார் 1857 இல் பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக இந்தியாவின் பெரும் பகுதியிலும் கிளர்ச்சி வெடித்த போது, வெறும் ஊமைப் பார்வையாளர்களாக அதை சீக்கியர்கள் பார்த்துக் கொண்டிருந்தனர்.

மீண்டும் அதே நிகழ்வுகள்தானே? இந்தக் கவலைதான் என் மனதை ஆட்கொண்டுள்ளது. சாதி மற்றும் மத நம்பிக்கைகள் வடிவத்திலான பழைய விரோதிகளுடன், பல்வேறு மாறுபட்ட அரசியல் கொள்கைகளையுடைய அரசியல் கட்சிகளும் சேர்ந்து கொள்ளப்போகின்றன என்பதை எண்ணும் போது என் கவலை மேலும் அதிகமாகிறது.

**இந்தியர்கள் தங்கள் மத நம்பிக்கைகளுக்கு மேலாக நாட்டைக் கருதப்போகிறார்களா அல்லது நாட்டைவிட மத நம்பிக்கைக்கே முக்கியத்துவம் கொடுக்கப் போகிறார்களா? இது எனக்குத் தெரியாது. கட்சிகள் நாட்டைவிடத் தங்கள் மதக்கோட்பாடுகளுக்கே முக்கியத்துவம் கொடுத்தால், நமது சுதந்திரத்துக்கு இரண்டாவது தடவையாக ஆபத்து என்பதுடன் என்றென்றைக் குமாக நமது சுதந்திரத்தை இழப்பது என்பது நிச்சயம். இந்த விளைவுக்கு எதிராக நாம் விழிப்புடன் இருக்கவேண்டும் நமது கடைசி துளி இரத்தம் இருக்கும் வரை நமது சுதந்திரத்தைப் பாதுகாப்பதில் நாம் உறுதியாக இருக்க வேண்டும் (ஆரவாரம்)**

1950 ஆம் ஆண்டு ஜனவரி 26 இல் இந்தியா ஒரு குடியரசு நாடாக ஆகிவிடும். அதாவது அந்நாளிலிருந்து இந்திய அரசு மக்களுடைய, மக்களால் ஆன, மக்களுக்கான அரசாக இருக்கும், திரும்பவும் முன்பு தோன்றிய அதே எண்ணம் என் மனதை வருத்துகிறது. அதனுடைய ஜனநாயக அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு என்ன நேரப்போகிறது? அதைக்காப்பாற்றிக் கொள்ளுமா அல்லது மீண்டும் இழந்துவிடுமா? இதுதான் என் மனதில் முன்னதைப் போன்று இரண்டாவதாக என்னை கவலையுறுத்தும் சிந்தனை.

ஜனநாயகம் என்பது இந்தியா அறியாத ஒரு கோட்பாடல்ல ஒரு காலத்தில் இந்தியாவில் பல ஜனநாயகக் குடியரசுகள் இருந்தன. மன்னர் ஆட்சிகள் இருந்த இடங்களில்கூட அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாகவோ அல்லது சில வரையறைக்கு உட்பட்டவர்களாகவோ இருந்தனர். அவர்கள் எல்லையற்ற அதிகாரத்தைப் பெற்றிருக்க வில்லை. நாடாளுமன்றத்தையோ அல்லது நாடாளு மன்ற நடவடிக்கைகளையோ இந்தியா அறிந்திருக்க வில்லை என்று கூற முடியாது.

பௌத்தர்களின் பிட்சு சங்கங்களைப் பற்றிப் படிக்கும் போது நாடாளுமன்றங்கள் இருந்ததை அறிகிறோம். சங்கங்கள் நாடாளுமன்றகளைப் போன்றதே. நவீன கால நாடாளுமன்ற நடைமுறை களை சங்கங்கள் அறிந்திருந்ததுடன் அதை செயல்படுத்தியும் வந்திருக்கின்றன. சங்கங்களில் உறுப்பினர்களின அமர்வு முறை பற்றியும், தீர்மானங்கள் பிரேரேணைகள், கோரெம், கொரடா, வாக்கெண்ணிக்கை, இரகசிய வாக்களிப்பு, தீர்மானம், ஒழுங்குமுறை, கண்டனத் தீர்மானம், முன் தீர்ப்புத் தடை ஆகியவைகள் குறித்த விதிகள் இயற்றியிருந்தனர். சங்கங்களின் அமர்வுகளை நடத்த இந்த நாடாளுமன்ற விதிமுறைகள் புத்தரால் செயல்படுத்தப்பட்டாலும், அந்தக் காலத்தில் நாட்டில் நடைமுறையில் இருந்த அரசியல் சட்ட மன்றங்களின் விதிகளிலிருந்து இவைகள் எடுக்கப் பட்டிருக்க வேண்டும். இந்த ஜனநாயக முறையை இந்தியா இழந்தது. இரண்டாவது தடவையாக அதை அது இழந்துவிடுமா? அது எனக்குத் தெரியாது.

இந்தியா போன்ற ஒரு நாட்டில் அது சாத்தியமே. ஜனநாயகம் நெடுங்காலமாக பழக்கத்தில் இல்லாமல் இருந்ததால் அது ஒரு புதுமையாகவே இருக்கிறது. **ஜனநாயகம், சர்வாதி காரத்துக்குப் பணிந்துவிடக் கூடிய அபாயம் உள்ளது. புதிதாகப் பிறந்துள்ள இந்தக் குடியரசு தனது ஜனநாயகத் தோற்றத்தை வைத்துக் கொண்டு யதார்த்த செயல்பாட்டில் ஒரு சர்வாதிகார அமைப்பாக மாறக்கூடிய வாய்ப்புகள் உள்ளன. ஜனநாயகம் பற்றி மக்களின் சிந்தனையில் தீவிர மாற்றம் ஏற்பட்டால் இரண்டாவதாகக் கூறப்பட்டது நடைபெறக் கூடிய வாய்ப்பின் அபாயம் அதிகமாக உள்ளது.**

தோற்றத்தில் மட்டுமல்லாது உண்மையிலேயே ஜனநாயகத்தைப் பேணிப் பாதுகாக்க வேண்டு மென்றால் நாம் என்ன செய்ய வேண்டும்? முதலாவது நமது சமூக மற்றும் பொருளாதார நோக்கங்களை அடைவதற்கு அரசியல் சட்ட முறையை நாம் உறுதியாகப் பிடித்துக் கொள்ள வேண்டும் என்பதை என்னுடைய முடிவாக உள்ளது. அதன் பொருள் இரத்தக்களறியான புரட்சி முறையைக் கைவிட வேண்டும். சட்ட மறுப்பு இயக்கம், ஒத்துழையாமை இயக்கம், சத்தியாக்கிரகம் ஆகிய முறைகளைக் கைவிட வேண்டும்.

> **அரசியல் ஜனநாயகத்துடன் மனநிறைவு அடைந்துவிடக் கூடாது. நமது அரசியல் ஜனநாயகத்தை ஒரு சமூக ஜனநாயகமாகவும் மாற்றவேண்டும். சமூக ஜனநாயக அடிப்படையின்றி அரசியல் ஜனநாயகம் நீண்டு நிலைத்திருக்க முடியாது.**

பொருளாதார மற்றும் சமூக லட்சியங்களை அரசியல் சட்டமுறையில் அடைவதற்கு வாய்ப் பில்லாத போதுதான் அரசியல் சட்ட சம்பந்தமற்ற முறையை கையாளுவது நியாயமாக இருக்க முடியும். ஆனால் அரசியல் சட்டரீதியாக வாய்ப்புகள் இருக்கும்போது இம்மாதிரியான அரசியல் சட்டத்திற்கு புறம்பான வழிமுறைகள் நியாய மற்றதாகும். இம்முறைகளெல்லாம் கட்டுப்பாடு இழந்த அரசியல் குழப்ப நிலையின் இலக்கணமே எவ்வளவு விரைவில் இதை உதறித்தள்ளுகிறோமோ அந்த அளவுக்கு நமக்கு நல்லது.

இரண்டாவதாக ஜனநாயகத்தைப் பேணிப் பாதுகாப்பதில் அக்கறை கொண்டுள்ளவர்களுக்கு ஜான் ஸ்டூவர்டு மில் விடுத்துள்ள எச்சரிக்கையை நாம் கடைப்பிடிக்கவேண்டும். அதாவது தங்களுடைய சுதந்திரத்தைப் பெரிய மனிதரின் கால்களில் அர்ப்பணித்து விடக்கூடாது அல்லது ஜனநாயக அமைப்புகளைக் குலைப்பதற்கு அவருக்கு அதிகாரம் அளிக்கும் அளவுக்கும அவரிடம்

நம்பிக்கை வைத்துவிடக்கூடாது. நாட்டுக்காக வாழ்க்கை முழுவதையும் அர்ப்பணித்த பெரிய மனிதர்களிடம் நன்றியுடன் இருப்பது எந்த விதத்திலும் தவறாகாது. ஆனால் இதற்கு ஒரு வரம்புள்ளது.

ஜரிஷ் தேசபக்தரான டேனியல் ஒ கன்னல் குறிப்பிட்டது போல் தன்னுடைய சுயமரியாதையை இழக்கும் அளவுக்கு எந்த மனிதனும் நன்றியுடைய வனாக இருக்க முடியாது. தன் கற்பை இழக்கும் அளவுக்கு எந்தப் பெண்ணும் நன்றியுடையவளாக இருக்க முடியாது. தன்னுடைய சுதந்திரத்தை இழக்கும் அளவுக்கு எந்த நாடும் நன்றியுடையதாக இருக்கமுடியாது. மற்ற நாடுகளைவிட இந்தியா போன்ற நாட்டிற்குத்தான் இந்த எச்சரிக்கை அவசியமாகிறது. இந்தியாவில் தான் இறைவழிபாடு என்றழைக்கப்படும் பக்தி அல்லது தனிநபர் வழிபாடு, இந்த உலகின் வேறு எந்த நாட்டின் அரசியலிலுள்ளதையும்விட அரசியலில் பெரும் பங்கு வகிக்கிறது. மதச் சம்பிரதாயங்களில் ஆத்மாவின் விடுதலைக்கு பக்தி ஒரு மார்க்கமாக இருக்கலாம். ஆனால் அரசியலில் பக்தி அல்லது தனிநபர் வழிபாடு சீரழிவுக்கு ஒரு நிச்சயமான பாதையாகும். அத்துடன் அது இறுதியில் சர்வாதிகாரத்துக்கே இட்டுச் செல்லும்.

மூன்றாவது விஷயம் என்னவென்றால், அரசியல் ஜனநாயகத்துடன் மனநிறைவு அடைந்து விடக் கூடாது. நமது அரசியல் ஜனநாயகத்தை ஒரு சமூக ஜனநாயகமாகவும் மாற்றவேண்டும். சமூக ஜனநாயக அடிப்படையின்றி அரசியல் ஜனநாயகம் நீண்டு நிலைத்திருக்க முடியாது. சமூக ஜனநாயகம் என்றால் என்ன?. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், ஆகியவைகளை வாழ்க்கையின் கோட்பாடுகளாக அங்கீகரிக்கும் ஒரு வாழ்க்கை முறை அது. சுதந்திரம். சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவைகளைக் கொண்ட இந்த மும்மையின் தனிப்பகுதிகளாக அவைகளைப் பிரிக்க முடியாது. இந்த மூன்றும் ஒன்றாக இணைந்துள்ளன. அதாவது ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிப்பது ஜனநாயகத்தின் அடிப்படையையே தகர்ப்பதாகும்.

சுதந்திரத்தை சமத்துவத்திலிருந்து பிரிக்க முடியாது. அதே போன்று சமத்துவத்திலிருந்து சுதந்திரத்தைப் பிரிக்க முடியாது. சமத்துவம் சுதந்திரம் ஆகியவற்றிலிருந்து சகோதரத்துவத்தைப் பிரிக்க முடியாது. சமத்துவம் இல்லாத சுதந்திரம் சிலரின் மீது பெரும்பான்மையினரின் ஆதிக்கத்தைத் தோற்றுவிக்கும், சுதந்திரமில்லாத சமத்துவம் தனிப்பட்டவரின் முன்முயற்சியை அழித்துவிடும். சகோதரத்துவம் இல்லாத சுதந்திரம் சமத்துவமும் செயல்களின் இயற்கையான போக்காக இருக்க முடியாது. அதை செயல்படுத்த ஒரு காவல் அதிகாரி தேவைப்படுவார்.

இந்தியச் சமுதாயத்தில் இரண்டு விஷயங்கள் இல்லாதிருக்கும் உண்மையை ஏற்றுக் கொள்வ திலிருந்து நாம் ஆரம்பிக்க வேண்டும். அதில் ஒன்று தான் சமத்துவம், சமுதாய நிலையில் சமத்துவமற்ற தரவாரியான கோட்பாட்டைக் கொண்ட ஒரு சமுதாயமே இந்தியாவில் உள்ளது. சிலருக்கு உயர்ந்த அந்தஸ்தும் சிலருக்குத் தாழ்ந்த நிலையுமே அதன் பொருள். பொருளாதார நிலையில் சிலருக்கு அளவிடற்கரிய செல்வமும், சிலருக்கு தாங்க முடியாத வறுமையில் வாட வேண்டிய நிலையும் கொண்டது நமது சமுதாயம்.

1950 ஆம் ஆண்டு 26 ஜனவரியன்று ஒரு முரண்பாடான வாழ்க்கை முறையில் நுழையப் போகிறோம். அரசியலில் சமத்துவமும், சமூக மற்றும் பொருளாதார வாழ்வில் சமத்துவத்தை எவ்வளவு காலம் மறுக்கப் போகிறோம்? நீண்டகாலம் அதைத் தொடர்ந்து மறுத்தால், நமது அரசியல் ஜனநாயகத் துக்கு ஆபத்தை விளைவிப்பதிலிருந்து தப்ப முடியாது. நாம் விரைவில் இந்த முரண் பாடுகளை நீக்கவேண்டும் இல்லையெனில் சமத்துவ உரிமை மறுக்கப்பட்டவர்கள் இந்த சபை கடுமை யாக உழைத்து உருவாக்கிய அரசியல் ஜனநாயக கட்டமைப்பையே உடைத்தெறியலாம்.

இரண்டாவது விஷயம் என்னவென்றால் சகோதரத்துவம் என்ற கோட்பாட்டை அங்கீ கரித்தது எனலாம். சகோதரத்துவம் என்றால் அதன் பொருள் என்ன? இந்தியர்கள் ஒரே மக்கள் என்பதால், எல்லா இந்தியர்களும் பொதுவான உடன்பிறப்புகள் என்ற உணர்வுதான். அது, இந்தக் கோட்டுபாடுதான் சமுதாய வாழ்வில் ஒற்றுமை யையும் ஒருமைப்பாட்டையம் அளிக்கிறது. இதை அடைவது மிகவும் கஷ்டமே, அமெரிக்க ஐக்கிய நாடுகள் பற்றி “அமெரிக்க காமென்வெல்த்” என்ற தனது நூலில் ஜேம்ஸ் பிரைஸ் எழுதியுள்ளதை எடுத்துக் காட்டுவதன் மூலம். இது எவ்வளவு கடினமானது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

பிரைஸின் சொந்த வார்த்தைகளில் சொல்வ தென்றால், விஷயம் இதுதான்

“சில ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்க புரோடஸ்டென்ட் திருச்சபை பொதுவழிபாட்டு முறையைப் பற்றி மூன்றாண்டுக்கு ஒருமுறை நடைபெறும் அதன் கூட்டத்தில் விவாதித்தது. பிரார்த்தனையில் மக்கள் எல்லோருக்குமான ஒரு பிரார்த்தனை வாசகத்தைச் சேர்க்க வேண்டுமென்று ஒரு கருத்து எழுந்தது. நியூ இங்கிலாந்தைச் சார்ந்த ஒரு பிரபல சமயவல்லுநர் பின்வரும் வார்தைகளை முன்மொழிந்தார். “ஓ, பிதாவே எங்கள் தேசத்தை ஆசிர்வதியுங்கள்” ஒருநாள் மாலைநேர அவசர நிலையில் அது ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் ஆய்வுக்காக மறுநாள் அது கொண்டுவரப்பட்டு “தேசம்” என்ற சொல்லுக்கு எதிராகப் பல ஆட்சே பனைகள் எழுப்பப்பட்டன. “தேசம்” என்ற சொல் தேசிய ஒற்றுமையை மிகவும் அழுத்தமாகத் தெரிவிக்கிறது என்று அது நிராகரிக்கப்பட்டது. அதற்குப் பதிலாக இந்தச் சொற்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. “ஓ பிதாவே இந்த ஐக்கிய நாடுகளை ஆசிர்வதியுங்கள்”.

இந்த நிகழ்ச்சி நடைபெற்றபோது அமெரிக்காவில் அதிகமான ஒருமைப்பாடு காணப்படவில்லை. அமெரிக்க மக்கள் தங்களை ஒரு தேசிய இனமாகக் கருதவில்லை. இந்திய மக்களுக்கு தங்களை ஒரு தேசிய இனம் என்று கருதுவது எவ்வளவு கடினமான விஷயம். ..... நாம் ஒரு தேசிய இனம் என்று நம்புவது பெரும் மாயையில் இருக்கிறோம் என்றுதான் நான் நினைக்கிறேன். பல்லாயிரக்கணக்கான சாதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும் இவர்கள் எப்படி ஒரே தேசிய இனமாக முடியும்? இந்தச் சொல்லின் சமூக மற்றும் மனோதத்துவ ரீதியான பொருளில் நாம் இன்னும் ஒரு தேசிய இனமாக உருவாகவில்லை என்பதை எவ்வளவு விரைவில் உணர்ந்து கொள்கிறோமோ அந்த அளவுக்கு நமக்கு நல்லது. அப்பொழுதுதான் நாம் ஒரு தேசிய இனமாக வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து அந்த இலக்கை அடைவதற்கு தீவிரமாகச் சிந்தனை செய்வோம். இந்த இலக்கை அடைவது மிகவும் கடிமனான விஷயமாக இருக்கும்.

அமெரிக்காவில் ஜாதிப்பிரச்சினை கிடையாது. இந்தியாவில் ஜாதிகள் உள்ளன. தேசிய இனச் சிந்தனைக்கு எதிரானது ஜாதிகள். முதலில் சமூக வாழ்வில் அவை பிளவுகளை ஏற்படுத்து கின்றன. ஜாதிக்கும் ஜாதிக்கும் இடையே வெறுப் பையும், பொறாமையையும் உருவாக்குவதால் அவை தேசிய இனக் கொள்கைக்கு விரோதமாக இருக்கின்றன. உண்மையிலேயே நாம் ஒரு தேசிய இனமாக உருவாக வேண்டுமென்றால் இந்த தடைக்கற்களையெல்லாம் கடந்து வரவேண்டும். ஒரு தேசிய இனம் உருவானால் தான் சகோதரத்துவம் உண்மையானதாக இருக்க முடியும். சகோதரத்துவம் இல்லாத சமத்துவமும் சுதந்திரமும் ஒர வண்ணப் பூச்சின் ஆழத்தைவிட அதிமாக இருக்க முடியாது.

நம் முன்னுள்ள பணிகளைப் பற்றிய என் சிந்தனைகள் இவைதான். சிலருக்கு இது மனதுக்கு உகந்ததாக இருக்காது. பல காலமாகவே அரசியல் அதிகாரம் இந்நாட்டில் சிலரின் ஏகபோகமாக இருந்து வந்துள்ளது. பலரும் பொதி சுமப்பவர்களாவும், வேட்டையாடப்பட்டவர்களாகவுமே இருந்து வந்துள்ளனர். சிலரிடம் ஏகபோகமாக இருந்த அதிகாரத்தின் விளைவாக மற்றவர்கள் வாழ்க்கையில் மேம்பாடு அடையும் வாய்ப்பை இழந்தவுடன், வாழ்க்கையின் பொருளையே அது உறிஞ்சிக் குடித்துவிட்டது. தாங்கள் ஆளப்படுவதிலிருந்து அவர்கள் சோர்ந்து போய்விட்டார்கள். தாங்களே ஆளவேண்டும் என்ற ஆவல் அவர்களிடம் பொங்கி வழிந்து கொண்டிருக்கின்றது. நசுக்கப்படும் வகுப்பினரிடையே சுயஉணர்வுக்கான ஆர்வம் ஒரு வர்க்கப் போருக்கோ, வகுப்பினர்களுக்கிடையேயான போராட்டைத்தை வளர்த்து விடவோ, அனுமதித்து விடக்கூடாது. இந்த அவையின் பிளவுக்கு இது வழி வகுக்கும். உண்மையிலேயே அது அழிவுக்கான நாளாகும்.

ஆப்ரகாம் லிங்கன் கூறியபடி பிளவுப்பட்ட ஓர் அவை (சட்டமன்றம்) நீண்டநாட்கள் தாக்குப் பிடிக்க முடியாது. அவர்களுடைய அவாக்கள் நிறைவேற வாய்ப்பளித்தால் அந்தச் சிலருக்கு நல்லது நாட்டுக்கும் நல்லது. அதனுடைய சுதந்திரத்தைக் காப்பதற்கும் சிறந்தது. அதனுடைய ஜனநாயகக் கட்டமைப்பைத் தொடர்வதற்கும் சிறந்தது. வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் சமத்துவமும் சகோதரத்துவமும் நிறுவப்பட்டால்தான். இது சாத்தியமாகும் எனவேதான் நான் இதற்கு இவ்வளவு அழுத்தம் கொடுக்கிறேன்.

மேலும் இந்த அவையை களைப்பூட்ட விரும்பவில்லை. சுதந்திரம் என்பது சந்தேகத்துக்கு இடமின்றி ஒரு மகிழ்ச்சிகரமான விஷயமே. இந்தச் சுதந்திரம் நம் மீது அதிகமான பொறுப்புகளைச் சுமத்தியுள்ளது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஏதாவது மோசமாக நடைபெறும்போது பிரிட்டிஷ் அரசைக் குறைசொல்லும் போக்கைச் சுதந்திரம் பெற்றதால் நாம் இழந்து விட்டோம். இனி ஏதாவது குறைபாடுகள் நேருமானால் நம்மைத்தவிர வேறு யாரையும் குறைகூற முடியாது. விஷயங்கள் சீர்கேடடைவதற்கான பெரும் அபாயம் உள்ளது. காலம் விரைவாக ஓடிக்கொண்டிருக்கிறது. நம்முடைய மக்கள் உள்பட எல்லோரும் புதிய சிந்தாந்தங்களால் கவரப்படுகின்றனர். மக்களால் நடைபெறும் ஆட்சியில் அவர்கள் மிகவும் சோர்வடைந்துவிட்டனர். மக்களுடைய ஆட்சியானாலும் சரி, அல்லது மக்களாலான ஆட்சியானாலும் சரி அவற்றில் அக்கறை சிறிதும் இல்லாமல் மக்களுக்கான ஆட்சி நடைபெறுவதையே அவர்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராகிவிட்டனர். மக்களுடைய ஆட்சி, மக்களுக்கான ஆட்சி, மக்களால் நடைபெறும் ஆடசி என்ற கோட்பாட்டை புனிதமாக வைத்திருக்கும் நாம் அரசியல் சாசனத்தைப் பாதுகாக்க விரும்பினால், நமது பாதையில் நிரம்பிக் கிடக்கும் தீய சக்திகள் இனம் காண்பதில் துடிப்புடன் இருப்போம் என்று நாம் உறுதி எடுத்துக் கொள்வோம். மக்களாலான அரசை விட மக்களுக்கான அரசை மக்கள் தேர்ந்தெடுக்கத் தூண்டும் முன்முயற்சியில் சோர்ந்து விட மாட்டோம் என்று உறுதிசெய்வோம்.

நன்றி: “நான் ஏன் பதவி விலகினேன்” நூல்
தொகுப்பு: மருத்துவர் நா.ஜெயராமன்.
அபெகா வெளியீடு,
832 கீழராஜ வீதி 2-அம் தளம்,
புதுக்கோட்டை - 622001,
அ.பே.எண். 99438 46484

தாராபுரம் பூங்கொடி



## நீதிமன்றத்தில் வழக்கு!

# திருமணங்களில் பெண்ணின் சம்மதத்தைக் கட்டாயமாக்கு!

நீண்ட நாட்களுக்குப் பிறகு எனது நெருங்கிய தோழி ஒருத்தியைச் சந்தித்தேன். அவள் உறவினரின் குடும்பக் கதையை வேதனையோடு பகிர்ந்து கொண்டாள். இனி அவள் வாயிலாக சம்பவத்தைக் கேட்கலாம். இரண்டு பெண் குழந்தைகளை உடைய அந்தக் குடும்பத்தின் தந்தை இறந்துவிட உறவினர்களை அண்டியிருக்க வேண்டிய சூழ்நிலைக்கு அக்குடும்பம் உள்ளாகியது.

மூத்த பெண் லதாவின் படிப்பு 8 ஆம் வகுப்போடு பறிபோனாலும் பனியன் கம்பெனி வேலைக்குச் சென்று தாயையும், தங்கையையும் கவனித்து வந்தார். இந்தச் சூழ்நிலையில் லதாவின் தாய் மற்றும் உறவினர்கள் சேர்ந்து அவளுக்குத் திருமண ஏற்பாடு செய்தார்கள். “இன்னும் 2, 3 வருடம் கழித்துத் திருமணம் செய்து கொள்கிறேன் தற்போது வேண்டாம்” என்று லதா கூறியதைச் செவி மடுத்துக் கேட்காமல் சொந்தம் விட்டுப்போகக் கூடாது என்று கூறி 18 வயதே பூர்த்தியாகியிருந்த லதாவை லாரி டிரைவர் ஒருவருக்குத் திருமணம் செய்து வைத்தனர்.

லதாவின் கணவர் சுமாரான தோற்றப் பொலிவு கொண்டவர் என்பதால் இயல்பிலேயே சற்றே தாழ்வு மனப்பான்மை உடையவராக இருந்திருக்கிறார். லதா நன்றாக உடை உடுத்தி, பார்ப்பதற்கு மிக நன்றாக இருப்பார். திருமண வாழ்வில் ஒரு குழந்தையும் பிறந்தது. தனக்குக் கிடைக்காத கல்வியை தன் குழந்தைக்குக் கொடுப்பதற்குத் தன் கணவரின் வருமானம் மட்டும் போதாது என்று உணர்ந்த லதா மறுபடியும் வேலைக்குச் செல்ல முடிவெடுத்தார்.

ஏற்கனவே தாழ்வு மனப்பான்மையில் இருந்த லதாவின் கணவர் சந்தேகக்கணைகளால் லதாவை துளைத்தெடுத்தார். லதாவின் அன்றாட வாழ்வு தினமும் சண்டை, சச்சரவு, அடிதடியோடு நகர்கிறது. மிருகத்தனத்தின் உச்சமாக சைக்கிள் டயரில் மண்ணை நிரப்பி லதாவை அடித்ததில் வீட்டிலேயே கருக்கலைப்பும் நிகழ்ந்திருக்கிறது. ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உயிர் பிழைத்து மீண்டு வந்த லதா, கணவனுடன் வாழ முடியாது என்று கூறி, பிறந்த வீட்டிற்கு வந்தார்.

ஆனால் தன் பெண்ணுக்கு நடக்கும் கொடுமை களை விட போலிக் கவுரவம் தான் பெரிது என்று கூறியதோடு நில்லாமல் சொந்தக்காரர்கள் அனை வரும் நம்மை ஒதுக்கி வைத்து விடுவார்கள், சொந்தக் காரங்க தயவு இல்லாம உன் தங்கச்சிக்குக் கல்யாணம் பண்ண முடியாது அதனால் நீ வாழ்ந்தாலும், செத்தாலும் உன் கணவனோடு தான் இருக்க வேண்டும் என்று கூறி லதாவின் தாயார் அவளைக் கணவர் வீட்டுக்கு துரத்திவிடுகிறார்.

இத்தனை கொடுமைகளையும் நிகழ்த்திய அவள் கணவனோ அது பற்றிய குற்றவுணர்வே இல்லாமல் அனுதினமும் அவளைப் படுக்கை அறையிலும் பாடாய்ப் படுத்துகிறான். சம்மதிக்க மறுத்த ஒரு சமயத்தில் இவளைத் தூக்கிலிட்டுக் கொலை செய்யவும் முயன்றிருக்கிறான். உடலளவிலும், மனதளவிலும் சோர்ந்து போயிருக்கும் அவளுக்கு, கணவனைக் கண்டாலே எந்த நேரத்தில் எந்த மாதிரி நடந்து கொள்வானோ என்ற அச்சவுணர்வுடனேயே அன்றாட வாழ்வு கழிகிறது. போதாததற்கு அவள் வேலை செய்யும் இடத்தில் மேலதிகாரியோடு தொடர்பு வைத் திருப்பதாகக் கூறி அவன் பிரச்சினை செய்ததால் வீட்டிலும், வேலை செய்யும் இடத்திலும் நிம்மதி இல்லாமல் இருதலைக் கொள்ளி எறும்பு போல் தவிக்கிறாள் லதா.

அக்கம் பக்கம் இருப்பவர்கள் அதற்கு மேல் ஆம்பிளைன்னா அடிக்கத் தான் செய்வான், குடும்பம்னா அப்படி இப்படித் தான் இருக்கும், பொம்பளை தான் அனுசரிச்சு போகணும். சும்மா பேசுவானா நீ ஏதாவது பண்ணியிருப்ப? என்று வெறும் வாய்க்கு அவலாய் லதாவின் குடும்ப விவகாரம் கிடைத்தது. இந்த நாகரீகக் காலத்திலும் தனக்கு நடக்கும் கொடுமைகளை ஒரு பெண் திருமணத்தின் பெயரால் சகித்தே ஆக வேண்டும் என்று நிர்ப்பந்திக்கும் இந்த இந்துச் சமூக அமைப்பு முறையே ஒழிய வேண்டும்.

இது ஒன்றும் கற்பனையோ அல்லது ஏதோ ஒரு லதாவுக்கு நடந்த நிகழ்வோ இல்லை. பெரும் பான்மையான வீடுகளில் சகோதரர், பெற்றோர், காதலர், கணவர், புகுந்தவீட்டினர், சுற்றத்தார், மேலதிகாரி போன்றவர்களின் ஆணாதிக்கத்திற்கு எதிராக ஜாதியத்திற்கு எதிராகத் தன் கல்வி, வேலை, காதல், திருமணம், விருப்பம், சுயமரியாதை, தன்மானம் என அனைத்துக்காகவும் பெண்கள் போராடிக் கொண்டு இருக்கிறார்கள்..

தோழர் பெரியார் கூறுகிறார்.

> “கலியாணம் செய்து கொள்ளும் விசயத்தில் தம்பதிகளை விட மூன்றாவதானவர்களுக்கே சகல சுதந்திரமும் இருந்து வருகிறது. கலியாண விசயத்தில் மணமக்களின் வாழ்க்கைச் சம்பந்தம் முக்கியமானது இலட்சியமானது அல்லவென்றும், அதில் ஏதோ ஒரு தெய்வீக சம்பந்தம் இருக்கிறதென்றும், அதுவே தான் திருமண லட்சியமென்றும், ஆதலால் அப்பெண்ணும் மாப்பிள்ளையும் ஒருவர் குற்றங்களையும் அநீதி களையும் மற்றவர்கள் பொறுத்துக் கொள்ள வேண்டு மென்றும், அதிலும் சிறப்பாக மாப்பிள்ளை செய்யும் கொடுமையையும், அநீதியையும் பெண் பொறுத்துக் கொண்டு வாழ்நாள் முழுதும் மாப்பிள்ளைக்கும் பெண் அடிமையாய், பக்தியாய் இருக்க வேண்டும் என்றும் கூறப்பட்டிருக்கின்றது.” *(குடி அரசு 12.05.1935)*

கல்யாண விசயத்தில் முன்ன மாதிரி இல்லீங்க இப்ப ரொம்பவே மாறீட்டாங்க என்று சொல்வீர் களானால் உங்களுக்கு இந்தச் சம்பவத்தை நினைவு படுத்த முயல்கிறேன். சமீபத்தில் கர்நாடகாவைச் சேர்ந்த 26 வயது இளம்பெண் ஒருவர் உச்ச நீதிமன்றத்தில் இந்துத் திருமணச் சட்டம் பிரிவு 5 (ii) மற்றும் 7 இல் திருத்தம் கோரி ஒரு வழக்கு தொடுத்தார். 11.04.2018 அன்று விசாரணைக்கு வந்த அவ்வழக்கில் மனுதாரரான அப்பெண் தன்னுடைய விருப்பம் இல்லாமல் தன்னை கட்டாயப்படுத்தி, மிரட்டி, துன்புறுத்தி, வற்புறுத்தி திருமணம் செய்து வைத்து விட்டதாகவும், திருமணத்திற்கு முந்தைய இரவே தன்னைக் காப்பாற்றும்படி கூடுதல் காவல்துறை அதிகாரிக்கு ஒரு குறுஞ்செய்தி அனுப்பியதாகவும், திருமணத்திற்குப் பிறகு தில்லியில் வசித்த காரணத்தால் அங்குள்ள ஒரு தொண்டுநிறுவனத்தைத் தொடர்பு கொண்டு தன்னை மீட்கக் கோரி விண்ணப்பித்ததையும் கூறி - தன்னை இந்தத் திருமண பந்தத்திலிருந்து விலக்கக் கோரியிருந்தார்.

மேற்கொண்டு அவர் இந்துத் திருமணங்களில் பல சடங்கு, சம்பிரதாயங்கள் இருப்பினும் பெண்ணின் சம்மதம் கோரும் ஒரு நிகழ்வுகூட கிடையாது என்றும், இந்துத் திருமணச் சட்டத்தில் (1955) பெண்ணின் சம்மதத்தைக் கண்டிப்பாகக் கேட்கும் வகையில் திருத்தம் கொண்டு வரவேண்டும் என்றும் வலியுறுத்தி வழக்கு தொடுத்து இருந்தார்.

*இந்துத் திருமணச்சட்டத்தில் திருத்தம் கொண்டு வர முடியாது என்று கூறி உச்சநீதிமன்றம் அதைப் புறக்கணித்தது. அதே சமயம் திருமணத்தில் விலக்குக் கோரியது தொடர்பான வழக்கு வரும் மே 5 ந் தேதி ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.*

*பெண்களை இரண்டாந்தரக் குடிமக்களாக கட்டமைத்திருக்கும் இந்திய ஜாதி வர்ணாஸ்ரம முறையில் திருமணமுறை இறுகிக் கற்பாறையாய்க் கிடக்கிற நிலையில் இந்துத் திருமணச் சட்டத்தில் மாற்றம் கோருகிற வழக்கில் தீர்ப்பு எப்படி இருக்கும் என்பது நாம் அறிந்ததே. இந்துச் சட்ட மசோதாவை 1951 பிப்ரவரி 5 இல் அறிமுகப்படுத்திய தோழ அம்பேத்கர் அவர்களே "இந்துத் திருமணச் சட்டத் திருத்த மசோதாவில் 'திருமணமும் முறிவும்' என்ற பகுதி ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தால் தன் சட்ட அமைச்சர் பதவியை ராஜினாமா செய்திருக்க மாட்டார்.*

*தற்போதும் நடைமுறையில் இருப்பது மநுவின் ஆட்சி தான் என்பதற்கு ஏகப்பட்ட சம்பவங்களே சான்றாகச் சொல்லலாம். சமீபத்தில் இராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள பன்ஸ்வாரா மாவட்டத்தில் வசித்து வந்த பெண் அவர் குடும்பத்தினர் விருப்பம் இல்லாமல் காதல் திருமணம் செய்ததால் தம்பதியர் இருவரையும் நிர்வாணமாக்கி ஒருவர் தோளில் ஒருவரை அமர வைத்து ஊரே கூடி அவர்களை அடித்துத் துன்புறுத்திய சம்பவமும் ஒன்று. தாக்கியவர்களில் பெண்ணின் பெற்றோரும் அடங்குவர்.*

*தனிவுடைமைச் சமூக அமைப்பில் பெண் தனக்கு அடங்கியவளாக நடக்க வேண்டும். தன்னுடைய வாரிசை மட்டுமே சுமக்க வேண்டும். அக்குழந்தைக்கு மட்டுமே தன் சொத்து போகவேண்டும் என்பதற்கான ஆணின் ஏற்பாடே திருமண முறை உண்டாகக் காரணம். இத்தனை நூற்றாண்டுகள் கடந்தும் இந்த நிச்சயிக்கப்பட்ட திருமணம் எனும் அகமணமுறையில் மாற்றம் வராததற்குக் காரணம் ஜாதிய சமூக அமைப்பு முறை தான்.*

*திருமணங்களில் பெண்ணின் சம்மதமும் முக்கியம் என்ற நிலை உருவானால், இந்தச் சாதிய சமுதாயக் கட்டமைப்புக்கு ஒரு அதிர்ச்சி வைத்தியமாக அது அமையும் என்பதால்தான் பெண்ணின் உணர்வுகள் அடக்கப்படுகின்றன.*

*தோழர் அம்பேத்கர் தனது அமைச்சர் பதவியைவிட்டு விலகுவதற்கே முக்கியக் காரணம், பெண்விடுதலை, பெண்களின் மணவிலக்கு உரிமை, பெண்களின் சொத்துரிமைகளை இந்திய அரசாங்கம் மறுத்ததுதான் என்பதை நாம் அறிய வேண்டும். பெண்கள் தங்கள் வாழ்வைத் தாங்களே நிர்ணயிப்பதற்குச் சட்டரீதியான வாய்ப்புகளை உருவாக்கப் போராடினார் அம்பேத்கர். அதே வாய்ப்புகளை சமுதாயத்தில் உருவாக்கப் போராடினார் பெரியார். இதோ பெரியாரின் வரிகள்:*

"தாய்மார்களும் தங்கள் பெண்களுக்கு அவசரப் பட்டுத் திருமணம் செய்யக் கூடாது. நன்றாகப் படிக்க வைக்க வேண்டும். அவர்களே, தங்களின் கணவனைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும்படிச் செய்ய வேண்டும்"

*- விடுதலை - 28.05.1967*

"நம் பெண்கள் குறைந்த பட்சம் 20 வயது வரை படிக்க வைக்க வேண்டும். அவர்களுக்குக் கல்வியளிக்க வேண்டும். வாழ்விற்கு ஏற்ற வருவாயுள்ள தொழிலை அவர்களுக்குக் கற்பிக்க வேண்டும். அதன்பின் அவர்களாகத் தங்களுக்கேற்ற துணைவர்களை ஏற்றுக் கொள்ள அனுமதிக்க வேண்டும்."

– விடுதலை – 08.04.1971

"திருமணம் என்பது திருமணம் செய்து கொள்ள வேண்டிய ஓர் ஆணோ, ஒரு பெண்ணோ முடிவு செய்து கொள்ளவேண்டிய விஷயம். நம் நாட்டில் என்னவென்றால், திருமணம் என்பது பெற்றோர்கள் பார்த்துச் செய்யவேண்டிய சடங்காகி விட்டது. இது ஒழிந்தாக வேண்டும்."

*- விடுதலை - 23.07.1971*

*இவ்வாறு, திருமணம் என்பதில், முடிவெடுக்கும் உரிமையைப் பெண்களுக்கு வழங்கக் கோருகிறார் பெரியார். அதைத்தான் காட்டாறு ஏடும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறது.*

*பா.ம.க வின் நிறுவனர் இராமதாசு மற்றும் பல பிற்படுத்தப்பட்ட ஜாதிச்சங்கங்களின் தலைவர்கள் தொடர்ந்து ஒரு கோரிக்கையை முன்வைத்து வருகின்றனர். அதாவது, பெண்களின் திருமண வயதை அதிகரிக்க வேண்டும். அப்போது தான் நாடகக்காதல் திருமணங்கள் குறையும் என்பது அவர்களின் வாதம்.*

*நாமும் அதை வரவேற்கிறோம். ஆனால், கூடுதலாக ஒரு விதியைச் சேர்க்கச் சொல்கிறோம். பெண்ணின் திருமண வயதை 50 ஆகக்கூட உயர்த்துங்கள் வரவேற்கிறோம். எந்த வயதில் நடந்தாலும், பெண்ணின் சம்மதம் என்பதைக் கட்டாயமாக்க வேண்டும். அந்தச் சம்மதத்தைத் தெரிவிப்பதற்குக் காவல்துறையில் தீண்டாமை ஒழிப்புப் பிரிவுகள் இருப்பது போல ஒரு தனி அமைப்பு உருவாக்கப்பட வேண்டும். அந்த அமைப்பில் காவல்துறை மட்டுமல்லாமல், நீதித்துறை, முற்போக்கு அமைப்புகள், தொண்டு நிறுவனங்கள் என அனைவரின் பிரதிநிதிகளும் இருக்க வேண்டும்.*

*இந்த நிலை உருவானால் திருமணம் என்ற அமைப்பால், பெண்கள் முடக்கப்படுவது குறையும். தேவைப்பட்டால், திருமணம் செய்து கொள் வதையும் இது தடுக்காது. தோழர் பெரியாரின் கருத்துக்கள் இன்று கர்நாடகப் பெண் ஒருவரால் நீதிமன்றத்தில் விவாதிக்கப்படுவது வரவேற்கத் தக்கது. நாளைய உலகம் இதை வரவேற்றுப் பாராட்டும்.*

# நூல் அறிமுகம்:

இராவணன்

இந்தியத் துணைக் கண்டத்தில் அதிகார வர்க்கமாக இருக்கக் கூடிய பார்ப்பனர்கள் தங்கள் சுரண்டலுக்கு மட்டுமல்லாமல், தங்களைச் சமூகத்தில் உயர்ந்தவர்களாகவும் மற்றவர்களைத் தங்களுக்குக் கீழானவர்களாகவும் வைத்துக் கொள்ளவும் - தீண்டாமை, பாராமை, அண்டாமை என அனைத்து வகையான சமூகக் கொடுமைகளை உழைக்கும் மக்களாகிய பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் மீது திணித்து ஆதிக்கம் செய்யவும் - கடவுள்களையும், மதங்களையும், அதன் பெயரால் உருவாக்கப்பட்ட வேத, இதிகாச, புராணக்கதைகளையும் பயன்படுத்திக் கொண்டனர்.

இன்றைய நவீன அறிவியல் யுகத்திலும் இராமராஜ்ய ரதயாத்திரை என்ற பெயரில் தங்களின் சமூக மேலாண்மையை நிறுவுவதற்கும், ஆட்சி அதிகாரங்களைத் தக்க வைப்பதற்கும் இராமாயணத்தையும் இராமனையும் பயன்படுத்துகிறார்கள். அப்படிப்பட்ட இராமன் எப்படி ஆட்சி செய்தான் என்பதை விளக்குவதுதான் **"இது தான் ராம ராஜ்யம்"** என்ற நூலாகும். திராவிடர் இயக்கத் தமிழர் பேரவையின் பொதுச் செயலாளர் சுப. வீரபாண்டியன் அவர்கள் இந்நூலை எழுதியுள்ளார். இராமனுடைய ஆட்சியில் நடைபெற்ற இரண்டு சம்பவங்களை வைத்து இன்றைய இளைய தலைமுறையினருக்கு இராமன் யார்? என்ற கேள்வியைக் கேட்க வைக்கின்றார். இராமன் கடவுளா? மன்னனா? சராசரி மனிதனா? என கேள்விகள் இந்த நூலைப் படிப்பவர்களுக்குக் கண்டிப்பாக எழும்.




வால்மீகி இராமாயணம் என்னும் நூல் ஏழு காண்டங்களைக் கொண்டது. ஆனால் தமிழில் கம்பர் எழுதியது ஆறு காண்டங்களைக் கொண்ட கம்ப ராமாயணம் ஆகும். உத்திர காண்டமாகிய ஏழாவது காண்டத்தைத் தமிழில் கம்பர் எழுதவில்லை. இராமனின் இராஜ்யத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால், ஏழாவது காண்டமாகிய உத்திர காண்டத்தை எல்லோரும் படிக்க வேண்டும். உத்திர காண்டம் 111 சருக்கங்களைக் கொண்டது. இதில் இராமனின் ஆட்சி, மக்களின் வாழ்நிலை, சீதைக்கு நேர்ந்த நிலை என பல்வேறு கதைகள் உள்ளன. இராமன் 11000 ஆண்டுகள் ஆட்சி செய்ததாக உத்திர காண்டம் கூறுகிறது. அப்படி 11000 ஆண்டுகள் ஆட்சியின் நிலை பற்றித் தெரிந்து கொள்ள நமக்கு இந்தச் சிறுநூல் உதவுகிறது. இராம இராஜ்யத்தில் சமூகநீதியும் குடும்ப நீதியும் எப்படி இருந்தது என்று விளக்குகிறது இந்த நூல்.

## இராமஇராஜ்யத்தில் ஜாதி

இராம இராஜ்யத்தில் உத்திர காண்டத்தில் 73 முதல் 76 ஆம் சருக்கங்களில் இராமன் ஒரு குலத்திற்கு ஒரு நீதி சொல்லும் வருணாசிரம வெறியோடு ஆட்சி செய்தான் என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். இராமனுடைய ஆட்சியில் ஒரு பார்ப்பனச் சிறுவன் இறந்துவிட்டதாகவும் அதற்குக் காரணம் யாரோ ஒரு சூத்திரன் தவம் செய்வதுதான் என்றும் நாரதன் சொல்லியதைக் கேட்டு காடுகளில் தேடி அலைகிறான் இராமன். அப்படி அலையும் போது தென்திசையில் ஒருவர் தவம் செய்கிறார். அவருடன் நடந்த உரையாடலை நூலாசிரியர் ஆதாரத்துடன் விளக்குகிறார். இந் நூலின் பத்தாம் பக்கத்தில் 76 ஆம் சருக்கத்தின் தொடக்கத்திலேயே நடந்த உரையாடல்:

"நீ எந்த வருணத்தைச் சேர்ந்தவன்? நீ பிராம்ணனா? பராக்கிரமசாலியான ஷத்திரியனா? நான்காம் வருணத்தவனா?"

**சம்பூகன்:** "மஹாராஜா, நான் நான்காம் வர்ணத்தவன், சம்பூகன் என்று எனக்குப் பெயர். இந்தச் சரீரத்துடன் தேவபதியை அடைய விரும்புகிறேன். ஆகையால் பொய் சொல்ல மாட்டேன்" என்று அவர் சொல்கிறார். உடனே இராமன் தன் உறையிலிருந்து கத்தியை உருவி, சம்பூகன் தலையை வெட்டினான். தேவர்கள் அனைவரும் "நல்லது" "நல்லது" என்று ஆர்ப்பரித்து மகிழ்ந்தார்களாம்.

இராமராஜ்யத்தில் வருணாசிரம ஏற்றத் தாழ்வுகள் எவ்வாறு இருந்தன என்பதற்கு இதற்கு மேல் ஆதாரம் தேவையில்லை. தவம் செய்வதற்குச் சூத்திரனுக்கு அனுமதி இல்லை என்பதை இராம இராஜ்யத்தின் நாயகனே தெளிவாகச் சொல்லி விட்டார். சமூகத்தில் பார்ப்பனர் அல்லாதார் யாராக இருந்தாலும் கடவுளை அடைய நினைக்கக் கூடாது என்பதைத்தான் இராமாயணம் நமக்கு உணர்த்துகிறது.

தவம் செய்து இறைவனை அடைய நினைத்த சம்பூகன் கொல்லப்பட்டார். அளவுக்கு அதிகமான இறை பக்தியால் தன் உழைப்பில் கிடைத்த பணத்தை நன்கொடையாக வழங்கிய இளையராஜா அவமானப்படுத்தப்பட்டார். தன் தாய்மொழியான தமிழில் வழிபாடு செய்த ஓதுவார் ஆறுமுகசாமி அடித்து விரட்டப்பட்டார். அன்று முதல் இன்று வரை கடவுளை வணங்குவதற்குக்கூட நான்காம் வருணத்தாருக்கு அனுமதி இல்லை என்பது தான் வருணாசிரம கோட்பாடு.

## இராஜ்யத்தில் பெண்கள்

இராமனின் இராஜ்யத்தில் சமூக நீதி தான் சந்தி சிரிக்கிறது என்றால் அவரின் குடும் நீதி எப்படி உள்ளது என்று பார்ப்போம். இன்றைக்கும் கிராமத்தில் மனைவியைச் சந்தேகப்படுபவரை பெரியவர்கள் திட்டும் போது சந்தேகப் புத்தி இருந்தால் குடும்பம் உருப்படாது என்பார்கள். ஆனால் கடவுளான?? இராமனே தன் மனைவியைச் சந்தேகப்படுவதுதான் இராமராஜ்யத்தின் சிறப்பு?. இராமனைக் கடவுளாகவும், காவிய நாயகனாகவும் மாற்றுவதற்கு வால்மிகி இராமாயணத்தில் இல்லாத செய்திகளையெல்லாம் இட்டுக்கட்டி எழுதிய இனத் துரோகி கம்பனே இராமன் சந்தேகப்பட்டதை ஒத்துக் கொள்கிறார். கம்ப ராமாயணத்தின் 10157 வது பாடல்

"ஊண்திறன் உவந்தனை ஒழுக்கம் பாழ்பட
மாண்டிலை முறைதிறம்பு அரக்கன் மாநகர்
ஆண்டுறைந் தடங்கினை அச்சம் தீர்ந்தீவண்
மீண்டது ஏன்?"

"ஒழுக்கம் பாழ்பட மாண்டிலை" என்கிறான் இராமன். அதாவது ஒழுக்கம் கெட்ட பின்பும், ஏன் இன்னும் செத்துத் தொலையாமல் இருக்கிறாய்? என்றும் "ஊண்திறன் உவந்தனை" என்பதற்கு அவர்கள் கொடுத்த வகைவகையான உணவு வகைகளைத் தின்று மகிழ்ந்திருந்தவள் தானே நீ? என்று கேவலமாகக் கூறியதைக் கம்பனே பாடியுள்ளார். வால்மீகி ராமாயணத்தில் 43 வது சருக்கத்தில் பத்ரன் சீதையைப்பற்றி ஊரே இழிவாக பேசுவதாக இராமனிடம் கூறிகிறான். அதைக் கேட்டுச் சந்தேகப்படுவதாக உள்ளது.

இராமாயணத்தை எழுதிய வால்மீகியும், கம்பனும் இருவருமே இராமன் சந்தேகப் படுபவதையும் அதனால் சீதையைத் தீக்குளிக்க சொல்வதையும் பதிவு செய்துள்ளனர். ஆக இராமன் ஆணாதிக்க வெறியுடன் அடுத்தவர் பேச்சைக் கேட்டு மனைவியைத் தீக்குளிக்கச் சொல்லும் ஒரு காட்டுமிராண்டியாகவே இருந்துள்ளான். மேலே உள்ள ஆதாரங்கள் எவையும் தோழர் பெரியாரின் நூல்களிலோ, தோழர் அம்பேத்கரின் நூல்களிலோ, தோழர் அண்ணா அவர்களின் நூல்களிலோ எடுத்துக்காட்டப்பட்டதல்ல.

இந்த நூலின் ஆசிரியர் மிகத் தெளிவாக முன்னுரையிலே மொழி பெயர்த்தவர்களின் பட்டியலை வெளியிட்டுள்ளார். மனைவியைச் சந்தேகப்படும் ஒருவனின் பெயரில் ஒரு இராஜ்யம் அமைந்தால் பெண்களின் நிலை என்னவாகும் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டுதான் ஆஷிகா வண்புணர்வு ஆகும். ஒரு சிறுமியை வன்புணர்வு செய்த காட்டுமிராண்டிகளை ஆதரித்து ஊர்வலம் போகிறார்கள் என்றால் இவர்கள் சொல்லும் இராம இராஜ்யம் அமைந்து விட்டால் அய்யோ, நினைக்கவே நெஞ்சம் பதறுகிறது. ஜாதி வெறியும், மதவெறியும் பெண்ணடிமைத்தனமும், கோரத் தாண்டவமாடும்.

இந்தியா முழுக்க இராமராஜ்ய இரத யாத்திரை என்ற பெயரில் சென்ற மாதம் புறப்பட்டது. எதிர்ப்பே இல்லாமல் வந்த யாத்திரைக்குத் தமிழகம் கடுமையான எதிர்ப்பைக் காட்டியது. ஆனால் அரசியலில் இராமராஜ்யம் ஆகாது என்று சொல்லும் அனைத்துக் கட்சிகளும், முற்போக்கு இயக்கங்களும், இடதுசாரி சிந்தனை யாளர்களும் சமூகத்தில் நிலவும் இராம நம்பிக்கைக்கு எதிராக என்ன எதிர்வினை ஆற்றியுள்ளனர். இந்தியத் துணைக்கண்ட அளவில் தமிழகத்தில் உள்ள பெரியாரின் இயக்கங்களைத் தவிர மற்ற இடதுசாரி, மதச்சார்பின்மை பேசும் அமைப்புகள் இராமனுக்கும், இராமாயணத்துக்கும் எதிராக என்ன எதிர்வினை செய்தனர் அல்லது இனிமேல் செய்யப்ப போகின்றனர் என்பது கேள்விக்கூறி ஆகும்.

இராமனின் வருணாசிரம வெறியையும் பெண்ணடிமைத்தனச் சிந்தனையையும் கேள்விக் குட்படுத்தாவிட்டால் மக்களின் நம்பிக்கையைப் பயன்படுத்தி இராமாராஜ்யச் சிந்தனையை அவர்கள் உருவாக்க முயற்சிப்பார்கள். எனவே இராமாயணம் மட்டுமல்லாமல், நால்வருண வேறுபாட்டையும், ஜாதி இழிவையும், பெண்ணடிமைத்தனத்தையும் நிலைநிறுத்தும் வேத, புராண, இதிகாசங்களுக்கு எதிரான பரப்புரையை மேற்கொள்ள வேண்டும். ஆரிய வாழ்வியலுக்கு எதிரான வாழ்வியலை மேற்கொள்ள வேண்டும். மனித சமூகத்தில் வேறுபாடுகளைக் கற்பிக்கும் இராமாயணம் உள்பட வேத, புராண, இதிகாசங்களை அரசு தடை செய்ய வேண்டும். இன்றைக்கு இந்தியா அளவில் இராமனை வைத்து மக்களின் உணர்ச்சிகளைத் துண்டிவிட்டு ஒரு பாசிச ஆட்சியைத் தக்கவைக்க நடக்கும் சூழலில் "இதுதான் ராம ராஜ்யம்" சரியான தருணத்தில் வெளிவந்துள்ள நூலாகும். மதச்சார்பற்ற அனைவரின் கைகளிலும் இருக்க வேண்டிய ஒரு கருத்தாயுதம் ஆகும்.

**வெளியீடு: திராவிடர் இயக்கத் தமிழர் பேரவை**
**- விலை - ரூ 20**
**கிடைக்குமிடம்: கருஞ்சட்டைத் தமிழர் அலுவலகம்,**
**122/130, என்.டி.ஆர். தெரு, அரங்கராசபுரம்,**
**கோடம்பாக்கம், சென்னை- பேச-0444 2047162**

அதி அசுரன்



# இந்திய அரசியல் சட்டம்

## அம்பேத்கர் – பெரியார் பார்வைகள்

விடுதலை பெற்ற இந்தியாவில் நடந்து முதல் மக்கள் விடுதலைப் புரட்சி, ஜாதி ஒழிப்புப் புரட்சி என்றால் அது 1957 ஆம் ஆண்டு நடந்த இந்திய அரசியல் சட்ட எரிப்புப் போராட்டமே ஆகும். தோழர் பெரியாரின் ஆணைக்கிணங்க இலட்சக்கணக்கான தோழர்கள் அரசியல் சட்டத்தைக் கொளுத்தினர். ஆயிரக்கணக் கானோர் 3 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை பெற்றனர். 17 தோழர்கள் களப்பலி ஆயினர். இவ்வளவு வீரஞ்செறிந்த ஜாதி ஒழிப்புப் போராட்ட நினைவு நாள் கடந்த ஆண்டு மிக அதிகமாக நினைவுகூறப்பட்டது. சமூக வலைத்தளங்களில் முக்கிய இடத்தைப் பிடித்திருந்தது.

ஆனால், இதைப் பெரியார் - அம்பேத்கர் அமைப்புத் தோழர்களுக்கிடையேயான மோதலாக மாற்ற முகநூல் பக்கங்கள் வழியாகச் சிலர் முயன்றனர். டாக்டர் அம்பேத்கரே எழுதிய அரசியல் சட்டத்தை அதுவும் எரிப்பது தவறு. எரித்ததை எப்படி நினைவுநாளாகக் கொண்டாடலாம்? அரசியல் சட்டம் ஏற்கப்பட்ட நாளான - சட்ட தினமான நவம்பர் 26 ஆம் நாளைச் சட்ட எரிப்பு நாளாக எப்படிக் கூறலாம்? இது அம்பேத்கருக்கு எதிரானது என சமூக வலைத்தளங்களில் ஒரு கருத்துப் பரப்பப்பட்டது.

இந்திய அரசியல் அமைப்புச்சட்டத் தொகுப் புக்குழுத் தலைவரான டாக்டர் அம்பேத்கர் அவர்கள் அந்தச் சட்டத்தைச் சமர்ப்பித்து ஆற்றிய முன்னுரையிலேயே இதுபோன்ற குழப்பங்களுக்குத் தெளிவான பதிலைக் கொடுத்துள்ளார்.

### பெரியார் பார்வையில் இந்திய அரசியல் சட்டம்

இந்திய வரலாற்றில் பார்ப்பனர்கள், ‘பழக்க வழக்கங்கள்’ என்ற பெயரில் இந்து, ஜாதி ஆதிக்க, பார்ப்பன ஆதிக்கப் பண்பாட்டைத் திணிக்கத் திட்டம் போடத் தொடங்கிய காலத்திலேயே தோழர் பெரியார் அதைச் சரியாகக் கண்டு, கடுமையாக எதிர்த்தார். 03.07.1929 ஆம் நாள் சென்னை நேப்பியர் பார்க்கில் (தில்லைவனத்தில்) நடைபெற்ற சென்னை ஆதி திராவிட மகா ஜனங்களின் சுயமரியாதை மாநாட்டின் சொற் பொழிவில் பெரியார்,

“சாமியையும் சாத்திரத்தையும் தொட்டதற்கெல்லாம் முட்டுக்கட்டையாகக் கொண்டு வந்து போட்டுக் கொண்டிருந்தவர்கள் இப்போது அதை ஒரு விதத்தில் மறைத்துக் கொண்டு பழக்கம் வழக்கம் என்று சொல்ல ஆரம்பித்து விட்டார்கள். சாமி, மதம், சாத்திரம் என்கின்ற முட்டுக்கட்டைகளை இன்னமும் தைரியமாக உடைத்தெறியத் துணிந்து விட்டோமே யானால் பழக்க வழக்க முட்டுக்கட்டைகளை பஞ்சாய் பறக்கச் செய்துவிடலாம்.”

- குடி அரசு - 21.07.1929

என்று அரசியல் சட்டம் எழுதப்படுவதற்கு முன்பே, இந்தியா விடுதலை பெறுவதற்கு முன்பே ‘பழக்க வழக்கம்’ என்ற சொல்லின் ஆபத்தைக் கண்டு எச்சரிக்கிறார்.

கராச்சி என்ற நகரில் 1931 ஆம் ஆண்டு மார்ச் 27 முதல் 30 வரை நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட பிரஜா உரிமைத் தீர்மானம் பெரியாரின் எச்சரிக்கையை உறுதி செய்தது. அந்தத் தீர்மானம் பற்றி பெரியார்,

அரசியல் சட்டத்தில் ஜனங்களுடைய ஜீவாதாரமான உரிமை என்பது பற்றிய, விதிப்பிரிவுகளில் “இந்தியாவில் உள்ள சகல சமூகத்தாருக்கும், “அவர்களது கலைகள், சமூக நாகரீகங்கள், பாஷைகள், எழுத்துக்கள், தொழில்கள், பழக்க வழக்கங்கள், மதம், மத தர்மங்கள் ஆகியவைக் காப்பாற்றப்படும்” என்பதாக ஒரு உத்திரவாதம் அதாவது ஜாமீன் கொடுக்கப்படும் என்கின்ற நிபந்தனையும் சேர்க்கப்படும் என்பதாகத் தீர்மானித் திருக்கின்றார்கள்.

...இந்தியாவில் எத்தனை சமயத்தார், வகுப்பார் உண்டோ அத்தனை வகுப்பாருடைய உரிமை களையும் பொருத்த கலை ஆதாரங்கள், அதாவது வேதசாஸ்திர புராணங்கள், அவர்களது பாஷைகள், பாஷை எழுத்துக்கள், வகுப்பு கல்விகள், வகுப்பு தொழில்கள், அந்தந்த வகுப்பு பழக்க வழக்கத்தில் இருந்துவரும் நடவடிக்கைகள், ஒவ்வொரு வகுப்பாருடைய மதங்கள், அதாவது சமயம், உட்சமயம், புறச்சமயம், அந்தந்த மததர்மங்கள், அதாவது கோவில், கோவில்சொத்து, மடம், மடங்களின் சொத்துக்கள், மததர்மமான மற்ற காரியங்கள் செய்வதற்கு விடப்பட்டிருக்கும் தர்ம சொத்துக்கள் ஆகியவைகள் எல்லாம் காக்கப்படும் என்பதாக காங்கிரஸ் உறுதிகூறி இருப்பதோடு உத்திரவாதமுமேற்றுக் கொண்டிருக்கின்றது.

- தோழர் பெரியார், குடி அரசு - 19.07.1931

*1931 இல் மட்டுமல்ல; தொடர்ச்சியாக இந்திய அரசியல் சட்டம் உருவாக்கப்பட்ட காலம் வரை இந்தப் பழக்க வழக்கம் என்ற ஆபத்தை எதிர்த்துப் போராடிவந்துள்ளார். சில சான்றுகள்.*

1931 ஆம் வருஷத்திய காங்கரஸ் வேலைக் கமிட்டி யானது பிரஜா உரிமை திட்டம் என்பவற்றில் ஒன்றாக “இந்தியாவில் உள்ள ஒவ்வொரு வகுப்பார்கள் சம்பந்தப்பட்ட வரையில் அவரவர்களுடைய கலை, பாஷை, எழுத்து, கல்வி, தொழில், மத ஆச்சாரம், மத தர்மம் ஆகியவைகள் காப்பாற்றிக் கொடுக்கப்படும்” என்கின்ற தீர்மானத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறது.

- தோழர் பெரியார், குடி அரசு - 06.09.1936

“கராச்சி காங்கிரஸ் பிரஜா உரிமை திட்டம் என்பதில் ஜாதி, மதம், தொழில், ஜாதிமத உரிமை, பழய சாஸ்திரம், பழக்க வழக்கம், நடைமுறை ஆகியவை களை காப்பாற்றிக் கொடுப்பதாக உத்தரவாத மளிக்கப்பட்டிருக்கிறது. இதன் அருத்தம் என்ன என்று பாருங்கள். சமூக சம்மந்தமாக உள்ள குறைபாடுகளிலும், பல மக்களுக்கு இருந்துவரும் கொடுமைகளிலும், சில மக்கள் அனுபவித்து வரும் தந்திரமான மேன்மையிலும் சிறிதும் கை வைப்ப தில்லை என்பது தான் இன்றைய அரசியல் தத்துவ மாகும். இந்திய ஏழை மக்களுக்கும் பாமர மக்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் போதிய அறிவும் சொரணையும் இல்லாததால் இன்று அரசியல் வேறாகவும் சமூக இயல் வேறாகவும் இந்நாட்டில் இருந்து வர முடிகின்றது.

...புரட்சி உணர்ச்சி உள்ள இந்த காலத்தில் இன்னமும் அரசியல் திட்டத்தில் ஜாதியைக் காப்பாற்ற உரிமையைப் பிரத்தியேகமாய்க் குறித்து வைத்துக்கொண்டு அரசியல் மூலம் மக்களுக்கு சுதந்திரமும் விடுதலையும் சம்பாதித்துக் கொடுக்கிறோம் என்கின்ற ஒரு கூட்டம் இந்த நாட்டில் இருக்குமானால் - இருக்க அனுமதிக்கப் படுகிறார்கள் என்றால் இந்நாட்டு மக்கள் மனிதத் தன்மை இன்னதென்று உணராத நடைப் பிணங்கள் என்று ஏன் சொல்லக்கூடாது என்று கேட்கின்றேன்.”

-தோழர் பெரியார், குடி அரசு - 06.06.1937

*1946 ஆம் ஆண்டு டிசம்பர் 9 ஆம் நாள், அரசியல் நிர்ணய சபையில் தோழர் அம்பேத்கர் அவர்கள் உரையாற்றுவதற்கு முன்பு அவருக்கே, தாம், வரைவுக் குழுவுக்குத் தலைவராவோம் என்று தெரிந்திருக்காது. அதற்கு முன் காங்கிரஸ் அவரை விரும்பவில்லை. மேலே உள்ள பெரியாரின் கருத்துக்கள், அரசியல் நிர்ணய சபையில் தோழர் அம்பேத்கர் ஒரு உறுப்பினராக வருவார் என்று அரசியலில் இருந்த எவருமே கணிக்காத ஆண்டுகளில் 1929 லிருந்தே பேசியவை ஆகும்.*

## அரசியல் நிர்ணய சபையைக் கலைத்துவிடு

*அரசியல் நிர்ணயசபை என்ற அமைப்பு, இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கியது. இந்த அரசியல் நிர்ணயசபையின் பிரதிநிதிகள்தேர்ந்தெடுக்கப்பட்ட விதம் என்ன தெரியுமா? பெரும் நில உடைமையாளர்கள், வருமானவரி கட்டுவோர், பட்டதாரிகள் போன்ற 10 சதத்திற்கும் குறைவான வெகு சிலர் வாக்களித்து, அதில் வென்றவர்கள் தான் அரசியல் நிர்ணயசபை உறுப்பினர்கள். 21 வயது வந்த அனைவரும் வாக்களிக்கும் நிலை அன்று இல்லை. அதனால்தான் தோழர் அம்பேத்கரேகூட அந்தத் தேர்தலில் தோல்வியைத் தழுவினார். (வங்காளத்து ஷெட்யூல்ட் பிரிவினர் மற்றும் முஸ்லீம்லீக்கின் வாக்குகளால் அரசியல் நிர்ணய சபைக்குத் தேர்வானார்)*

*அம்பேத்கரே தோல்வியுறக் காரணமாக இருந்த இந்தத் தேர்தல் முறையையும், அதனால் தேர்வு பெற்ற சபையையும் பெரியார் கடுமையாக எதிர்த்தார். மக்களாட்சித் தத்துவத்திற்கு எதிரான இந்த அரசியல் நிர்ணயசபையைக் கலைக்க வேண்டும் என பெரியார் முழங்கினார்.*

“வயது வந்த அனைவருக்கும் ஓட்டுரிமை வழங்கி, அதன் அடிப்படையில் தேர்தல் நடைபெற வேண்டும். இனவாரியாக இந்தியாவைப் பிரித்து, இன உரிமை கொண்ட ஆட்சி முறையை வகுக்க வேண்டும். அரசியல் நிர்ணய சபையைக் கலைத்துவிட்டு, திராவிடம், பாகிஸ்தான், ஹிந்துஸ் தான், சீக்கிஸ்தான் ஆகிய பகுதிகள் தனித்தனியே தனக்கு வேண்டிய முறையில் அரசியல் அமைப்பு முறையை வகுத்துக்கொள்ளுமாறு விட்டுவிட வேண்டும்”

- தோழர் பெரியார், விடுதலை, 25.10.1946

*என்றார். அகில இந்தியா முழுவதும் மொத்தம் 393 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதில், தமிழ்நாட்டுக் காங்கிரசில் இருந்து சென்ற 7 பேரும்*

பார்ப்பனர்கள். அவர்களைப் பற்றிப் பெரியார் கூறுகிறார்,

“சட்ட மறுப்பு இயக்கத்திலே அரசியலார்க்குச் சட்டத்தைப் புரட்டிக் காண்பித்து உதவிசெய்த சர். அல்லாடி அய்யருக்கு அதே காங்கிரசின் பேரால் அரசியல் நிர்ணய சபையில் பதவி; பிற்போக்கான நிலையிலுள்ள சமஸ்தானாதிபதிகளுக்கு உற்ற துணையாயிருந்த சர்.கோபால்சாமி அய்யங் காருக்கும் காங்கிரஸ் பேரால் பதவி; காங்கிரஸ்காரர் அந்நிய நாட்டு சாமான்களைப் பகிஷ்காரம் செய்து சிறைவாசம் சென்ற சமயம், அந்நிய சாமான்களுக்கு ஏஜண்டாயிருந்த டி.டி.கிருஷ்ணமாச்சாரிக்கு இன்று பதவி”

– தோழர் பெரியார், குடிஅரசு– 26.04.1947

வெறும் அறிக்கைகள் என்ற அளவில் மட்டு மல்ல; கழகத்தின் மாநில மாநாட்டிலும் அரசியல் நிர்ணய சபையைக் கண்டித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. 1948 -ஆம் ஆண்டு மே மாதம் 8, 9-ஆம் தேதிகளில் தூத்துக்குடியில் நடைபெற்ற திராவிடர்கழக 18 வது மாநாட்டில்,

“இந்திய அரசியல் நிர்ணயசபை என்ற பெயரால் டில்லியில் கூடுகின்றசபை திராவிட மக்களின் பிரதிநிதித்துவம் பெற்றதல்லவென்றும், திராவிட மக்களை எவ்வகையிலும் கட்டுப்படுத்தக் கூடியன வல்லவென்றும் இம்மாநாடு தீர்மானிக்கிறது.”

“திராவிட நாட்டைத் தனிச்சுதந்தர நாடாக்குவதே திராவிட மக்களின் முடிவான அரசியல் கோரிக்கை என்பதை இம்மாநாடு வலியுறுத்துகிறது.”

என்று உரிமை முழக்கங்கள் வெடித்தன. 1931 கராச்சி காங்கிரசில் நிறைவேற்றப்பட்ட பிரஜா உரிமைத் தீர்மானம், பெரியாரின் தொடர்ச்சியான எதிர்ப்புகளை மீறி, இந்திய அரசியல் சட்டத்தில் இணைக்கப்பட்டது. அந்தப் பிரிவுகள் தான் 25 மற்றும் 26. இந்தப் பிரிவுகள் மட்டுமல்ல; 13, 19, 368, 372(1) ஆகியவையும் ஆகிய சட்டப் பிரிவுகளும் பார்ப்பன, ஜாதிய ஆதிக்கத்திற்குப் பாதுகாப்புக் கொடுக்கின்றன. அதனால் தான் தோழர் பெரியார் 1957 லேயே இந்திய அரசியல் சட்டத்தின் மேற்கண்ட பிரிவுகளை எரிக்கும் போராட்டத்தை நடத்தினார். அப்போரில் கடும் இழப்புகளைச் சந்தித்தபின்பும் கூட, அரசியல் சட்ட எதிர்ப்பைப் பெரியார் கைவிடவே இல்லை. 1960-லும் கடுமையான அறிக்கையைக் கொடுத்தார்.

“ஆறபேர் கொண்ட கமிட்டி அமைத்து அதில் டாக்டர் அம்பேத்கர் அவர்களையும், ஒரு (யாரென்று தெரியாத) முஸ்லீமையும் போட்டு 4 பார்ப்பனர்கள் கூடி, கல்லுப்பிள்ளையார் மாதிரி அமர்ந்து, அசைக்க முடியாத பார்ப்பன நலச்சட்டம் ஒன்றை – நவீன மனுதர்மத்தை – எழுதி அதற்கு இந்திய அரசியல் சட்டம் என்று பெயரிட்டுக் கொண்டது போல், இந்தியக்காரர்களையே போட்டு, பெயருக்கு ஒரு தமிழரைப் போட்டு அவரது ஆட்சேபக் குறிப்புக்கு எந்த மரியாதையும் கொடுக்காமல், இந்தி நுழைப்புக்குச் சரியானபடி அடிகோலி ஆணி அடித்து விட்டார்கள்.

– தோழர் பெரியார், விடுதலை 21.05.1960

1929-லிருந்து, தனது இறுதிக்காலம் வரை தொடர்ச்சியாக அரசியல் நிர்ணய சபையையும், அந்தச் சபை உருவாக்கிய அரசியல் அமைப்புச் சட்டத்தையும் கடுமையாக எதிர்த்துப் போராடி யவர் பெரியார். ஆனாலும், அம்பேத்கர் மீது பெரும் நம்பிக்கையைக் கொண்டிருந்தார். “வலிமையான இந்தியா தேவை” என்று அரசியல் நிர்ணய சபையிலேயே அம்பேத்கர் அழுத்தமாகப் பேசியதற்குப் பிறகும்கூட, பெரியார் அவரை ஆதரிக்கத் தயங்கவில்லை.

### அம்பேத்கரிடம் நம்பிக்கை – ஆதரவு

க்ரிப்ஸ் தூதுக்குழு வந்துசென்ற பிறகும்கூட, தாழ்த்தப்பட்டோருக்கு அளித்த உறுதிமொழிகள் நிறைவேற்றப்படவில்லை. காங்கிரசும், ஆங்கிலேயர் களும் கூட்டுச்சதி செய்து தாழ்த்தப்பட்டோர் கோரிக்கைகளைப் புறந்தள்ளி வந்தனர். அதற்கு எதிர்வினையாக, புனேயில் கூடிய தாழ்த்தப் பட்டோர் சம்மேளனம், ஆங்கிலேய அரசு மற்றும் காங்கிரசுக் கட்சிகள் வழங்கும் பட்டங்கள், பதவிகளைத் துறக்கும் போராட்டங்களை அறிவித்தது. அந்நிலையில் 1946-இல் காங்கிரஸ் அமைத்த இடைக்கால அரசில் தாழ்த்தப்பட்டோர் பிரதிநிதியாக பாபு ஜெகஜீவன்ராம் அவர்களுக்கு மத்திய அமைச்சர் பதவி அளிக்கப்பட்டது. அவரும் அதை ஏற்றார். இதைத் தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம் கடுமையாகக் கண்டித்தது.

அமைச்சரான பிறகு 27.12.1946-இல் பாபு ஜெக ஜீவன்ராம் சென்னைக்கு வருகை தந்தார். திராவிடர் கழகத்தினரும், தாழ்த்தப்பட்டோர் அமைப்புகளும் அவருக்குக் கருப்புக்கொடி காட்டும் போராட் டத்தை நடத்தினர். பாபு ஜெகஜீவன் ராமைப் போல, ஆங்கிலேய அரசின் ஆதரவு பெற்ற அனைத்து தாழ்த்தப்பட்ட தலைவர்களையும் திராவிடர் கழகமும், ஷெட்யூல்ட் பேரவையினரும் எதிர்த்து வந்தனர் ஆனால், அம்பேத்கரைத் தொடர்ச்சியாக ஆதரித்தே வந்தனர். அம்பேத்கருக்கு ஆதரவாக 27.08.1946 குடிஅரசு, 01.01.1947 விடுதலை ஏடுகளில் கட்டுரைகள் வெளியாயின. அரசியல் நிர்ணய அவையில், அம்பேத்கர் உறுப்பினராகி, பெரியாரின் கருத்துக்களுக்கு மாற்றாகப் பல கருத்துக்களைப் பேசிய பிறகும், பெரியார், அம்பேத்கருக்கு ஆதரவாக நின்றார்.

இந்துச் சட்டத் தொகுப்பு மசோதாவை நிறைவேற்ற இயலாமல் போன பிறகு 10.10.1951 இல் அம்பேத்கர், பதவி விலகுகிறார். பெரியார், உடனடியாக, அம்பேத்கரின் விலகலை ஆதரித்து,

“அந்த இரும்புத்திரைக் கும்பலை விட்டு வெளியேறிய டாக்டர் அம்பேத்கரைப் பாராட்டு கிறோம்” – விடுதலை 12.10.1951

என்று அறிக்கை வெளியிட்டார்.

இந்துச் சட்டத் தொகுப்பு மசோதாவுக்கு எதிராகப் பார்ப்பனர்களும், இந்து ஆதிக்க வாதி களும் எழுப்பிய கேள்விகளுக்கு அம்பேத்கர் ஆற்றிய பதில் உரையை, பெரியார், “ அம்பேத்கரின் சவுக்கடி” என்ற தலைப்பில் தனியாகத் தொகுத்து வெளியிட்டார்.

### அம்பேத்கர் எரிக்க விரும்பியதை எரித்த பெரியார்

09.12.1946-இல் **டாக்டர் இராஜேந்திரப் பிரசாத்**தைத் தலைவராகக் கொண்டு, இந்திய அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கும் பணி தொடங்கியது. **'சர்.பெனகல் நரசிங்கராவ்'** என்ற தெலுங்குப் பார்ப்பனர் இந்திய அரசியல் சட்டத்தின் முதல் வரைவைத் தயாரித்துப் பாராளு மன்றத்திலும் சமர்ப்பித்துவிட்டார். அவர் சமர்ப்பித்த அரசியல் சட்டத்தைச் செம்மைப்படுத்தும் பணிக்காக டாக்டர் அம்பேத்கர் தலைமையில் ஆறுபேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது. அதிலும் 4 பேர் பார்ப்பனர்கள்.

தோழர் பெரியார் 1931 லிருந்தே எதிர்த்துவந்த பார்ப்பன ஆதிக்கப் பிரிவுகள் பெனகல் நரசிங்கராவ் தயாரித்த அரசியல் சட்டத் தொகுப்பில் எவ்வித மாற்றங்களும் இன்றி அப்படியே இடம் பிடித்திருந்தன. அரசியல் சட்டத்தை உருவாக்கும் குழுவில் அம்பேத்கர் இடம்பெறவில்லை. அதைச் செழுமைப் படுத்தும் குழுவில்தான் தலைவராக இருந்தார். அதனால், இன்றுவரை நம்மை அடிமைப்படுத்திவரும் மேற்கண்ட பார்ப்பன ஆதிக்கப் பிரிவுகளை அவரால் மாற்ற இயலவில்லை. ஆனாலும், இந்துச்சட்டத் திருத்த மசோதா மூலமாக, அந்தப் பிரிவுகளில் மாற்றம் கொண்டுவரப் பெரிதும் போராடினார். அந்த வாய்ப்பும் இல்லாத போது பதவியையே தூக்கி எறிந்தார்.

குறிப்பாக, 1949- நவம்பர் 25-இல் அரசியல் சாசனத்தைச் சமர்ப்பித்த அம்பேத்கர், 1951 ஆம் ஆண்டே அவரே தொகுத்த அரசியல் சட்டத்தைக் கடுமையாக விமர்சித்து எழுதியுள்ளார். தமது பதவி விலகலுக்கான அறிவிப்பில் இந்த விமர்சனத்தை முக்கியமாக வைத்துள்ளார்.

> "தாழ்த்தப்பட்ட மக்களின் நிலையைப் பாதுகாப்ப தற்காக அரசியல் சாசனத்தில் செய்யப்பட்டிருந்த வழிவகை ஏற்பாடுகள் எனக்குத் திருப்தி அளிக்க வில்லை. ஆயினும் அரசாங்கம் அவற்றைப் பயனுறுதி யுடையதாக்க ஓரளவு முயற்சி செய்யும் என்ற நம்பிக்கையில் அவற்றை நான் ஏற்றுக் கொண்டேன். தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் நிலை இன்றைக்கு எப்படி இருக்கிறது? அதே பழைய கொடுங்கோன்மை, அதே பழைய கொடுமை, பாரபட்சம் காட்டும் அதே பழைய நிலை ஆகியவை முன்னர் இருந்ததைப் போலவே, இன்னமும் இருந்து வருகின்றன. சொல்லப்போனால், மிக மோசமான முறையில் நடைமுறையில் உள்ளன."
>
> - டாக்டர் அம்பேத்கர், 10.10.1951,
> 'நான் ஏன் பதவி விலகினேன்' நூல்

02.09.1953 இல் தோழர் அம்பேத்கர், அரசியல் சட்டம் பற்றிய ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கையில், **"ஒரு வாடகைக்குதிரை போலப் பணியாற்றினேன். என்னை என்ன செய்யச் சொன்னார்களோ, அதை என் விருப்பத்திற்கு மாறாகச் செய்தேன்...இந்தச் சட்டத்தை எரிப்பதற்கு நான் முதல் ஆளாக நிற்பேன்."** என்றார்.

25.11.1949 அன்று சட்டமுன்வைவு சமர்ப்பிக்கப் பட்ட நாளிலேயே வரைவுக்குழுவில் தோழர் அம்பேத்கருடன் பணியாற்றிய இஸ்லாமியர் தோழர் முகமது சாதுல்லாவும், **" எங்கள் மனச்சான்றுக்கு விரோதமான தன்மையில் பலவற்றை இந்த அரசமைப்புச் சட்டத்தில் சேர்க்க நேர்ந்து விட்டது"** என்று பதிவு செய்துள்ளார். (ஜனவரி 2016, சிந்தனையாளன் இதழ்)

### அரசியல் சட்டம் ஒரு தலைமுறைக்கு மட்டுமே

தனியார் உடைமைகளை அரசுடைமை யாக்குவது தொடர்பான விதிகளில் முரண்பட்டு கம்யூனிஸ்ட்டுகள் அரசியல் சட்டத்தை எதிர்த்தனர். எந்த நட்ட ஈடும் வழங்காமல், பொதுவுடைமை யாக்க வேண்டும் என்பது அவர்களது வாதம். அதற்குப் பதில் அளித்த தோழர் அம்பேத்கர்,

> **"இந்த அரசியல் சாசனத்தின் கோட்பாடுகள் எல்லாம் தற்காலத் தலைமுறையின் கருத்துக்களே. ஒருவேளை நான் மிகைப்படக் கூறவதாகக் கருதினால், அரசியல் நிர்ணய சபை உறுப்பினர் களின் கருத்துக்கள் அவை என்று கூறுகிறேன். அரசியல் சாசனத்தில் அவை சேர்க்கப்பட்டதற்கு, வரைவுக் குழுவின் மீது ஏன் குறைகூறப்பட வேண்டும் என்று கேட்கிறேன்?"** என்றார். (25.11.1946 உரை)

இந்தப் பதில் மிக முக்கியமானது. பெரியாரால் எரிக்கப்பட்ட சில சட்டப்பிரிவுகள் தோழர் அம்பேத்கர் விரும்பி உருவாக்கியவை அல்ல; அரசியல் நிர்ணயசபை உருவாக்கியவையே அவை என்பதை மேற்கண்ட பதிலின் வழியாகப் புரிந்துகொள்ள முடிகிறது.

மேலும், அதே பதில் உரையில், அமெரிக்க அரசியல் நிபுணரும், அமெரிக்க அரசியல் சாசனத்தை உருவாக்கியவருமான ஜெபர்சனின் கோட்பாட்டின் அடிப்படையில் தான் இந்திய அரசியல் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அதிலிருந்து இந்தச் சாசனம் விலகவில்லை என்கிறார் அம்பேத்கர். அரசியல் சாசனம் பற்றி ஜெபர்சன் கூறிய கூறுவதென்ன?

> **"ஒவ்வொரு தலைமுறையும், பெரும்பான்மையின் விருப்பப்படி தாங்கள் ஒருங்கிணைத்துக் கொண்டு வாழும் உரிமையுடைய ஒரு தனிப்பட்ட தேசிய இனமாகக் கருத வேண்டும். மற்ற நாட்டுக் குடிமக்களுடன் தங்களைப் பிணைத்துக் கொள்ளும் உரிமையில்லாதது போலவே அடுத்த தலைமுறை யையும் பிணைத்துக் கொள்ள முடியாது."**

இக்கருத்தைத் தோழர் அம்பேத்கர் இன்னும் விரிவாகத் தன் முன்னுரையில் விவரித்துள்ளார். இந்த அரசியல் சாசனம் ஒரு தலைமுறைக்குத்தான்

பொருந்தும். அடுத்த தலைமுறை வேண்டுமானால் திருத்திக்கொள்ளலாம். அதற்கு மிக எளிதான வரையறைகள் அரசியல் சாசனத்திலேயே உள்ளதாகக் கூறுகிறார்.

"அரசியல் சாசனத்தின் மீது அதிருப்தி கொண்டுள்ளவர்களுக்குத் தேவைப்படுவதெல்லாம் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைதான். அவர்களுக்கு ஆதரவாக வயது வந்தோர் ஓட்டுரிமை மூலம் தேர்ந்தேடுக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பெறமுடியவில்லை என்றால் அரசியல் சாசனத்தைப் பற்றிய அவர்களது அதிருப்தி பொதுமக்கள் பகிர்ந்துக் கொள்ளப்பட வில்லை என்றுதான் கூறவேண்டும்."

இதில் நமக்கு மாற்றுக்கருத்து உண்டு. பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்குப் பெரும்பான்மை பெற்றுத்தான் எதையும் மாற்ற முடியும் என்ற நிலை ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எளிதானது அல்ல. இந்தியாவில் ஒவ்வொரு மாநிலமும் ஒவ்வொரு தேசிய இனமாக, தனித்தனி நாடுகளாக இருந்தவை. ஒரு தேசிய இனத்து மக்களின் தேவையை, மற்ற அனைத்து தேசிய இன மக்களும் புரிந்து கொண்டால் தான் அரசியல் சட்டத் திருத்தம் என்பது சாத்தியமாகும். அல்லது ஒடுக்கப்பட்ட மக்களின் தேவைகளைப் புரிந்து கொண்ட ஒரு பாராளுமன்றத்தால் தான் சட்டத் திருத்தம் எளிதாக்கப்படும்.

தோழர் பெரியார் வகுப்புரிமைக்காகக் கொண்டுவந்த முதல் திருத்தம் செயலானதற்குக்கூட அன்றைய பாராளுமன்றத்தில், அம்பேத்கரே சட்ட அமைச்சராக இருந்தார் என்பது தான் முக்கியக் காரணம். ஆனால், எல்லாக்காலங்களிலும் அம்பேத்கர்களை நாம் சட்ட அமைச்சர்களாகப் பெற முடியாது. இதுபோன்ற சில பிரிவுகள் முற்றிலுமாக அழிக்கப்பட வேண்டும். மாற்றப்பட வேண்டும் என்பதைத் தான் தோழர் பெரியாரின் போராட்டம் வலியுறுத்தியது. இது எந்த வகையிலும் அம்பேத்கருக்கு எதிரான நிலை அல்ல. இந்துச் சட்டத் திருத்த மசோதா முயற்சியில் அம்பேத்கரே இதைப் புரிந்துகொண்டு தான் பதவி விலகினார் என்பதே அதற்குச் சான்று.

அரசியல் சாசனம் என்பது அம்பேத்கர் அவர்களால் முற்று முழுதாக நம்பப்பட்டதும் அல்ல; புனிதமானதோ, மாற்றக்கூடாததோ அல்ல. இவற்றைத் தோழர் அம்பேத்கரே மிகத் தெளிவாக விளக்கிவிட்டார். அம்பேத்கர் நினைத்ததை 1957 இல் செயலாக்கியவர் பெரியார். இதில் இருவரது கருத்துக்களுக்கும் எந்த முரண்பாடுகளும் இல்லை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்..

### அரசியல் சட்டத்தைத் திருத்த முயலும் பார்ப்பனர்கள்

இன்று ஆளும் பார்ப்பனர் மற்றும் பார்ப்பன அடிமைகளின் அரசு இந்திய அரசியல் சட்டத்தை மாற்ற முயற்சி செய்கிறது. அதன் நோக்கம் ஆபத்தானது. அதை அனுமதிக்க இயலாது. இந்திய அரசியல் சட்டம் உருவாக்கப்பட்ட நாள் வரை நம்மை ஆண்டு வந்தது மனுசாஸ்திரச் சட்டங்கள் தான். இந்து மத வேதப் பண்பாடுகளும், சாஸ்திர சம்பிரதாயங்களுமே இந்தியப் பகுதியில் சிவில், கிரிமினல் சட்டங்களாக நடைமுறையில் இருந்தன.

1857-இல் ஆங்கிலேயரான மெக்காலே கிரிமினல் சட்டங்களில் பல புரட்சிகளைச் செய்தார். அதன் பிறகு 1949 இல் டாக்டர் அம்பேத்கர் பலவிதங்களில் மனுவின் அஸ்திவாரத்தையே புரட்டிப்போட்டார். நாம் எதிர்பார்த்த மக்கள் விடுதலைக்கு அரசியல் சட்டம் பயன்படவில்லை என்பது உண்மைதான். அதே நேரம், பார்ப்பனர்கள் எதிர்பார்த்த இராமராஜ்யக் கனவையும் முழுமையாக்கப் பயன்படவில்லை.

**இப்போது ஆர்.எஸ்.எஸ். முழுமையான இராமராஜ்யத்தை உருவாக்கும் எண்ணத்தில் அரசியல் சட்டத்தைத் திருத்த முயற்சிக்கிறது. அரசியல் சட்டம் இன்னும் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். சீர்திருத்தம் செய்யப்பட வேண்டும். ஆனால், அதை முற்றிலுமாக அழித்து, மீண்டும் மனுவின் சட்டங்களைக் கொண்டுவரத் துடிக்கும் பார்ப்பன முயற்சிகளை அனுமதிக்க முடியாது.**

சான்றுகள்:
1. பெரியார்: ஆகஸ்ட் 15 - எஸ்.வி.ராஜதுரை

2. 'நான் ஏன் பதவி விலகினேன்' டாக்டர் அம்பேத்கரின் பாராளுமன்றப் பேருரைகள் -தொகுப்பு: டாக்டர் ஜெயராமன்

தொகுப்பு: கோவை விமல்பிரகாஷ்

# பார்ப்பன யோக்கியர்கள் & பனியாக்களின் ஊழல்கள்

"எனது கவலை இலட்சியம் யாதெனில் அன்னியன் என்றால் வெள்ளையன், பனியா, முல்தானி, மார்வாடி, காஷ்மீரி, குஜராத்தி ஆகிய இவர்கள் ஆதிக்கத்திலிருந்து அதாவது எந்தவித ஆரிய ஆதிக்கத்திலிருந்து விலகுவதும், பிரிட்டிஷ்காரன், அமெரிக்கன், ரஷ்யன், மேற்கண்ட மார்வாடி, பனியா, பார்ப்பனன், மேல் லோகத்தான் என்பதன் எவனும் நம்மைச் சுரண்டக்கூடாது என்பதும் ஆகும்."

-தோழர் பெரியார் 'குடிஅரசு' 19.10.1946

இந்தியச் சுதந்திரப் போரட்டத்தைப் பெரியார் துக்கநாள் என்று அறிவித்தார். அதைப் பார்ப்பன - பனியாக் கூட்டுக் கொள்ளை என்று அறிவித்தார். அன்று பெரியார் சொன்னது இன்று நடந்தேறி வருகிறது. ஊழல் என்றால் உடனே சில பிற்படுத்தப் பட்டோர்களும், தாழ்த்தப்பட்டவர்களுமே அதை செய்வதைப் போல, பார்ப்பன ஊடகங்கள் காட்டுகின்றன. ஆனால் ஊழல்களுக்கு முன்னோடியும், முதன்மையானவர்களும் பார்ப் பனர்களே.

மனுவாத ஊடகங்கள் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் செய்யும் சிறு ஊழலை ஊதிப் பெரிதாக்குகின்றன. ஆனால் பார்ப்பனர்கள் செய்யும் ஊழல்களைப் பற்றி வாயைத் திறப்பதேயில்லை. கடவுள் பெயர் தொடங்கி பன்னாட்டு நிறுவனங்கள் வரை தரகர்களாகவும் தரகு முதலாளிகளாகவும் பார்ப்பனர்கள் தான் உள்ளனர். அதற்குச் சில எடுத்துக்காட்டுகள் கீழே தரப்பட்டுள்ளன. கடந்த 2014 ஆம் ஆண்டு வரை பார்ப்பன - பனியாக்கள் நடத்திய பெரும் ஊழல்களின் பட்டியல் இது. தொகைகள் டாலர் மதிப்பில் உள்ளன.

**பார்ப்பனர்களால் நடத்தப்பட்ட ஊழல் மோசடிகள்:**

- பசில் இண்டெர்நேசனல் ஊழல் $530 மில்லியன்
- சஹாரா ஊழல் $ 9 பில்லியன்
- சாரதா ஊழல் $ 6 பில்லியன்
- காமன் வெல்த் ஊழல் $ 12 பில்லியன்
- டிடிசிஏ (DDCA) ஊழல் $ 14 மில்லியன்
- பிக்ஸியன் (pixion) மீடியா ஊழல் $ 100 மில்லியன்
- சூர்யா பார்மா (surya pharma) ஊழல் $ 100 மில்லியன்
- எலெக்ட்ரோதெம் இந்திய லிமிட்டெட் ஊழல் $ 332 மில்லியன்
- விஜய் மல்லய்யா ஊழல் $ 1.3 பில்லியன்
- வின்சம் டைமண்ட் ஊழல் $ 400 மில்லியன்
- சூர்யா விநாயக் நிறுவனம் ஊழல் $ 210 மில்லியன்
- நிலக்கரி ஊழல் $ 40 பில்லியன்
- ஜெயலலிதா ஊழல் $ 6 பில்லியன்
- இந்திரா காந்தி பன்னாட்டு விமான நிலைய ஊழல் $ 32 பில்லியன்
- டி.ஐ.ஏ.எல் (DIAL) மோசடி $ 25 பில்லியன்
- கிரானைட் ஊழல் $ 2.8 பில்லியன்
- மகாராஸ்டிரா நீர்பாசன ஊழல் $ 12 பில்லியன்
- கர்நாடகா WAKF வாரிய நில மோசடி $ 39 பில்லியன்
- மத்திய கலால் வரி மோசடி $ 3.82 பில்லியன்
- நெடுஞ்சாலை ஊழல் $ 13.97 மில்லியன்
- கிஃப்டு ஊழல் $ 100.000
- ஃப்ளையிங் கிளப் மோசடி $ 38 மில்லியன்
- அரவிந்த் ஜோஷி மற்றும் oD ஜோஷி $ 50 மில்லியன்
- ஃப்ரெஞ்சு போர் விமான ஊழல் $ 11 பில்லியன்
- கோவா சுரங்க ஊழல் $ 700 மில்லியன்
- ஊழியர் வைப்பு நிதி அமைப்பு (EPFO) ஊழல் $ 118 மில்லியன்
- ஐ.எஸ்.ஆர்.ஓ (ISRO) தேவாஸ் ஒப்பந்த்த ஊழல் $ 300 மில்லியன்
- வாக்கிற்கு பணம் (case for vote) $ 715,000 மில்லியன்
- காமன்வெல்த் விளையாட்டுகள் $ 15.5 பில்லியன்
- எல்.ஐ.சி வீட்டுக்கடன் வழங்குதலில் மோசடி $ 200 மில்லியன்
- பெலிகெரி துறைமுக ஊழல் $ 12 பில்லியன்
- UIDAI ஊழல் $ 1 பில்லியன்
- SCORPENE ஒப்பந்த ஊழல் $ 10 மில்லிய்ன்
- பாரக் ஏவுகணை ஊழல் $ 200 மில்லியன்
- COBBLER ஊழல் $ 214 மில்லியன்
- சுக் ராம் ஊழல் $ 5 மில்லியன்
- எஸ்.என்.சி.-லவாலின் கேரளா நீர்மின்வழி ஊழல் $ 10 மில்லியன்

- பன்சாலி ஊழல் $ 200 மில்லியன்
- ஊறுகாய் லஞ்சம் $ 20,000
- இந்தியன் வங்கி மோசடி $ 260 மில்லியன்
- போஃபர்ஸ் ஊழல் $ 400 மில்லியன்
- HWD கமிஷன் ஊழல் $ 4 மில்லியன்
- ஹரிதாஸ் முந்த்ரா ஊழல் $ 10 மில்லியன்
- தேஜா கடன் $ 5 மில்லியன்
- பி.ஹெச்.யு. ஊழல் $ 100,000
- ஜீப் ஊழல் $ 160,000

**பனியாக்களால் நடத்தப்பட்ட ஊழல் மோசடிகள் (தொகைகள் டாலர்களில்)**

- முர்லி இண்டஸ்ட்ரீஸ் ஊழல் $ 135 மில்லியன்
- கெம்ப்ராக் இண்டஸ்ட்ரீஸ் ஊழல் $ 140 மில்லியன்
- வருண் இண்டஸ்ட்ரீஸ் ஊழல் $ 183 மில்லியன்
- ஜூம் டெவலப்பர்கள் ஊழல் $ 275 மில்லியன்
- எப்போதும் விலையுயர்ந்த நகைகள் $ 200 மில்லியன்
- கார்ப்பரேட் இஸ்பாட் கலவைகள் $ 205 மில்லியன்
- வோடபோன் ஊழல் $ 1.9 பில்லியன்
- கினெடிக் நிதி மோசடி $ 34 மில்லியன்
- அல்ட்ரா மெகா பவர் ப்ராஜெக்ட்ஸ் ஊழல் $ 5 மில்லியன்
- குஜராத் PSU $3.39 பில்லியன் டாலர்
- பல்ஸ் மோசடி $ 200,000
- ஐபிஎல் கிரிக்கெட் $ 8 பில்லியன்
- கேதன் பரேக் $ 200 மில்லியன்
- கல்கத்தா பங்குச் சந்தை $ 2 மில்லியன்
- ஹர்ஷத் மேத்தா $ 800 மில்லியன்
- நாகர்வாலா $ 1 மில்லியன்
- குவோ எண்ணெய் ஊழல் $ 440,000

http://velivada.com/2017/07/09/list-scandals-india-brahmins-banias/

காலம் காலமாக ஊழலுக்கு எதிராகப் போராடும் கட்சிகளும், பொதுவுடைமைக்காகப் போராடும் கட்சிகளும், பன்னாட்டுக் கொள்ளையில் ஈடுபடும் பார்ப்பனர்களை மேல் மட்டத்திலிருந்து, அடிமட்டம் வரையில் சுரண்டல் நடத்தும் பார்ப்பனர்களைப் பற்றி பேசாதது ஏன்?

“முதலாளியாவது, நிலப்பிரபுவாவது அசையும் சொத்து, அசையாச் சொத்து என்பவைகளை வைத்துக்கொண்டு, முதல் வைத்துக்கொண்டு உயர்வுத் தன்மை படைத்தவனாக வாழ்கிறான். ஆனால், இந்தப் பார்ப்பானோ, கை முதலே இல்லாமல் கடவுளைக் காட்டி, மத்தைக் காட்டி, தர்ப்பைப் புல்லைக் காட்டி மேல்சாதிக்காரனாக உழைக்காமல் உண்டு கொழுப்பவனாக வாழ்கிறான்”

- தோழர் பெரியார் - விடுதலை 02.07.1952

## பார்ப்பனர்களின் கல்வித்துறை ஊழல், படுகொலைகள்

47 சாட்சிகள் மர்ம மரணம், படுகொலை. 2100 பேர் கைது, கோடிக்கணக்கில் ஊழல், 20 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ச்சியாக நடந்த ஊழல். கையும் களவுமாக சி.பி.அய் 1500 கிலோ தங்கம், 2000 கோடி ரூபாய் ஊழல் பணத்தைக் கைப்பற்றியது. இதையெல்லாம் செய்த யோக்கியர்கள் தான் இப்போது தமிழ்நாட்டுத் துணைவேந்தர்களைக் குற்றம்கூறியுள்ளார்கள்.

மத்தியப்பிரதேச மாநிலத்தில், மருத்துவக்கல்வி, தொழிற்கல்வி, கல்லூரி, பல்கலைக்கழகப் போராசிரியர் பணியிடங்கள் அனைத்தையும் நிர்வகிக்கும் அமைப்பு வியாபம். ("Vyapam" Vyavsayik Pariksha Mandal). பா.ஜ.க ஆட்சியில் நடந்த இந்த வியாபம் ஊழல் தொடர்பாக, சாட்சியம் அளித்தவர்கள் 47 பேர் தொடர்ச்சியாக மர்மமான முறையில் மரணம் அடைந்துள்ளனர். 2009 இல் தொடங்கிய வழக்கு விசாரணையில் இதுவரை சுமார் 2100 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாநில பா.ஜ.க முதல்வர் சிவராஜ்சிங் சவ்கான், ஆர்.எஸ்.எஸ். காரரான மாநில ஆளுநர் ராம் நரேஷ் யாதவ், மாநிலக் காவல் துறைத் தலைவர், பா.ஜ.க வின் மாநிலத் தலைவர் லட்சுமிகாந்த் சர்மா, ஆர்.எஸ்.எஸ் அகில இந்தியத் தலைவர் சுதர்சன் உட்பட ஏராளமான சர்மா, த்ரிவேதி, த்விவேதி, சதுர்வேதி, பாண்டேக்களாகிய பார்ப்பன யோக்கியர்கள் இந்த தொடர் ஊழலைத் திட்டமிட்டு நடத்தியுள்ளனர்.

அகில இந்திய மருத்துவக் கல்விக் கழகத்தின் தலைவராக இருந்த கேதான் தேசாய் தனது நேர்மையான நடவடிக்கைகளால் 1500 கிலோ தங்கமும், 2000 கோடி ரூபாய் ரொக்கப்பணமும் சம்பாதித்துள்ளார்.சி.பி.அய் கைது செய்தபோது கைப்பற்றப்பட்ட தொகை மட்டுமே இவை. ஒன்னரை டன் தங்கத்தையும், 2000 கோடி ரூபாய் பணத்தையும் கொள்ளையடித்த நேர்மைக்குப் பிரதமர் மோடி கேதான் தேசாய் என்ற பார்ப்பனருக்கு ஒரு பரிசளித்துள்ளார்.

ஆம். உலக மருத்துவக் கல்விக் கழகத் தலைவராக பதவி உயர்வு பெற்றுள்ளார். இந்த யோக்கியர்கள் தான் தமிழ்நாட்டில் துணை வேந்தர்கள் ஊழல் செய்கிறார்கள் என்று கூறிக் கல்வியைப் பார்ப்பன மயமாக்கி வருகின்றனர்.

Reference:
1.https://economictimes.indiatimes.com/topic/Vyapam-scam
2.https://www.indiatoday.in/…/vyapam-scam-cbi-chargesheets-86…

முனைவர் பூ.மணிமாறன்

# நிர்பயாக்கள் முதல் நிர்மலாவரை

பெண்கள் இன்றைய தினம் சமூகத்தின் மனித இனத்தில் சரிபாதியாக உள்ளனர். அவர்களைப் பற்றிய நமது பார்வையும், சிந்தனைகளும் என்னவாக உள்ளது என்பதைப்பற்றி நாம் மறுபரிசீலனை செய்யவும், மாற்றிக்கொள்ளவும் வேண்டிய தருணம் இது. அது என்ன எப்போதும் இல்லாததருணம். இப்போது வந்துவிட்டது. தற்போது பெண்கள் மீதான வன்முறை கண்கூடாகத் தினசரி எவ்வித மாற்றமின்றி நாம் காலைக்கடன்கள் கழிப்பது போன்ற நடந்து கொண்டே உள்ளன. ஊடகங்கள் போட்டி போட்டுக் கொண்டு, பெண்கள் மீதான வன்முறைகளை, நம் முன் போட்டு உடைக்கின்றன. மேலும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகமாகிவிட்டதாக சென்னை உயர்நீதிமன்றம் ஒருவழக்கில் கவலை தெரிவித்துள்ளது.

நிர்பயா தொடங்கி ஸ்வாதி, வினோதினி, அஸ்வினி என்ற பட்டியலில் நிர்மலாதேவி வரை பெண்கள் மீது ஆசிட்வீச்சு , படுகொலை, பாலியல் வல்லுறவு, பாலியல் தூண்டல் என வன்முறைச் சம்பவங்கள் நீண்டு கொண்டே போகின்றன. சமீபத்தில் வந்த ஒருகொடூரமான செய்தி. கல்லூரி மாணவி அஸ்வினியை அவர் பயிலக்கூடிய கல்லூரியின் வாசலில் வைத்தே கழுத்தை அறுத்துக் கொன்று விட்டார். அழகேசன் என்ற வாலிபர். இது தொடர்பான நிகழ்வுகளாக பேராசிரியர் நிர்மலாவின் நடவடிக்கைகள், மதிப்பிற்குரியஆளுநர் பன்வாரிலால் புரோகித் அவர்களின் கன்னத்தைத்தட்டி மகிழ்ந்தநிகழ்வு......... என பல பட்டியல்கள் நீண்டு கொண்டே போகின்றது.

நாம் அனைவருமே பெண்கள் மீதான வன்முறைகள் நிகழும் போதெல்லாம் ஆத்திரம் கொள்கிறோம். ஆயாசப்படுகிறோம். கண் கலங்குகிறோம். மிகக்காத்திரமாக நமது எதிர்ப்பைச் சமூக ஊடகங்களில் காண்பிக்கிறோம். சில இடங்களில் காவல்துறையும் நீதிமன்றங்களும் சட்டப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. பெண்களை வன்முறைகளில் இருந்து பாதுகாக்கக் கூடிய சட்டங்கள் பல வகைகளில் உள்ளன. அதன் நீட்சியாக சட்டங்களில் பல திருத்தங்களும் செய்யப்பட்டுள்ளன. விசாரணைக்கமிசன்கள், நீதிமன்ற நடவடிக்கைகள் போன்றவை பல நேரங்களில் கண்துடைப்பு நடவடிக்கைகளாகத் தேய்ந்து போகிறது.

பல இடங்களில் பொது மக்கள் மிகஆத்திரம் கொண்டு தன்னிலை மறந்து வன்முறையில் ஈடுபட்டவர்கள் மீது தாங்களே தண்டனை தரும் விதமாக தாக்குதல்களை மேற்கொண்ட நிகழ்வுகளும் உள்ளன. இத்தகைய சூழலில் நமது கேள்வி, மேற்கண்ட முறைமைகள் மூலமாக மட்டுமே இத்தகைய வன்முறைகளுக்குத் தீர்வாகி விடுமா? இதுபோன்ற விசயங்கள், நிகழ்வுகள் இத்துடன் முற்றுப் புள்ளியாகின்றதா என்றால் இல்லை என்பதே நிதர்சனமான உண்மை.

ஆம். இது தான் தீர்வு எனில் வன்முறைகள் மீண்டும் மீண்டும் அதிகரித்துக் கொண்டே போகிறது. அதுவும் வயதுக்கு வந்தபெண்கள் மீதான வன்முறைகள் பரிணாம வளர்ச்சி அடைந்து ஆசிபா போன்ற எட்டுவயதுப் பெண்குழந்தைவரை நீண்டுகொண்டே போகிறது. ஆசிபா என்ற பெண்குழந்தையைப் பாலியல் வல்லுறவுக்கு ஈடுபடுத்திய நபர்கள் பிஜேபி என்ற கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்கள் அனைவருமே ஆண்களாகவே உள்ளனர்.

இதுபோன்ற பாலியல் வன்முறைகள் பல்வேறு பரிமாணங்களில் பெண்கள்மீது நிகழ்த்தப்பட்டுக் கொண்டே உள்ளது. நேரடியாகப் பொதுமக்களும் வன்முறையில் ஈடுபடுபவர்களுக்குத் தண்டனை களை உணர்ச்சிவசப்பட்ட நிலையில் வழங்கிக் கொண்டே உள்ளனர். இவையே தீர்வாகி விடுமா? பெண்களின் மீதான வன்முறைகுறைந்து, பின்னர் நின்று விடுமா? என்றால் இல்லை என்ற ஒப்புதலையே நாம் தர வேண்டியுள்ளது.

இத்தகையசூழலில் தான் நாம் காத்திரமாகச் சிலவிசயங்களை முன்னெடுக்க வேண்டியுள்ளது. மேலும், பெண்களைப் பற்றி நாம் கொண்டுள்ள பிம்பக் கட்டமைப்புகளை, சிந்தனைகளை மாற்றிக் கொள்ள வேண்டிய தருணம்இது. பெண்களைப் பற்றிய சிந்தனைக்கட்டமைப்பு என்பது இங்கு என்னவாக உள்ளது. பெண் என்றால் இன்ன வேலைதான் செய்வாள். ஆண் என்றால் இன்ன வேலைதான் செய்வாள்.

உதாரணத்திற்கு நான்கு பணிகளை நாம் எடுத்துக் கொள்வோம். காவல்துறை அதிகாரி, மருத்துவர், செவிலியர், வீட்டு வேல செய்பவர் என எடுத்துக்கொண்டால், நம் கண்முன் வருவதுதல் இரண்டு பதவிகளான காவல்துறை அதிகாரி, மருத்துவர் ஆகியோர் ஆண் பாத்திரங்களையும், செவிலியர், வீட்டு வேலை செய்பவர் என்ற பாத்திரங்கள் பெண்களாகவும் மட்டுமே புனைவு செய்யப்பட்டுள்ளது நமது சிந்தனை.

இத்தகைய கீழான சிந்தனையை மாற்ற வேண்டிய தருணம்இது. பெண்கள் வீட்டு வேலை செய்ய மட்டுமே லாயக்கானவர்கள் என்ற ஆணாதிக்கச் சிந்தனையின் விளைவே இத்தகையபெண்கள் மீதான வன்முறைகளாகும். பெண்கள் வீட்டு வேலை செய்பவள். ஆணுக்கு சுகமூட்டுபவள் போன்ற சிந்தனைகள் ஆபத்தானதாகும். இத்தகைய சிந்தனைகள் நமது மனங்களில் கெட்டிப்பட்டு போய்விட்ட நிலையில் தான், அதன் செயல்பாட்டு விளைவாக ஆசிபா எனும் சிறுமியை வன்புணர்வு செய்வதும், பேரா. நிர்மலாதேவி ஆண்களின் இச்சைக்கு பெண்களை இணங்கச்செய்வதும், அழகேசன்கள் அஸ்வினிகளைக்கழுத்தறுத்துக்கொல்வதும்நிகழ்கின்றன.

செயல்பாட்டினைக் கண்டு துணுக்குறும் நாம் அதன் மூலமான சிந்தனையை, கருத்தியலை அடையாளம் காண்பதில்லை. அடையாளம் கண்டால்தான் உணர்ந்து நீக்க முடியும். அதற்குரிய வழிவகைகளைச் செய்ய முடியும். பெண் எவ்வளவு பெரிய அதிகாரியாக இருந்தாலும், தனக்குக் கீழானவள் பெண் என்ற எண்ணத்தின் விளைவுதான் வன்முறையாக உருவெடுக்கிறது. அத்தகைய வன்முறைகள் வன்புணர்வாக, வல்லுறவாக, சீண்டல்களாக, பெண்களை உளவியல் ரீதியாகக் காயப்படுத்துவதாக, பரிணாமம் பெறுகின்றன.

விளையாட்டுக்கள்கூட பெண்களுக்கு வேறாகவும், ஆண்களுக்கு வேறாகவும், உடைகள் வெவ்வேறாகவும், பணிகள் வெவ்வேறாகவும், பழக்கவழக்கங்கள் வெவ்வேறாகவும், உழைப்பு வெவ்வேறாகவும் இச்சமூக அமைப்பில் கட்டமைக்கப்பட்டுள்ளன. இந்தநிலை மாற வேண்டும். பெண்களை வெறுமனே போகப் பொருளாக மட்டுமே காண்பிப்பதாகவும், ஆண்களை ஏமாற்றுபவர்கள் பெண்கள் என்பதாகவும் சித்தரித்துக் காட்டுவதை ஊடகங்கள் நிறுத்த வேண்டும்.

ஆண் / பெண்ஆக இரண்டு பாலினத்திலும் நிருபர்கள் உள்ளனர். அனைவருமே வினா தொடுக்கின்றனர். மதிப்பிற்குரிய ஆளுநர் பன்வாரிலால் புரோகித், ஏன் ஆண் நிருபரைக் கன்னத்தில் செல்லமாகத் தட்டிப் பாராட்டவில்லை? பெண் என்பதால் மட்டும், அதுவும் இளம் பெண், குறைந்த வயதுப் பெண் என்பதால் அவரைத் தொட்டுப் பாராட்டும் ஆணாதிக்க மனோபாவம் வெளிப்படுகிறது. வயது முதிர்ந்தபெண்நிருபரைக் கன்னத்தில் தட்டிப் பாராட்டுவாரா புரோகித்? பெண்ணை போகப் பொருளாக, ஒருபொருளாக மட்டுமே காணும் மனோபாவமே அவரை அதை செய்யத் தூண்டியுள்ளது.

இதையொட்டியே தங்களின் விருப்பத்திற்கு மாறாக, தான் விரும்பும் ஆணைக் காதலித்தால், திருமணம்செய்துகொண்டால், அந்தப் பெண்ணைத் தம் மகள், சகோதரி என்றுகூடப் பார்க்காமல் ஆணவக்கொலை செய்யும் ஆணாதிக்ககருத்தியல் கொண்ட பெற்றோர்களையும் நாம் பார்க்க முடிகிறது. இந்தஆணாதிக்க மனோபாவமே, தன்னைக் காதலிக்கும் பெண் வேறொருவரை மணம் செய்துகொண்டாலும், தன் காதலை ஏற்காதபெண், வேறு யாருக்கும் கிடைக்கக்கூடாது என்று கொலை செய்கிற, ஆண்களைப் பார்க்கிறோம்.

இந்தஇரண்டு மனோபாவமும் ஒன்றுதான். பெண்கள் தங்களின் உடல்மீதான உரிமை மறுப்பு தான் இத்தகைய மேற்கண்ட இரண்டு செயற்பாடுகளும் ஆகும். மேலும், நாம் சமூக நீதி மூலமாகப் பெண்களை, பணியில் அமர்த்திவிட்டோம். ஆனால் அவர்கள் உரிய சமத்துவத்தை இன்னும் எய்தாமலேயே உள்ளனர். சமூகநீதி மூலம் பெற்றகல்வியை, பணியை அனுபவிக்காமல் ஆணாதிக்கக் கருத்தியல் மூலமாக அடிவாங்கிக் கொண்டே உள்ளனர்பெண்கள். உயரதிகாரியாக பி.வ. / தா.வ. / மி.பி.வ. இருந்தாலும், பியூன் பார்ப்பனராக இருந்தால் அவருக்கு மட்டுமே சமூக மதிப்பு உண்டு. உயரதிகாரிக்கு இருக்காது. அதுபோன்ற பெண்கள் தங்களுக்கு உரிய சமூகநீதி மூலமாகப் பெற்ற பலன்களை அனுபவிக்கவிடாமல் ஆணாதிக்கத்திற்குப் பலியாகிக் கொண்டே உள்ளனர். அத்தகையவர்களைத் தான் பேரா.நிர்மலாதேவி மூலமான பெண்கள், மதிப்பிற்குரிய பன்வாரிலால் புரோகித்திடம் கன்னடி வாங்கிய பெண்கள், ஆசிபா போன்ற சிறுமிகள், நிர்பயாக்கள் ஸ்வாதிகள் வினோதினிகள் ஸ்வினிகள் எனக் கூறிக்கொண்டே போகலாம்.

இதற்கு மாற்றுகளை, நாம் சட்டங்கள், மூலமாகத் தேடுவதைவிடுத்து, சிந்தனை மாற்றங்கள் மூலமாகவே நடைமுறைப்படுத்து முடியும். அதுவும் இப்போதுள்ள இளம்தலைமுறை வாயிலாகவே இதனை நாம் செயல்படுத்த வேண்டும். பாலினம் மற்றும் பால் குறித்தும், பாலின சமத்துவம்குறித்தும், மாணாக்கரின் வயது, வகுப்புவாரியாகப் பயிற்றுவிக்க வேண்டும். கல்விக்கூடங்களில் இருந்துதான் தீர்வை தொடங்க வேண்டும். இத்தகைய சிந்தனைக்கல்வியைப பள்ளிகள் மட்டும் கற்றுக்கொடுத்தால் போதாது. நமது கெட்டித் தட்டிப்போன குடும்ப அமைப்பும் சொல்லித்தர வேண்டும்.

எனவே குழந்தை முதற்கொண்டு குடும்பம் முதற்கொண்டு இத்தகைய சிந்தனை மாற்றுக் கல்வியைத் தொடங்க வேண்டும். இத்தகையபாலியல் சமத்துவக்கல்விமூலமாக மட்டுமே நிரந்தரத் தீர்வை நோக்கி நகர முடியும். அதன் மூலமான மனோபாவ மாற்றம் நடத்தை மாற்றமாகப் பரிணமிக்கும். இதுவன்றி மற்றமுயற்சிகள் அனைத்தும் விழலுக்குஇரைத்த நீராகவே முடியும். இத்தகைய அடிப்படை மாற்றங்களை மேற்கொள்வதன்மூலமாகத்தான் அஸ்வினிகளையும், ஆசிபாக்களைகாக்க முடியும்.

யாழ்மொழி

# B.Tech முடித்தவுடன் ISRO வில் விஞ்ஞானியாக

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான ISRO-வில், விஞ்ஞானி களைப் பணி அமர்த்துவதற் கெனத் தனிவாரியம் உள்ளது. அது மத்திய அரசின் ICRB ( ISRO Centralized Recruitment Board) என்பதாகும். Electronics, Computer science, Civil, Mechanical போன்ற துறைகளில் 65 % மேல் பெற்று B.E./ B.Tech முடித்த அனைவரும் இப்பணிக்கு விண்ணப்பிக்கலாம். ஆண்டுதோறும் எந்தெந்தப் பாடப்பிரிவுகளில் காலி யிடங்கள் உள்ளதோ, அதற்கேற்ப செய்தித்தாள் களிலும், ISRO-வின் இணையதளத்திலும் விளம் பரங்கள் வெளியிடப்படும். விண்ணப்பித்த அனை வருக்கும் நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் எழுத்துத் தேர்வு நடைபெறும்.

அத்தேர்வின் வினாத்தாளில் 80 கேள்விகள் கேட்கப்படும். ஒவ்வொரு சரியான விடைக்கும் மூன்று மதிப்பெண்களென மொத்தம் 240 மதிப்பெண்கள். **ஒவ்வொரு தவறான வினாவிற்கும் ஒரு மதிப்பெண் குறைக்கப்படும்.** தேர்வின் கால அளவு 90 நிமிடங்களாகும். அவரவர் துறைகளுக் கேற்ப, பொறியியல் படிப்பிலுள்ள அனைத்துப் பாடங்களிலிருந்தும் வினாக்கள் கேட்கப்படும். இதில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு நேர்காணல் நடைபெறும். நேர்காணலிலும் அவரவர் துறை களுக்கேற்ப டெக்னிக்கல் கேள்விகள் கேட்கப்படும். நேர்காணலில் தேர்ச்சி அடைந்தவர்கள் நாடு முழுவதுமுள்ள ஏதேனுமொரு ISRO மையத்தில் பணி அமர்த்தப்படுவர். ஆனால் இந்த எழுத்துத் தேர்வு மற்றும் நேர்காணல் எதுவுமின்றி B.Tech முடித்தவுடன் நேரடியாக ISRO-வில் விஞ்ஞானி யாகப் பணிபுரிய ஓர் வழியுண்டு. அந்த நேரடி வாய்ப்பைப் பெற IIST இல் B.Tech பட்டப்படிப்பை முடித்திருக்க வேண்டும்.

**Indian Institute of Space Science and Technology (IIST):**

இந்திய விண்வெளி அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனமான IIST திருவனந்த புரத்தில் அமைந்துள்ளது. இது மத்திய அரசின் விண்வெளித் துறையால் நிர்வகிக்கப்படுகிறது. விண்வெளித் துறை சார்ந்த இளங்கலை, முதுகலை மற்றும் முனைவர் பட்டப்படிப்புகளுக்கென (Aerospace Engineering, Avionics) பிரத்யேகமாக அமைக்கப்பட்ட முதல் நிறுவனம் IIST தான். 2007ஆம் ஆண்டில், இஸ்ரோவின் அப்போதைய தலைவரான டாக்டர் ஜி.மாதவன் நாயர் திறந்து வைத்தார். IIST யின் முதல் துணைவேந்தர் முன்னாள் குடியரசுத் தலைவரும், விஞ்ஞானியுமாகிய அப்துல் கலாம் அவர்கள். ISRO-வின் தலைவராக இருப்ப வர்கள் அல்லது அங்கு பணிபுரியும் அனுபவமிக்க விஞ்ஞானிகள் தான் IIST யின் துணைவேந்தராகத் தேர்வு செய்யப்படுவர்.



இளங்கலைப் படிப்பின் போது, ஒவ்வொரு செமஸ்டரிலும் சிறந்த மதிப்பெண்கள் வாங்கும் மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம் IIST இல் உள்ளது. இதன் மூலம் இளங்கலைக் கல்வியை முற்றிலும் இலவசமாகப் படிக்கலாம். இந்த உதவித் தொகையை இந்திய விண்வெளித் துறை வழங்குகிறது. மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் எழுதும் ஆய்வுக் கட்டுரைகளை ஆய்விதழ்களில் வெளியிடுவதற்கு உண்டாகும் செலவுகளை IIST முழுவதுமாக ஏற்றுக்கொள்கிறது. ISRO வுடன் இணைந்து பல ப்ராஜெக்ட்களை மாணவர்களும், பேராசிரியர்களும் மேற்கொள்ளலாம். இவை மட்டுமன்றி, கலை இலக்கிய செயல்பாடுகளிலும் மாணவர்கள் ஈடுபடும் வண்ணம் பல நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

இது போன்ற பல சிறப்பம்சங்களைக் கொண்ட இந்நுறுவனத்தில், B.Tech படிப்பில் 7.5 க்கு மேல் CGPA பெற்றுத் தேர்ச்சி அடையும் மாணவர் களுக்கு நேரடியாக ISRO வில் விஞ்ஞானிகளாகப் பணி புரிய வாய்ப்பளிக்கப்படுகிறது என்பது தான் கூடுதல் சிறப்பாகும். கல்லூரிகளில் படித்து முடித்தவுடன் மத்திய அரசின் உயரிய ஆராய்ச்சி நிறுவனத்தில் விஞ்ஞானியாகப் (Group-A Gazetted Officer post) பணி கிடைப்பது IIST இல் பயிலும் மாணவர்களுக்கு மட்டுமே கிடைக்கும் ஓர் அரிய வாய்ப்பாகும். இப்பணியின் சம்பள விகிதம் ரூ.56,100-1,77,000 ஆகும்.

**IIST இல் சேரும் முறை:**

IIST யில் B.Tech படிக்க, JEE Advanced தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அந்தத் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் தான் இடங்கள் நிரப்பப்படுகின்றன. முந்தைய இதழ்களில் குறிப்பிட்டிருந்தது போல், JEE Main தேர்வை எழுதித் தேர்ச்சி பெறுபவர்கள் மட்டுமே JEE Advanced தேர்வை எழுத முடியும். IIST இன் இணையதளத்தில் JEE Advanced மதிப்பெண்களையும், சுயவிவரங் களையும் பதிவு செய்து விண்ணப்பிக்க வேண்டும். ஒவ்வொரு ஆண்டும், மே மாதத்தில் இணைய தளத்தில் குறிப்பிடப்படும் தேதியிலிருந்து மாண வர்கள் விண்ணப்பிக்கலாம். B.Tech சேர்க்கைக்கான கலந்தாய்வு ஜூன் இறுதியில் நடைபெறும். எனவே, ISRO வில் விஞ்ஞானியாக வேண்டும் என்ற கன வோடு இருப்பவர்கள் IIST இல் B.Tech படிக்க முயற்சிக்கலாம்.





ஆண்டுக்கட்டணம்

250

ரூபாய்

தொடர்புக்கு:
97868 89325
77084 58086

kaattaaru2014@gmail.com

# காட்டாறு

## இதழ் விளம்பரக் கட்டணங்கள்

அட்டை பின்பக்கம் பலவண்ணம்: ரூ.5000
முன் அட்டை உள்பக்கம் பல வண்ணம்: ரூ.2500
பின் அட்டை உள்பக்கம் பலவண்ணம்: ரூ.2500
கருப்பு வெள்ளை உள்பக்கம் - முழுப் பக்கம்: ரூ. 1000
கருப்பு வெள்ளை உள்பக்கம் - அரைப் பக்கம்: ரூ. 500



Owner and Publisher by : S.Vijayaragavan # 103/104, Nethaji Road, M.C.Complex, Pollachi. 642 001 Consulting Editor: C.Ragavan Kaattaaru2014@gmail.com